சக்தி



சுதந்திரத்தின் சின்னம்



இந்திய

சுதந்திரக் கொடி

No. 1506 அசோகா ASOKA

சுதந்திர குணமுள்ளது

அசோகா

சுகந்த பாக்குத்தூள்

**1930 முதல் குணத்திலும்
மணத்திலும் தனித்து
நிற்பது**

தயாரிப்பவர்:

எம். கே. கிருஷ்ண செட்டி

'அசோகா பாக்டரி' :: கோயமுத்தூர்

SRB
வாலாயமான பழைய கடை !
ஆகாய வீதியில் அந்திவானத்தின் அழகிய வர்ணங்களை அப்படியே
பிடித்து அடைத்தாற்போல் பல நூதன பட்டு ஜவுளி தினுசுகள்
தற்சமயம் ஏராளமாய் கைவசம் குவிந்துள்ளன
நேரில் வந்து பாருங்கள் !
S. R. B. குப்புசாமி அய்யர் & சன்
(பழைய விலாசம்) S. R. பாலுசாமி அய்யர் & சன்ஸ்
No. 117, நயினியப்ப நாய்க்கன் தெருவு, P. T. மதருஸ்
No. 230, கீழமாரெட் வீதி, மதுரை

அவர்கள் ஆரோக்கியமாகவும் பலசாலிகளாகவும் வளரச் செய்யுங்கள்

இந்தியாவின் உணவுகள் முக்கியமாக தென்னிந்திய உணவுகள் போஷிப்பு சத்து குறைந்ததாக இருக்கிற தென்றும் அவைகளை குழந்தைகளுக்கு அளிப்பதால், குழந்தைகள் புஷ்டியுடன் வளர்வதில்லை என்றும் உணவு சத்துப் பொருள்களை ஆராய்ந்தறிந்த அறிஞர்கள் கூறுகிறார்கள்.

மெக்லெக் குழந்தைகளின் உணவு, மெக்லெக் சிரப்கால்விடல் ஆகிய இரண்டும் உணவுகளில் இருக்கும் குறைகளை சரிசெய்யும் உயர்ந்த சத்து நிறைந்தவைகள். மெக்லெக் குழந்தைகளின் உணவில் போஷணையளிக்கும் புரோடீனும், குளுகோஸ் காய்கறிச் சத்துப்பொருளும் இருக்கின்றன. மெக்லெக் சிரப் கால்விடல் என்பது. முக்யமான விடமின்களும். உலோகசத்துக்களும் நிறைந்தது. குழந்தைகளுக்கு இப்படிப்பட்ட போஷிப்பு உணவுகளைக் கொடுத்தல் உங்கள் கடமையாகும். சீக்கிரமே குழந்தைகள் பலமும ஆரோக்கியமும் பெற்றுவிடுகிறார்கள்.

உணவுக்குறைகளை சரிசெய்ய மெக்லெக் நியூட்ரிமென்ட்ஸ் உயர்தரமானவைகள் என்று போஷிப்புணவு நிபுணர்கள் கூறியுள்ளார்கள்.

மெக்லெக் நியூட்ரிமென்ட்ஸ் சத்தும் சாரமும் நிறைந்த உணவே தவிர மருந்தோ அல்லது மருந்து வகைச் சரக்கோ அல்ல.

மெக்லெக் போஷிப்பு சத்துக்கள். உங்கள் உணவில் குறையாய் உள்ள உணவுச்சத்துக்களை அளிப்பவை.

மெக்லெக் குழந்தைகளின் உணவு தேவையான புரோடீன் சத்தினை அளிக்கிறது.

சிரப் கால்விடால் தேவையான விட்டமின் உள்ள உணவு சத்தினை அளிக்கின்றது.

மெக்லெக் நியூட்ரிமென்ட்ஸ்

உணவில் குறையாயுள்ள உணவு சத்துக்களை அளிப்பவை.

விவரங்களுக்கு கீழ்க்கண்டவர்களுக்கு எழுதுங்கள்:

தி மெக்லெக் நியூட்ரிமென்ட்ஸ் அன்ட் பார்மஸூடிகல்ஸ் லிமிடெட்

99-A, ஆர்மீனியன் தெரு, ஜி. டி. மதராஸ்

MNP. 45 B Tamil.

88875

Coiffures OF INDIA

A typical ancient coiffure of Bengal.

வங்க தேசத்தின் புராதன முடி வகைகளில் ஒன்று

புராதன இந்தியக் கலை இப்பொழுது மறுபடியும் சிறிது சிறிதாக அதன் சுய உருவைப் பெறுகிறது. பழங்காலத் தாய்மார்களின் முடி அலங்காரம் இன்று வங்கத்திலே புத்துயிர் பெறுகின்றது.

ஆனால் இன்று, வாஸனை கலந்த *ஸ்வஸ்திக் காஸ்டர் ஆயில்* உபயோகிப்பதால் முடியலங்காரத்திற்கு அதிகமான அழகைக் கொடுக்கிறது. கேசத்தை நன்கு வளர்த்து, புதுமையும் பளபளப்பும் அளித்து மனோரம்மியமான வாஸனையும் தருகிறது.

மற்றும் இதர ஸ்வஸ்திக் தயாரிப்புகள்;—காந்தி, மற்றும் பல டாய்லட் சோப்புகள், ஷேவிங் ஸ்டிக், வாஷிங் சோப், கோவாலின் பிராண்டு வனஸ்பதி முதலியன.

SWASTIK PERFUMED CASTOR OIL

UNMATCHED FOR QUALITY

SWASTIK OIL MILLS LTD., BOMBAY.

SOM. 1A SHILPI

BE INDIAN — BUY INDIAN !



இந்தியன் பாங்க்

லிமிடெட்

இந்தியன் பாங்க் பில்டிங்ஸ்

நார்த் பீச் ரோட், மதராஸ்

மதராஸ் ஆபீஸ்கள்:

எஸ்பிளனேட், மவுண்ட் ரோட்,
திருவல்லிக்கேணி, தியாகராயநகர்,
மயிலாப்பூர், புரசைவாக்கம்,
எழும்பூர்.

தென் இந்தியாவில் எல்லா முக்கியமான இடங்களிலும் பம்பாயிலும் கிளை ஆபீஸ்கள் உள்ளன

வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம்	... ரூ. 72,00,000
செலுத்தப்பட்ட மூலதனம்	ரூ. 53,00,000
ரிஸர்வ் நிதி	... ரூ. 62,00,000

எல்லாவித பாங்கு அலுவல்களும் கவனிக்கப்படும்.

N. கோபால அய்யர்,
செக்ரெடரி.

IBN/101

அஜீர்ணமுண்டாகும் ஆகாரங்களை குழந்தைகளுக்கு கொடுக்காதீர்கள். நீங்கள் உட்கொள்ளும் ஆகாரங்களையோ, பானங்களையோ குழந்தைகளுக்கு கொடுப்பதினுல் குடலுக்கு கோளார் ஏற்படலாம். இம்மாதிரி தவறுதலான போஷிப்பில் ஜாக்கிரதை வேண்டும்.

ஆரம்ப அறிகுறிகளை கவனிக்கவும்

அடிக்கடி ஜுரம் ஏற்படுதல், மலச்சிக்கல், அதிக வயிற்றுப்போக்கு, வாந்தி, பசியின்மை, வயறு பொருமல், பொதுவாக, சோர்ந்திருத்தல், அடிக்கடி சிணு சிணுத்தல்.

நேர்மையான குணமளிக்கும் சிகிச்சை செய்யுங்கள்

ஜம்பியின் லிவர் க்யூர் கொடுப்பதினுல், உமது கவலையை நீக்கி, பணச்செலவை குறைத்து, வியாதியை முற்றவிடாமல், பின்விட்டு ஏற்படக்கூடிய அபாயத்தைத் தவிர்க்கும்.

ஜம்பியின்
லிவர்க்யூர்
உபயோகியுங்கள்

குழந்தையின், சால் குளிக்கட்டிக்கு ஜம்பியின் லிவர் க்யூர் உபயோகியுங்கள். எல்லா இடங்களிலும் விற்கப்படுகின்றன

ஜம்பி வெங்கிட்டரமணய்யர & சன்ஸ்

பத்து நிமிஷத்திற்குள்ளாக
வலி-
யிலிருந்து
விடுதலை
Saridon
ஸாரிடோன்
பிரசித்தி பெற்ற நோய் நிவாரணி

அயோடிசால்

மிகச் சிறந்த

ரத்த சுத்தி மருந்து

இது திரேகத்தில் உஷ்ணம் அதி கரித்து அதனுல் ஏற்படும் ரோகங்களை குணப்படுத்தி திரேகத்திற்கு ஆரோக்கியத்தை கொடுக்கும்.

ரத்தத்தை சுத்திசெய்து ரத்த விருத்தியையும் உண்டாக்கும்.

எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்

தயாரிப்பவர்கள் :

தி சௌத் இந்தியன் மானுபாக்சரிங் கம்பெ
மதுரை

ENJOY YOUR FREEDOM!

—*This's the* **EXACT THING** *you're looking for*—

A.E.I. STEEL TOILET STAND IS DESIGNED TO ACCOMODATE YOUR TOILET BATH, SHAVE OR POOJA ARTICLES. JUST TWO NAILS HOLD IT ON THE WALL





STURDY SINGLE - SHEET STEEL STAND

PRICE : RS. 2/4
POSTAGE EXTRA

ALLIED ENGINEERING INDUSTRIES
MALLESWARAM P.O. : BANGALORE

பருத்தி நூல்களுக்கு பிரதான ஸ்தாபனம்

மதுரை மில்ஸ் கம்பெனி

லிமிடெட்

மதுரை — தூத்துக்குடி — அம்பாசமுத்திரம்

எங்களுடைய விசேஷமான நூல்கள்:

5,00,000 நூற்கும் கதிர்கள்	ஒத்தை நூல், இரட்டை நூல், பனியன் நெசவுக்கேற்ற கோன் நூல், மில் நெசவுக்கேற்ற சீஸ் நூல், முறுக் கேற்றிய நூல்.	நம்பர் 80 வரை நூல்கள்

●

நாங்கள் சப்ளை செய்வது:

கைத்தறி, இயந்திரத் தறி, பின்னல் தறிகளுக்கு வேண்டிய காரிக்கன் நூல்கள், இயந்திர நெசவுக் கேற்ற வார்ப்பு நூல்கள், கனத்த வெப்பிங், கான் வாஸ் முதலியவைகளுக்கேற்ற மடக்கு இரட்டை நூல்கள், மற்றும் பின்னல் இயந்திர நெசவுக் கேற்ற மிருதுவான சன்ன நூல்கள்.

எங்கள் எகிப்திய பருத்தி நூல்கள் இறக்குமதியாகும் நூல்களைப்போல் எல்லா வகையிலும் கீர்த்தி பெற் றது.

நாங்கள் நூற்பதைத் தவிர நெய்வதில்லை

●

தற்காலம் நூல் விநியோகம் கட்டுப்பாடு செய்யப் பட்டிருப்பதால், உங்கள் தேவைக்கு உங்கள் மாகா ணம் அல்லது ஸ்டேட்டில் உள்ள துணிக் கட்டுப்பாடு அதிகாரிக்கு விண்ணப்பித்துக் கொள்ளவும்.

ஏ. & எப். ஹார்வி லிமிடெட்,

மானேஜர்கள்



ஆயிரங் காலப் பயிர்

நம் நாட்டில் திருமணத் தம்பதிகளை 'ஆயிரங் காலப் பயிர்' என்று வாழ்த்துவார்கள். நம் நாட்டுப் பண்பாட்டின் அறிகுறியாய்—நம்மவர் திருமணத்தின் மதிப்புக்குரிய சின்னமாய் இலங்கும் திருமங்கலியத்தை எண்ணிப் பெருமைப் படாதவர் யாருமே இல்லை.

திருமங்கலியத்தை யார் வேண்டுமானாலும் செய்யலாமா என்ன ? ஆயிரங் காலப் பயிரல்லவா திருமங்கலிய தாரணம்! எனவே, புகழ் பெற்ற நகை வியாபாரியின் அனுபவமும், ராசியும் அவசியம்.

பாபாலால் கம்பெனியார் செய்யும் இத்தகைய அணிகள் உங்கள் வீட்டுக்கு அழகு மட்டு மல்லாமல் கிருஹ லட்சுமியையும் சேர்த்து வைக்கின்றன.

சர்வசித்து
மலர் 14

சக்தி

ஆவணி
இதழ் 5

மெய்ப் பொருள் காண்பது அறிவு

உணவு சேகரிக்கும் விதம்

'சென்னை மாகாணத்தின் உணவு நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது; கூடிய சீக்கிரத்தில் வேண்டிய அளவு உணவுத்தானியம் கொள்முதல் செய்யாவிட்டால், அக்டோபர் மாதம் முதல் வாரத்துக்குப் பின் மாகாணமெங்கும் ரேஷன் கடைகளில் உணவுத் தானியம் கிடைக்காது. அப்புறம் பஞ்சம்தான்' என்ற பயங்கரமான செய்தி ஏதோ ஒரு நாள் திடீரென்று ஆகாயத்திலிருந்து வந்த அசரீரி வாக்குப் போல பத்திரிகைகளில் வெளி வந்தது. யுத்தம் ஆரம்பித்ததிலிருந்தே நாட்டில் உணவு நெருக்கடி ஏற்பட்டுக் கொண்டு வருகிறது என்பது வெளிப்படைதான். அப்படியிருக்க, மந்திரிகள் காலாகாலத்தில் முன்னேற்பாடாகத் தானியங்களைச் சேகரிக்காமல் இருந்தது பொறுப்பற்ற காரியமாகும். அத்துடன் நிலைமை இவ்வளவு ஆபத்தான கட்டத்தைத் தொட்டுவிட்டது என்ற அறிவிப்புக்கூட அநேகமாக சென்ற ஆகஸ்டு 15-க்குப்பிறகுதான் திட்டவட்டமாக வெளியாகி மக்களைத் திடுக்கிட வைத்தது. இந்த நிலையில் மத்திய சர்க்காரின் சேமிப்போ சென்னை மாகாணத்துக்கு உணவுப் பொருள்களை அனுப்பக் கூடிய நிலையில் இல்லை. ஆகவே, நம் மாகாணத்தின் உணவு நிலையை நாமே சமாளித்தாக வேண்டும்; அதுவும் சுமார் இரண்டொரு வாரங்களுக்குள்ளாகவே சமாளித்தாகவேண்டும், என்ற நிலைமை வந்து விட்டது. இப்படிப்பட்ட மோசமான நிலைமையில் அரசாங்கம் அசுர வேகத்தில் நடவடிக்கைகளை எடுக்க வேண்டியதுதான் நியாயம். மாகாணத்திலுள்ள மிராசுதார்களிடம் இருக்கும் தானிய ஸ்டாக்குகளை 'விறுவிறு' என்று கொள்முதல் செய்ய வேண்டும். ஆனால் நம் சென்னை சர்க்கார் இந்த அவசர நெருக்கடியைச் சமாளிப்பதில், எத்தனையோ அதிசயமான வழிகளையெல்லாம் கையாளத் தொடங்கியதுதான் விநோதமாக இருக்கிறது.

முதலில் நம் மாகாணத்தின், தேவையைப் பூர்த்தி செய்யும் அளவுக்கு இங்கே உள்ள தனிப்பட்ட நிலச் சுவான்தார்களிடம் உணவுத் தானியம் இருக்கிறதா என்ற விஷயம் தெளிவாக வேண்டியது அவசியம். வேண்டிய அளவு இருக்கத்தான் இருக்கிறது என்பதையும் மந்திரிகள் வெளிப்படையாகக் கூறி

விட்டார்கள். தானியம் இருக்கிறது என்பதில் சந்தேகமில்லைதான். ஆனால், அது எங்கெங்கே இருக்கிறது; எப்படிக் கைப்பற்றுவது, என்பது தெரியாமல் முதலில் மந்திரிசபை திகைத்தது. அப்புறம் ஒவ்வொரு மந்திரியையும் நாற்றிசைக்கும் அனுப்பிவிட்டு அங்கங்கே உள்ள மிராசுதார்களிடம் உள்ள தானியத்தைக் கொள்முதல் செய்வதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்யுமாறு ஏவியிருக்கின்றனர். இந்த முறையில் மாகாணத்தின் பல பகுதிகளுக்கும் சென்றிருக்கும் மந்திரிகள், யுத்த காலத்தில் நடவடிக்கை எடுப்பதைப் போல அவ்வளவு அவசரமாக நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்வதுதான் நியாயம். ஆனால், நம் மந்திரிகளோ மிராசுதார்களை அழைத்துக் கூட்டம் போட்டு, 'கையிருப்பிலுள்ள உணவுத் தானியங்களைக் கொடுக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறோம். நீங்கள் கொடுக்காவிட்டால் வங்காளப் பஞ்சத்தைப் போன்ற கோரமான பஞ்சம் இங்கு தலை விரித்தாடும்' என்று கெஞ்சிக் கேட்டு எச்சரிக்கிறார்கள். 'என் கையில் அட்சய பாத்திரம் இல்லாமல் போய்விட்டதே!' என்று பிரதமர் வருந்துகிறார்; உணவு மந்திரி டாக்டர் ராஜன் காட்பாடி விவசாயிகள் கூட்டத்தில், "நான் பிச்சை எடுத்து அறியேன்; என் தொழில் அதுவல்ல. ஆனால் நான் பிராமணனாகப் பிறந்த முறையில் பிச்சையெடுப்பதில் நியாயமுண்டு. அதனால் உங்கள் சேமிப்புத் தானியங்களைக் கொடுத்துதவும்படி, பட்டினியால் தவிக்கும் மக்களின் சார்பில் பிச்சை கேட்கிறேன்" என்று பேசியிருக்கிறார். மந்திரிகளுடைய இந்தப் பணிவான தோரணையைப் பாராட்ட வேண்டியதுதான். பணிவான தோரணையினால் ஏற்படும் பலன்கள் என்ன? இதனால் எல்லாம் காரியம் கைகூடிவிடுமா என்பதைத்தான் கவனிக்க வேண்டும்.

வேண்டுமென்றே கொள்ளை லாபத்தை உத்தேசித்துத் தானியத்தைப் பதுக்கும் கல் நெஞ்சக்காரர்களுக்கு இந்தக் கெஞ்சலைக் கேட்டு மனமிளகும் என்று எதிர்பார்ப்பது அசம்பாவிதம்; தவிரவும், 'பஞ்சம் வந்துவிடும்' என்ற எச்சரிக்கையைக் கேட்டு சிலச் சுவான்தார்கள் மனம் கலங்க வேண்டுமென்ற அவசியம் என்ன இருக்கிறது? உண்மையில் இந்த எச்சரிக்கையைக் கேட்டு, திகிலடைபவர்கள் ஏழை மக்கள்தான். ஆகவே, கெஞ்சுதல், எச்சரிக்கை விடுதல் என்ற இரண்டு முறைகளும் மிராசுதார்கள் விஷயத்திலும் கள்ள மார்க்கெட் காரர்கள் விஷயத்திலும் பயன் தரக்கூடிய ஆயுதங்களல்ல.

தானியக் கொள்முதலுக்கு உபரி தானியங்களைக் கொடுத்துவிடுவதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிர்ப்பந்தத்துக்கு மிராசுதார்களை உட்படுத்த என்னென்ன செய்யவேண்டும் என்பதை யோசிக்காமல், மிராசுதார்களின் உடம்பில் பிடிக்காத மேற்கூறிய பயனற்ற வழிகளைக் கையாளுவதுடன், மிராசுதார்களுக்குப் பரிந்து பேசும் தோரணையிலும் மந்திரிகள் நடந்து கொள்ளுகிறார்கள். இப்போது விவசாயம்பண்ணுவதற்கு ஏராளமான செலவு ஆகிறது என்றும், அந்த அதிகச் செலவை ஈடுகட்ட நெல் விலையை இப்போதிருக்கும் யானை விலை குதிரை விலையைவிட இன்னும் அதிகமாக உயர்த்த வேண்டும் என்றும் மிராசுதார்

கள் கூக்குரலிடுகிறார்கள். அவர்கள் கூறுவது முக்காலும் உண்மை என்று பிரதம மந்திரியும் ஒப்புக்கொள்ளுகிறார். இப்படி நெல் விலையை உயர்த்துவதற்கு இணங்காததற்காக மத்திய சர்க்காரிடத்திலும் பிரதமருக்கு மனவருத்தம் ஏற்படுகிறது. உண்மையில் நிலத்தில் விளையும் விளைச்சலின் மதிப்பை விட, அதிகச் செலவு விவசாயம் பண்ணும் விஷயத்தில் ஆகிவிடுகிறதென்றால் அதைப் புள்ளி விவரங்களுடன் தெரியப்படுத்த வேண்டும். ஒரு ஏக்கரின் வருமானம் என்ன? அந்த ஏக்கரில் விவசாயம் பண்ண, உழவு போன்ற சகல காரியங்களிலும் எவ்வளவு ரூபாய், அணா, பைசா செலவாகிறது? விவசாயத்தினால் மிராசுதார்களுக்கு ஏற்படும் நஷ்டம் என்ன? இந்த விபரங்களை மந்திரிகளோ, மிராசுதார்களோ இதுவரையிலும் தெளிவாகக் கூறியதாகத் தெரியவில்லை. இந்த விஷயம் அம்பலமாவதற்கு முன்னால் இன்று கொள்முதலைத் தவிர வேறு எதிலும் கவனம் செலுத்தக் கூடாத இந்த அவசர சந்தர்ப்பத்தில், மந்திரிகள் மிராசுதார்களின் கூக் குரலுக்கு ஒத்துப் பாடுவது ஆபத்தான பலன்களைத்தான் கொடுக்கும்; மந்திரிகளுடைய அனுதாபத்தைக் 'கண்டு' பதுக்கல் காரர்களுக்குத் துணிவுதான் பிறக்கும். அத்துடன் மற்றொரு விஷயம்: ஆந்திரநாட்டுத் தலைவர்களாகிய ஸ்ரீமான்கள் பிரகாசமும், ரங்காவும் தானிய விலையை உயர்த்தா விட்டால் கையிருப்புத்தானியத்தை யாரும் விற்கவேண்டாம், என்று பிரசாரம் செய்ததின்பயனாக, உபரித் தானியக் கொள்முதல் அங்கு போதுமான அளவு நடைபெறவில்லை.

மக்களைப் பட்டினி போட்டுக் கொல்லும் இப்படிப்பட்ட விஷமமான யோசனையை எந்த பொறுப்புள்ள தலைவனும், சொல்ல மாட்டான். சுயநலம்நிறைந்த சொந்த அரசியல் நோக்கங்களைச் சாதித்துக் கொள்ள மந்திரி சபைக்கு எதிர்ப்புக் காட்டும் முறையில் இப்படி நாசகரமான யோசனைகளைக் கூறுகிறவர்கள் எப்படிப்பட்ட மகான்களாயிருந்தாலும், தியாகிகளாக, தேசபக்தர்களாக இருந்தாலும் அவர்கள் விஷயத்தில் கடுமையான நடவடிக்கை எடுக்க அரசாங்கம் பின் வாங்கக் கூடாது. பொதுஜனப் பாதுகாப்புச் சட்டம் இப்படிப்பட்ட நாச வேலைகளுக்கு இடங் கொடுக்காமல் தடுத்து நிறுத்த வேண்டும்.

பல இடங்களுக்கும் போய் மந்திரிகள் உணவு சேகரிப்பு நடத்தியதன் பலனாக, ஏதோ அங்கங்கே கொஞ்சம் கொஞ்சமாகத் தானியம் கிடைத்து வருகிறதே ஒழிய, போதிய அளவுக்கு, எதிர்பார்க்கிற அளவுக்குக் கிடைக்கவில்லை. கள்ள மார்க்கெட்டுகள் நடந்து வருகின்றன என்பதைக் கூட மந்திரி ஸ்ரீ கூர்மையா ஒப்புக் கொள்ளுகிறார். இந்த நிலையில் மிராசுதார்கள் மனம் வைத்துக் கொடுத்ததைவாங்கிக்கொள்ளும் மோசமான முறையை விட்டொழித்து, மிராசுதார்களிடம் எவ்வளவு தானியம் இருக்கிறது என்பதைத் தெரிந்து, அவ்வளவையும் தயவு தாட்சண்யமில்லாமல் உடனே கைப்பற்றியாக வேண்டும். அவர்களிடம் உள்ள கையிருப்பு எவ்வளவு என்பதை அவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள முடியாது. அந்தந்த ஜில்லாக்களில் மிராசுதார்களின் வயல்களில் இறங்கி வேலை செய்த

குடியானவர்களிடமும் அவர்களுடைய சங்கத் தலைவர்களிடமும் கேட்டால்தான் குட்டு வெளிப்படும். ஆகவே, விவசாய ஸ்தாபனங்களின் ஒத்துழைப்பைப் பெற வேண்டியதுதான் இன்று காரிய சாத்தியமான வழி. மந்திரிகள் இந்தக் காரியத்தில் ஈடுபட விரும்புவதாகவே தெரியவில்லை. எப்படிப்பட்ட மிராசுதார்களிடம் உணவுத் தானியத்தைக் கொள்முதல் செய்ய வேண்டுமோ, அப்படிப்பட்ட மிராசுதார்களையே கொள்முதல் கமிட்டிக்குத் தலைவர்களாக நியமித்துள்ளார்கள். உதாரணமாக திருத்துரைப்பூண்டி பிராந்தியத்தில், பிர்க்காக் கமிட்டிக்கு மிகப் பெரிய மிராசுதாரான ஸ்ரீ சாமியப்ப முதலியார் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். தஞ்சை ஜில்லாவில் சுற்றுப் பிரயாணம் செய்யும் பிரதம மந்திரி குடியானவர்களை அணுகாமல் மிராசுதார்களாகிய வடபாதி மங்கலம் ஸ்ரீ தியாகராஜ முதலியார், குன்னியூர் ஸ்ரீ சாம்பசிவ ஐயர் முதலியவர்களின் வீடுகளில் தங்கி விருந்துண்டு வருகிறார். தஞ்சை ஜில்லாவில் உபரி தானியம் மிகுதியாக வைத்திருக்கும் தகுதி படைத்த பெரிய மிராசுதார்கள் இவர்களைப் போன்றவர்களே. இவர்களைப் போன்றவர்களிடத்திலிருந்துதான் கொள்முதல் செய்தாக வேண்டும். இப்படிப்பட்ட இடங்களில் மந்திரிகள் இந்தச்சந்தர்ப்பத்தில் முகாம் போடுவது விரும்பத்தக்கதல்ல என்பதற்குச் சான்று, போதிய அளவு கொள்முதல் ஆகாமல், மிகக் குறைந்த அளவில் ஆகிக் கொண்டிருப்பதுதான்.

சமீபத்தில் ஸ்ரீ என். எஸ். வரதாச்சாரி உணவுத்தானியக் கொள்முதலுக்கு ஒரு திட்டம் தயாரித்து வெளியிட்டிருக்கிறார். அதன் சாரமாவது: 'கொள்முதல் துரிதமாக நடப்பதற்கென்று மிராசுதார்களுக்குப் போனஸ் கொடுப்பது லஞ்சம் கொடுப்பதைப் போலாகும். அதிகமாக உணவுத் தானியம் பயிரிடுவதற்கு ஊக்கமளிக்கத்தான் போனஸ் கொடுக்க வேண்டும். ஒவ்வொரு மிராசுதாரிடமும் எவ்வளவு தானியம் கொள்முதல் செய்ய வேண்டும் என்பதைப் பகிரங்கப்படுத்த வேண்டும். இன்றைய நிலையில் உணவுத் தானியத்தின் விலையை உயர்த்தினால், மற்றப் பொருள்களின் விலையும் உயர்ந்து வாழ்க்கைச் செலவு மிகவும் அதிகமாகிவிடும். நிலச்சுவான்தார்களுக்கு விவசாயம் செய்வதில் அதிகச் செலவு ஆகிறதென்றால், அதற்குப் போனஸ் கொடுக்கலாமே ஒழிய தானிய விலையை உயர்த்தக் கூடாது. கள்ள மார்க்கெட்டுகளை உடனே ஒழித்துக்கட்ட வேண்டும், இந்தத் திட்டம் இன்றைய நிலையில் பயன் தரக்கூடிய திட்டமாக இருக்கிறது. மந்திரிகள் இந்தத் திட்டத்தைக் கடைப்பிடித்து உடனே கொள்முதலில் கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். தானிய ஸ்டாக்குகளை அம்பலப் படுத்துபவர்களுக்கு இனாம் வழங்கவேண்டும். ஆனால், இப்படி அம்பலப் படுத்தப்பட்ட தானிய ஸ்டாக்கை மதுரை ஜில்லாவில் பொதும்பு கிராமத்தில் சரிவரக் கொள்முதல் செய்யவில்லை என்று தெரிகிறது. அத்துடன் அம்பலப் படுத்தியவர்களுக்கு யாதொரு சன்மானமும் கிடையாதாம்.

இந்தமாதிரி மோசமான ஊழல்களை அனுமதித்துக் கொண்டிருக்கும் ஒவ்வொரு நிமிஷமும் மிகவும் ஆபத்து நிறைந்த

தாகும். அக்டோபர் முதல் வாரத்துக்கு இனி அதிக நாட்கள் இல்லை. இந்த அவசர சந்தர்ப்பத்தில் மிராசுதார்களிடம் நடவடிக்கை எடுத்து ஸ்டாக்குகளைக் கைப்பற்றாமல் கையேந்தி நிற்பதும், பொது மக்களின் ஒத்துழைப்பை நாடாமல் இருப்பதும், கள்ளமார்க்கெட்டுகளை ஒழிக்க பயங்கரமான நடவடிக்கைகள் எடுக்காமல் நிதானம் காட்டுவதும் பொறுப்பு வாய்ந்த பொது ஜன மந்திரிசபை செய்யக்கூடாத காரியங்கள். தொழிலாளர்கள் எங்காவது ஒரு மூலையில் சம்பளம் போதாமல் வேலை நிறுத்தம் செய்தால், அப்போது போலீஸ் படையை உபயோகித்துக்கொள்ளத் தயங்காத நம் சர்க்கார், மாபெரும் தலைவராகிய பண்டித நேருவே மனம் கொதித்துக் 'கழுமிலேற்ற வேண்டும்' என்று சபித்த கள்ளமார்க்கெட் காரர்கள் விஷயத்திலும், பதுக்கல்கார மிராசுதார்கள் விஷயத்திலும், அஹிம்சா பூர்வமான நடவடிக்கை எடுத்துத் தேசத்தைப் பட்டினிப் பஞ்சத்திலிருந்து காப்பாற்ற முயலுவது வேடிக்குப் போட்டியான காரியமாகத் தோன்றுகிறது. இந்த முறையை விட்டொழித்து, தயவு தாட்சண்யம் பாராது, கடுமையான நடவடிக்கைகள் எடுத்து, உணவுப் பஞ்சம் தீரும் வழியைக் காணவேண்டுமென்றே பொது ஜனங்கள் எதிர்பார்க்கிறார்கள்.

*

எழுத்தாள நண்பர்களுக்கு

கட்டுரைகளை காகிதத்தின் ஒரே பக்கத்தில் மையினால் தெளிவாக எழுதி அனுப்ப வேண்டும். கட்டுரைகளின் தலைப்பில் எழுதியவர்களின் முழு விலாசமும் இருக்க வேண்டும். ஆசிரியரால் அங்கீகரிக்கப்படாத கதை, கட்டுரைகளைத் திரும்பப் பெறவேண்டுபவர்கள், அதற்குரிய போதிய தபால் ஸ்டாம்புகளையும் உடன் வைத்து அனுப்ப வேண்டும். கட்டுரைகளுடன் ஸ்டாம்பு வைத்து அனுப்பாமல், பின்னால் எழுதும் கடிதங்களில் ஸ்டாம்புகளை வைத்து அனுப்பினாலும், கட்டுரைகளைத் திருப்பி அனுப்ப இயலாது. ஆகவே, ஸ்டாம்பு இல்லாமல் வரும் கட்டுரைகளை நிச்சயமாகத் திரும்பப்பெற முடியாது என்பதை எழுத்தாள நண்பர்கள் அறிய வேண்டுகிறோம்.

கதைகளை தவிர்த்து, பிற விஷயங்கள் யாவும் மொழிபெயர்ப்பாக இல்லாமல் சொந்தமாக ஆராய்ந்து எழுதப்பெற்றவையாக இருக்க வேண்டும்.

—ஆசிரியர், சக்தி

குறை சொல்லுவது

மிகவும் மன கஷ்டத்துடன் நீ உன் நண்பர்களின் குறைகளை எடுத்துக் காட்டுகிறாய் என்றால், அது ஆபத்தில்லாத காரியம்தான். அப்படியில்லாமல், அவர்களைக் குறை சொல்லும்போது உனக்கு ஓரளவுக்காவது குஷி பிறக்கிறது என்று தெரிந்தால் உடனே வாயைப் பொத்திக் கொள்!

—அலெஸ் டேவர் மில்லர்

முடியாட்சி மறைய வேண்டும்

ஆர். ராமநாதன்

உலக வளர்ச்சியில் ஏதோ ஒரு கட்டத்தில், முடியாட்சி பொருத்தமாக இருந்திருக்கக் கூடும். ஆனால், இன்றைய நிலையில் முடியாட்சியை, பரம்பரை பாத்தியதைப்படி ஒரு தனிமனிதன் ஆட்சிசெய்வதை, அனுமதிப்பது மனிதத் தன்மைக்கு முரண்பட்ட ஒரு காரியமாகும். ஜனநாயகத்துக்கு எதிரியான முடியாட்சி, மனித வர்க்கத்தைக் காட்டுமிராண்டிக் கூட்டம் எனச் சொல்லாமல் சொல்லும் ஓர் அவமானச் சின்னம். இது ஒழியவேண்டிய அவசியத்தைக் கட்டுரையாளர் வற்புறுத்துகிறார்.

ஆகஸ்டு மாதம் பதினைந்தாம் தேதி இந்தியாவின் சரித்திரத்தை அலங்கரிக்கும் நாள். அன்று இந்தியா புதிய சகாப்தத்தில்—சுதந்திர சகாப்தத்தில்—அடி எடுத்து வைத்தது. அன்று நேரடியான காலனி ஆட்சி முடிந்தது; அதிகாரம் காங்கிரசிடமும், லீகிடமும் மாற்றப்பட்டது. அடிமைத்தனத்தின் சின்னமாக விளங்கிய யூனியன் ஜாக் இறக்கப்பட்டது; தேசியக் கொடி எங்கும் உயர்த்தப்பட்டது. புதிய சகாப்தத்தை ஜனங்கள் ஆடிப்பாடி வரவேற்றனர்.

ஆனால், அன்று சுதந்திர சூரியன் சமஸ்தானங்களில் தன் பொற் கிரணங்களை வீசவில்லை. இந்தியர்களில் பெரும்பாலோர் சுதந்திர விழாக் கொண்டாடின அதே சமயத்தில் உளுத்துப் போன முடியாட்சி சமஸ்தான மக்கள் கழுத்தை நெரித்தது. இன்ப சுதந்திரம் அடைந்தே தீருவோம் என்று அந்தப் புனிதமான நாளிலே சமஸ்தான மக்கள் சபதம் எடுத்தனர்.

இரண்டாவது உலக மகா யுத்தம் முடிந்த பிறகு தேசத்தில் ஏற்பட்ட எழுச்சியைக் கண்டு பயந்த ஏகாதிபத்தியம் வேண்டா விருப்புடன் அதிகாரத்தை மாற்ற இசைந்தது. ஆனால், மன்னர்களின் பக்கபலத்துடன், பிற்போக்காளர்களின் ஆதரவுடன் இந்தியாவை மறைமுகமாக ஆளலாம் என்று ஏகாதிபத்தியம் கனவு கண்டது. சமஸ்தானங்களை ஏகாதிபத்தியத்தின் கோட்டையாக—ஏகாதிபத்தியத்தின் ஐந்தாம் படையாக—மாற்றலாம் என்று ஏகாதிபத்தியம் நினைத்தது. ஆனால், ஏகாதிபத்தியம் எங்கே போகிறது என்பதைத் தெளிவாக உணர்ந்த சமஸ்தான மக்கள் ஏகாதிபத்தியத்தின் முயற்சியை முறியடிக்க முடிவு செய்தனர். சமஸ்தானங்கள் இந்திய யூனியனில் சேர வேண்டும் என்று சமஸ்தான மக்கள் கிளர்ச்சி செய்தனர்.

ஆரம்பத்தில் இந்திய யூனியனில் சேர மறுத்த மன்னர்கள், சமஸ்தான மக்களின் அபிப்பிராயத்திற்கு அடி பணிந்தனர். ஒன்றன் பின் ஒன்றாகப் பல சமஸ்தானங்கள் இந்திய யூனியனில் சேர்ந்தன. இது சமஸ்தான மக்களின் முதல் வெற்றி; ஏகாதிபத்தியத்திற்கு எதிராக இந்தியர்கள் நடத்தும் போரில் இது இன்னொரு வெற்றி.

ஆனால், பிரச்னை இத்துடன் தீர்ந்துவிடவில்லை. இந்திய யூனியனில் சேர்ந்த மன்னர்கள், அரசியல் நிர்ணய சபையின் வேலைகளைத் தடுக்க முயலுகின்றனர். இது எவ்வாறு சாத்தியமாயிற்று? சமஸ்தானங்களிலிருந்து அரசியல் நிர்ணய சபைக்கு ஐம்பது சத விகிதம் அங்கத்தினர்கள் மாத்திரம் தான் தேர்ந்தெடுக்கப்

படுவார்கள்; ஐம்பது சத விகிதம் அங்கத்தினர்கள் மன்னர்களால் நியமிக்கப்படுவார்கள். இதன் பொருள் என்ன? சமஸ்தானப் பிரதிநிதிகளில் சரிபாதிப் பேர் மன்னர்களின் கையாட்களாக இருப்பார்கள்; முற்போக்குக்கு முட்டுக்கட்டை போடுகிறவர்களாக இருப்பார்கள்.

இந்த நிலை மாற வேண்டும். சமஸ்தானப் பிரதிநிதிகள் அத்தனை பேரும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். ஜனப் பிரதிநிதி சபைக்கு அங்கத்தினர்களை நியமிப்பது ஜன நாயகத்திற்கு முற்றிலும் முரணானது.

அரசியல் நிர்ணய சபையில் அங்கம் வகிக்கும் சமஸ்தானங்கள் அரசியல் நிர்ணய சபை வகுக்கும் அரசியல் திட்டத்தை அங்கீகரித்துத்தான் தீர வேண்டும் என்ற அவசியமில்லை. அரசியல் நிர்ணய சபையின் முடிவை அங்கீகரிக்கவோ, நிராகரிக்கவோ சமஸ்தானங்களுக்கு உரிமை அளிக்கப்பட்டிருக்கிறது. இது தவறு; இது ஜனநாயகத்திற்கு விரோதமானது.

சமஸ்தானங்கள் இந்திய யூனியனில் நிபந்தனையின்றிச் சேர வேண்டும் என்று சமஸ்தான மக்கள் கிளர்ச்சி செய்த அதேசமயத்தில் சர்தார்பட்டேல் மன்னர்களுடன் சமரசம் பேசினார். இந்திய யூனியனில் சமஸ்தானங்கள் சேருவதற்கு அவர் விதித்த நிபந்தனை என்ன? பாதுகாப்பு, அன்னிய நாட்டு விவகாரம், செய்தி ஸ்தாபனம் ஆகியவை யூனியன் சர்க்காரின் நிர்வாகத்திற்கு உட்பட வேண்டும். இந்த நிபந்தனைக்கு மன்னர்கள் இசைந்தால், சமஸ்தானங்களின் உள் நாட்டு விவகாரங்களில் யூனியன் சர்க்கார் தலையிடாது என்று சர்தார் வாக்குறுதி அளித்தார். இதன் அர்த்தம் என்ன? சமஸ்தான மக்களை எப்படி வேண்டுமானாலும் நடத்தச் சர்தார், மன்னர்களுக்குப் பரிபூரண உரிமை அளித்தார். சர்தாரின் ஆசீர்வாதத்தைப் பெற்ற மன்னர்கள் சமஸ்தான மக்கள் இயக்கத்தை அசாதாரண வெறியுடன் நசுக்க முயலுகிறார்கள். திருவிதாங்கூர், மைசூர், ஹைதராபாத் ஆகிய பெரிய சமஸ்தானங்களில் நிகழும் நிகழ்ச்சிகள் இதற்குச் சான்று.

முடியாட்சி, பிரபுத்துவ சகாப்தத்தின் சின்னம்; முடியாட்சி அடிமைத்தனத்தின் சின்னம். ஜனநாயக சகாப்தத்தில் முடியாட்சிக்கு இடம் இல்லை. பரிபூரண ஜனநாயகத்தை நோக்கித் தலை தெறிக்கும் வேகத்தில் முன்செல்லும் இந்தியா, முடியாட்சியைப் பேணி வளர்க்க முடியுமா? மகுடதாரிகளற்ற பரிபூரண ஜனநாயகக் குடியரசை ஸ்தாபிப்பதுதான் தங்கள் நோக்கம் என்று உலகறியக் கூறின தேசியத் தலைவர்கள், சமஸ்தானங்களின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிட மாட்டோம் என்று சொல்ல முடியுமா? சமஸ்தானங்களில் இரும்பாட்சி மறைந்து ஜனநாயக ஆட்சி தோன்ற வேண்டும் என்று கூறும் சமஸ்தான மக்களை, மக்கள் ஆட்சி மலருவதற்காக மகத்தான தியாகங்கள் செய்யும் சமஸ்தான மக்களை, உண்மையான குடியரசை நோக்கித் தாவி, இந்தியர்களுடன் ஒத்து ஓட முயலும் சமஸ்தான மக்களை, போராட்டத்திலே பண்பட்ட தேசிய இயக்கம் புறக்கணிக்க முடியுமா? முடியாது.

ஏனெனில், சமஸ்தான மக்களின் விடுதலைப் போரைப் பலஹீனப் படுத்துவது, இந்திய யூனியனைப் பலஹீனப் படுத்துவதாகும். மன்னர்களைப் பலப்படுத்துவது ஏகாதிபத்தியத்தைப் பலப் படுத்துவதாகும். எனவே, முடியாட்சி ஒழிக என்னும் சுலோகம் சமஸ்தானங்களில் மாத்திரமல்ல, இந்தியா முழுதும் முழங்க வேண்டும். சமஸ்தான மக்களின் போராட்டத்தைத் தேச நலத்தி[ல்] கருத்துள்ள எல்லோரும் ஆதரிக்க வேண்டும்.

ஏகாதிபத்தியத்தைப் பணி[ய] வைத்த தேசிய இயக்கம் முடியாட்சியை ஒழிக்கும்; முடியாட்சிக்கு அடிமைப்பட்டுக்கிடக்கும் சமஸ்தான மக்களைச் சுதந்திரக் கொடியின் கீழே அணிவகுத்து நிறுத்தும். இந்த நாள் வெகு தூரத்தில் இல்லை.

✲

தானியத்தைப் பதுக்காதே!

தானியத்தைக் கட்டிவைக்கிறவனை ஜனங்கள் சபிப்பார்கள்; விற்கிறவனுடைய தலையின்மேல் ஆசீர்வாதம் தங்கும்.

—சாலொமன் (பைபிள்)

ஸ்ரீராஜன்பாபு சொல்லுவது என்ன?

இந்திய ஊழியர் சங்க நிர்வாகஸ்தர் ஸ்ரீ கே. ஜீ. சிவசுவாமிக்கு ராஜன்பாபு எழுதிய கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

"நெல் விலையை உயர்த்துவதை நான் என்றுமே எதிர்த்து வந்துள்ளேன். விலையை உயர்த்துக என்று கிட்டத்தட்ட எல்லா மாகாண சர்க்காரும் கோரியதை எதிர்த்து நின்றேன். ஆனால், விலையை உயர்த்தும்படி மந்திரிசபையை அங்குள்ள நிலைமை நிர்ப்பந்திக்கிறது. உணவு நெருக்கடி மிகத் தீவிரமாயிருப்பதால் நெல் விலையை உயர்த்தும் சபலத்துக்கு மந்திரி சபை இரையாகிவிட்டது. கொள்முதலை அதிகரிக்கவும், உணவு நெருக்கடியைத் தீர்க்கவும் இது வழி என மந்திரிசபை நம்புவதால், கொள்முதல் வெற்றிபெறச் செய்ய இது உதவினால் சரிதான். ஆனால், எதிர்பார்க்கும் பலன் கிட்டாது என்றுதான் நான் மிகவும் பயப்படுகிறேன். நெல் விலை உயர்வு கோரிக்கைக்கு இணங்கும்படி பல எம். எல். ஏ.க்களும் நிர்ப்பந்தித்தார்கள்."

விமர்சனமோ, விளக்கமோ இதற்குத் தேவையில்லை. ஒரு கேள்விக்குமட்டும் விடை தெரிந்தால் நலமாயிருக்கும் என ஜனங்கள் எதிர்பார்க்கிறார்கள். இப்படி நெல்விலையை உயர்த்தும்படி நிர்ப்பந்தித்த எம். எல். ஏ.க்கள் யார்? அவர்கள் மக்களுக்கு பிரதிநிதிகளா, பெருமிராசுதார்களுக்கும், கள்ளமார்க்கெட் பதுக்கல்காரர்களுக்கும் பிரதிநிதிகளா? அம்பலத்துக்கு வர வேண்டும் இது!

—ஜனசக்தி

எலுமிச்சம் பழ ரசத்தைத் தினமும் சாப்பிட்டால் பல்லுக்கு ஆபத்து என்று இரண்டு டாக்டர்கள் எச்சரிக்கிறார்கள். அனேகருக்குப் பற்கள் விழுந்துவிட்டன.

—ஸயன்ஸ் நியூஸ் லட்டர்

✲

புதிய செய்தி

குயிலன்

புத்துலகை ஆக்கவென வாழ்நாளெல்லாம்
பொல்லாத பாலைவன மாக்கிக்கொண்டே
சத்தியமே துணையாக மக்கட்தொண்டைச்
சலியாது செய்துவரும் என்தோழர்காள் !
எத்திசையும் நாடெங்கும் புவிமீதுள்ள
எல்லோரும் கேட்டிடவே பறைசாற்றுங்கள்,
''செத்தவர்கள் உயிர்பெற்றார், இந்நாள்மட்டும்
செல்லரித்த கூட்டத்தைத் தேய்த்தோ''மென்றே !

சலவைக்கற் கூடத்தில் ஒளிவெள்ளத்தில்
தவழ்ந்துவரும் இன்னிசையில், தங்கள்காதல்
சிலைகள்தமை அணைத்தபடி களியாட்டத்தில்
சிந்தையெலாம் ஓர்முகமாய்ச் சேர்த்தே அந்தக்
கலைமானின் செவ்விதழைக் கடைக்கண்விச்சைக்
கரைகாணா இன்பமுடன் சுவைக்கும், செல்வம்
மலைபோலப் படைத்தபணக் காரர்காதில்
வார்க்குமடா நாராசம் இந்தச்செய்தி.

காலையிலே எழுந்தவுடன் வெகுவேகத்தில்
காக்கையெனக் கடன்போக்கித் தண்ணீராடி
நாலைந்து பொத்தலுள பழங்கோட் டொன்றை
நாணமுடன் மாட்டிக்கொண் டயலார்வாழ,
வேலையெனும் திரையின்பின் அவர்கள்கொள்ளை
வினைக்கருவி யாகியபின் வீட்டைத்தேடி
மாலையிலே ஓய்ந்துவரும் நடுக்கூட்டத்தின்
மனதினிலே சந்தேக அலையுண்டாக்கும்.

அந்தவொரு நற்செய்தி பல்லாண்டாக
அடிமைகளாய் மாய்ந்திட்ட எம்முன்னோர்கள்
நொந்தழுத கண்ணீராம் பெருவெள்ளத்தின்
நுரைக்கடலிற் படகோட்டி உலவிச்சென்று
வந்தபெரு முதலாளி வர்க்கத்துக்கே
வார்த்துள்ள புதுப்பாவில் நஞ்சைக்கக்கும்
தொந்திகளில் அடித்தபடி அழுவார்அன்னோர்;
துயரோசை பஞ்சைகளை விழிக்கச்செய்யும்.

அச்செய்தி கேட்டவுடன் அவரைக்காக்க
அமைந்துள்ள அரசாங்கம் மிகவும்சீறும்
நச்சுப்பற் கொண்டுள்ள விஷநாகங்கள்
நாட்டிலுள அமைதிதனைக் குலைக்கவந்த
இச்செயலை உடனேநாம் தடுப்போமென்றே
ஏவிவிடும் தம்படையை; அதையும் நாங்கள்
நிச்சயமாய் அறிகின்றோம், எனினும் என்ன?
நிலையறியா முழுமூடர் அவரேயாவர் !

உலகத்தில் உள்ளவர்கள் யாரானாலும்
உழைப்பவர்கள் எனிலெங்கள் அணியைச் சேர்ந்தோர்;
கலகத்திற் கடிகோலும் மதபேதங்கள்
கண்மூடிப் பிரிவுகளும் அறவேயில்லை;
அலைகடலுக் கப்பாலே அமெரிக்காவில்,
ஐரோப்பா முதலான பலநாட்டுள்ளும்
பலகாலும் மிகப்பாடு பட்டே நன்மை
பாராத ஏழைகளெம் சுற்றத்தார்கள்

நான்மாடக் கூடத்தில் வாழ்வோர் கேளீர்!
நாங்களினிப் பொறுத்திடவே மாட்டோம்; நீல
வான்முட்ட மனைகட்டித் தந்தோ மெங்கள்
மனைவிகளும் பிள்ளைகளும் தெருவோரத்தில்
ஏன்கொட்டும் குளிரதனில் பசியால்வாடி
ஏங்கிடுதல்? இதற்கென்ன பதில்சொல்வீர்கள்?
தேன்சொட்டச் சேர்த்திடுமிக் கூட்டம்நாங்கள்;
திருடியதைச் சுவைக்கின்றீர் நிதமும் நீவிர்

உழைத்திட்டோம் யந்திரமாய் ஆனால்வாழ்க்கை
உயர்வுக்குக் கூலிதனை அதிகம்கேட்டால்
மழைக்கால வானம்போல் முகத்தைக்காட்டி
மறுக்கின்றீர்; அதற்குப்பின் மக்கள்கூடிப்
பிழைப்புக்கும் உதவாத அவ்வேலைக்கே
பின்வாங்கி நின்றிடிலோ அரசாங்கத்தை
அழைக்கின்றீர் ஒற்றுமையைத் தடியால்போக்க;
அதற்கெங்கள் தோழர்களும் பலியாகின்றார்

மக்களிடம் பலபேசிக் கெஞ்சிக்கேட்டே
மறவாது தொண்டுசெய்வோ மென்றேசொல்லிச்
சொக்கவைத்து உயர்பதவி பெறுகின்றீர்கள்;
சொர்க்கமெனப் பதவியதை நினைத்தோரத்தம்
சுக்கிடவே ஏழையரை வதைக்கின்றீர்கள்;
கனவான்கள் அடிகளையே சரண்கொண்டீர்கள்;
எக்காலும் இனிமறக்க மாட்டாருங்கள்
இனியவுயிர் கொள்'தோட்டா' தொண்டின்மேன்மை;

தொழிலாளர் குருதியிலே வண்ணம்தோய்த்துத்
துலங்கிடுமிச் செங்கொடியைக் கையிற்கொண்டோம்
ஒழியாமல் ஓயாமல் பல்லாண்டாக
ஓடிவரும் சுரண்டலெனும் உம்வண்டிக்கே
அழிவென்னும் குறிகாட்டச் செந்தீப்போன்ற
அழகியதோர் கொடிகாட்டி விட்டோம்;மேலும்
விழிகண்கள் குருடாகச் சென்றால் நீங்கள்
வீழ்ந்திடுவீர் படுகுழியில் எழவேமாட்டீர்!

*

இந்தக் காதல் கதையை எழுதியவர் மலையாள எழுத்தாளர் ஸ்ரீ பி. கேசவதேவ். குழந்தைப் பிராயத்தில் கல்மிஷமின்றிக் கலையற்றிருந்த குழந்தை உள்ளங்கள் பிற்காலத்தில் வாழ்க்கையின் மாறுபாட்டினால் எப்படி வஞ்சகத்திலும், தீராத்துயரத்திலும், தியாகத்திலும் ஆழ்ந்து விடுகின்றன என்பதைப் பிரமாதமாகச் சித்திரித்திருக்கிறார் ஆசிரியர்.

அன்றைய நாடகம்

பி. கேசவதேவ்

பழைய ஓலைகளையும் செடிகளையும் வைத்து அந்தக் குழந்தைகள் வீடு கட்டின—ஓர் அறையும், ஓர் சமையல் அறையும்.

வர்க்கீஸ், குடும்பத் தலைவன். —இது விவாதத்தைக் கிளப்பவில்லை. இனி ஒரு குடும்பத் தலைவி வேண்டும். இதுதான் விவாதத்திற்குரிய விஷயம்.

குடும்பத் தலைவியானால் மாத்திரம் போதாது; குடும்பத் தலைவி பிரசவிக்கவும் வேண்டும். எலியாம்மை சொன்னாள்: "நான்தான் பிரசவிப்பேன்."

ரோஸாக்குட்டி இதற்கு இசைவாளா என்ன? அவள் இதை எதிர்த்தாள்: "போடி, நான்தான் பிரசவிப்பேன்."

எலியாம்மை விடவில்லை: "முதலில் நான்தான் சொன்னேன்."

ரோஸாக்குட்டி எதிர்த்தாள். "கடைசியில் சொன்னவள்தான் ஜெயிப்பாள். எலியாம்மை தோற்றுவிட்டாள். நான்தான் பிரசவிப்பேன்."

இதை ஆட்சேபிக்கும் தோரணையில் எலியாம்மை வர்க்கீஸைப் பார்த்தாள். செய்வது இன்னது என்று தெரியாமல் அவன் மௌனமாக நின்றான். இனி என்ன வழி? அவள் சமரசத்திற்குத் தயார். "அப்படியானால் நான் முதலில் பிரசவிக்கிறேன். பிறகு ரோஸாக்குட்டி பிரசவிக்கிறாயா?"

ரோஸாக்குட்டி சமரசத்திற்குத் தயாராக இல்லை. அவள் அழுத்தமாகச் சொன்னாள்: "முதலிலும், கடைசியிலும் நான் பிரசவித்தால் போதும்."

எலியாம்மை நிராசையுடன் கேட்டாள்: "அப்படியானால் நான் பிரசவிக்க வேண்டாமா?"

"நீ மருத்துவச்சி வேலை செய்."

ரோஸாக்குட்டி எலியாம்மைக்குக் கொடுத்த வேலை இது.

எலியாம்மைக்குக் கோபம் வந்தது. "எனக்கு விருப்பம் இல்லை, என்றால்?"

"விருப்பம் இல்லை என்றால் வேண்டாம்."

இதைச் சொல்லிவிட்டு அவள் ஒரு காயை அருகில் வைத்துக் கொண்டு படுத்தாள். "ஆராரோ ஆராரோ........." அவள் பாட ஆரம்பித்தாள். எலியாம்மை

கோபத்துடன் தூரத்தில் நின்றாள்.

கோபத்துடனும் துக்கத்துடனும் அவள் சொன்னாள்: "மருத்துவச்சி வேலை செய்ய நான் அவள் வேலைக்காரியா, என்ன?"

"நீ அவள் அம்மாவாக இரு."

"வேண்டாம்."

அவள் கையைப் பிடித்துக் கொண்டு அதட்டும் குரலில் வர்க்கீஸ் சொன்னான்: "எலியாம்மை! நான் சொல்லுகிறேன். விளையாட வா!"

அவள் கண்கள் நிறைந்தன. அவள் கையைப் பிடித்து இழுத்தான் வர்க்கீஸ். அவள் அவன் பின்னே நடந்தாள்.

* * *

வர்க்கீஸ், எலியாம்மை ரோஸாக்குட்டி—இவர்கள் அண்டை வீட்டுக்காரர்கள். இவர்கள் உயர்ந்த குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். வர்க்கீசுக்கு வயது பத்து. எலியாம்மைக்கும் ரோஸாக்குட்டிக்கும் வயது ஆறு.

எலியாம்மை வீட்டில் இருந்த பலா மரத்தடியில் மூவரும் நாள் தோறும் ஒன்று கூடுவார்கள். ஒவ்வொரு நாளும் அவர்கள் வெவ்வேறு விதமான விளையாட்டு விளையாடுவார்கள். 'வீடு கட்டும் விளையாட்டு' முடிந்த மறுநாள் அவர்கள் பலா மரத்தடிக்கு வந்தார்கள்.

"இன்று என்ன விளையாட்டு விளையாடலாம்?" என்று கேட்டான் வர்க்கீஸ்.

எலியாயம்மை ஆர்வத்துடன் சொன்னாள்: "இன்று நான் பிரசவிப்பேன்."

"இன்று யாரும் பிரசவிக்க வேண்டாம். இன்று நாடகம் நடிப்போம்" என்றான் வர்க்கீஸ்.

நாடகம் நடிப்பதா? எலியாம்மைக்கும் ரோஸாக்குட்டிக்கும் இதன் பொருள் விளங்கவில்லை. அவர்கள் ஏக காலத்தில் கேட்டார்கள்: "நாடகம் நடிப்பது எப்படி வர்க்கீஸ்?"

வர்க்கீஸ் வாய்விட்டுச் சிரித்தான். "ஐயோ! நீங்கள் நாடகம் பார்த்ததில்லையா? ராஜாவும் ராணியும் காட்டுக்கு வேட்டைக்குச் செல்லுவார்கள். அப்பொழுது ராஜா ராணியைச் சந்திப்பான். ராஜாவும் ராணியும் ஒருவரை ஒருவர் நேசிப்பார்கள். பிறகு அவர்கள் மணம் செய்து கொள்ளுவார்கள். இதுதான் நாடகம். இப்பொழுது புரிந்ததா?"

ரோஸாக்குட்டி சந்தோஷத்துடன் சொன்னாள்: "அப்படியானால் நாம் நாடகம் நடிக்கலாம்."

நாடகம் நடிப்பது என்று அவர்கள் முடிவு செய்தார்கள். வர்க்கீஸ் ராஜா. இனி ராணியும் மந்திரியும் வேண்டும். இதில் தான் விவாதம்.

"நான்தான் ராணி" என்றாள் ரோஸாக்குட்டி.

எலியாம்மை அசையாது நின்றாள். "எலியாம்மை மந்திரி. இல்லையா எலியாம்மை?" என்று கேட்டான் வர்க்கீஸ்.

"மந்திரியாக என்னால் முடியாது. ரோஸாக்குட்டி மந்திரியாகட்டும். நான் ராணி ஆகிறேன்."

ஏளனக் குரலில் ரோஸாக்குட்டி சொன்னாள்: "முடியாது நான்தான் ராணி. எலியாம்மை வேண்டுமானால் மந்திரியாக இரு."

எலியாம்மை கடும் கோபத்துடன் சொன்னாள்: "எனக்கு விருப்பம் இல்லை என்றால்?"

"அப்படியானால் மந்திரி வேண்டாம், வர்க்கீஸ்." இந்த ஆபத்திலிருந்து தப்ப ரோஸாக்குட்டி கண்டுபிடித்த வழி இது.

நாடக நியதிகள் வர்க்கீசுக்குத்தான் தெரியும். "மந்திரி இல்லாது நாடகம் நடத்த முடியாது" என்றான் அவன்.

வர்க்கீஸ் ஒரு வழி கண்டுபிடித்தான். "நான் மந்திரி ஆகிறேன். எலியாம்மை ராஜா ஆகட்டும்."

ரோஸாக்குட்டி ஒரு புதிய பிரச்னையைக் கிளப்பினாள்: "எலியாம்மை ராஜா ஆனால் நான் ராணி ஆகமாட்டேன்."

எலியாம்மை விடவில்லை: "ரோஸாக்குட்டி ராணியானால் நான் ராஜா ஆகமாட்டேன்."

ஒரே குழப்பம். இனி என்ன வழி? எலியாம்மை அருகில் சென்று அவள் கையைப் பிடித்துக்கொண்டு வர்க்கீஸ் சொன்னான்: "எலியாம்மை! நான் சொல்லுகிறேன், நீ மந்திரியாக வேண்டும் என்று."

வர்க்கீஸ் சொன்னால் அதற்கு அப்பீல் இல்லை. எலியாம்மை மந்திரியானாள். ரோஸாக்குட்டி ராணியானாள். இனி நாடகம் நடந்தால் போதும்.

"ராணி, நீ அந்த மாமரத்தடியில் நிற்க வேண்டும். அப்பொழுது நானும் மந்திரியும் அங்கே வருவோம். என்னைக் கண்டதும் நீ என்னைக் காதலிக்க வேண்டும். பிறகு இங்கு வந்து மணம் செய்துகொள்ளுவோம்."

ராணி மாமரத்தடியில் நின்றாள். வெளியில் தெரியும் பலாவின் வேரில் நின்றுகொண்டு ராஜா மந்திரியைக் கூப்பிட்டான்: "மந்திரி, இங்கே வா!"

உணர்ச்சியின்றி, முகத்தைத் தொங்கவிட்டுக்கொண்டு மந்திரி ராஜாவை அணுகினான். இது ராஜாவுக்குப் பிடிக்கவில்லை.

"இப்படித்தானா மந்திரி வருவான்?"

"பிறகு எப்படி?" என்று அலட்சியமாகக் கேட்டான் மந்திரி.

"நிமிர்ந்த தலையுடன் நடக்க வேண்டும். அருகில் வந்ததும் சலாம் செய்ய வேண்டும்."

ராஜாவின் ஆணைப்படி மந்திரி மீண்டும் பிரவேசித்தான். பெருமிதத்துடன் ராஜா கேட்டான், "மந்திரி, எல்லோரும் சௌக்கியமாக இருக்கிறார்களா?"

மந்திரி பதில் சொல்லவில்லை. ராஜா பெருமிதத்துடன் கட்டளையிட்டான். "'ஆம்' என்று சொல் மந்திரி!"

"ஆம்."

"மழை பெய்கிறதா?" என்று ராஜா மீண்டும் கேட்டான்.

"இல்லை."

ராஜாவுக்குக் கோபம் வந்தது. "ஓ! 'ஆம்' என்று சொல், மந்திரி."

மழை பெய்யாதபொழுது மழை பெய்கிறது என்று எப்படிச் சொல்ல முடியும்? "இப்பொழுது மழை பெய்கிறதா, மகாராஜ்?" என்று கேட்டான் மந்திரி.

"ராஜா கேட்கும் பொழுது மந்திரி 'ஆம்' என்று சொல்ல வேண்டும். அதுதான் நாடகம்."

"அப்படியானால் மழை பெய்கிறது" என்றான் மந்திரி.

ராஜா மலர்ந்த முகத்துடன் கேட்டான், "நமது குடிமக்கள் நோயால் வாடுகிறார்களா?"

"ஆம்" என்று மந்திரி உடனே பதில் சொன்னான்.

ராஜாவுக்குக் கோபம் வந்தது. "'இல்லை' என்று சொல், எலியாம்மை."

"அதெப்படி? ராஜா கேட்கும் பொழுது, 'ஆம்' என்று சொல்ல வேண்டும் என்றாயே!"

"மழை பெய்கிறதா என்று கேட்டால் 'ஆம்' என்று சொல்ல வேண்டும். வியாதி இருக்கிறதா என்று கேட்கும் பொழுது 'இல்லை' என்று சொல்ல வேண்டும்."

"அப்படியானால் இல்லை."

பரம திருப்தியுடன் ராஜா எழுந்திருந்தான். "மந்திரி, நாம் வேட்டைக்குச் செல்லலாம்."

"சரி!"

"அப்படியானல் வா."

ராஜா முன்னே நடந்தான்; மந்திரி பின்னே நடந்தான். அவர்கள் மாமரத்தை அடைந்தனர். ராணி பொறுமை இழந்து மாமரத்தடியில் மறைந்து கொண்டு நின்ருள். புன்முறுவலுடன் ராஜா ராணியைக் கடைக் கண்ணல் பார்த்தான். ராணி ராஜாவைக் கடைக் கண்ணல் பார்த்துவிட்டு, புன்னகை புரிந்தாள்.

"மந்திரி, ராணி அழகி அல்லவா?" என்று ராஜா கேட்டார்.

மந்திரி பதில் சொல்லவில்லை. அவன் முகத்தைத் தூக்கிக் கொண்டு நின்ருன்.

ராஜா அவனைக் கண்டித்தான். "ஆம் என்று சொல்லடி மந்திரி."

சொல்லாமல் வேறு வழியில்லை. "ஆம்."

இதைச் சொல்லிவிட்டு அவன் வேறு பக்கம் பார்த்தான்.

மெதுவாக ராஜா ராணியை அணுகினன். "ராணி, நீ எதற்காக இங்கே நிற்கிருய்?"

கூச்சம் சிறிது மின்றி ராணி சொன்னள்: "நான் ராஜாவை நேசிக்கிறேன்."

அன்புடன் ராஜா உபதேசம் செய்தான்: "இதைப் பிறகு சொன்னல் போதும். இப்பொழுது பூப் பறிக்க வந்திருப்பதாகச் சொல்."

"நான் பூப் பறிக்க வந்தேன்."

"ராணியின் வீடு எங்கே?"

இந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல ராணிக்குத் தெரியாது. ராஜா சொல்லிக்கொடுத்தான்: "'அடுத்த நாட்டு மன்னனின் மகள்' என்று சொல்."

"அடுத்த நாட்டு மன்னனின் மகள் நான்."

இன்னும் சிறிது அருகில் சென்று ராஜா சொன்னன்: "நான் உன்னை நேசிக்கிறேன்."

"நானும் நேசிக்கிறேன்."

"அப்படியானல் நான் உன்னை மணம் செய்துகொள்ளுவேன்."

அவள் தலையை அசைத்தாள்.

"அப்படியானல் வா."

கை கோத்துக்கொண்டு ராஜாவும் ராணியும் நடந்தார்கள். கவலை தோய்ந்த முகத்துடன், துக்கத்துடன் மந்திரி பின்னே நடந்தான். அன்றைய நாடகம் இவ்வாறு முடிந்தது. இவ்வாறு அவர்கள் பல நாடகங்கள் நடித்தார்கள்.

* * *

பதினொரு வருடங்கள் ஓடி மறைந்தன. திருவனந்தபுரம் கலாசாலையில் வர்க்கீஸ் படிக்கிருன். எலியாம்மையும் ரோஸாக்குட்டியும் பத்தாவது வகுப்பில் படிக்கிருர்கள்.

ஒரு நாள் காலையில் ஒரு நோட்டுப்புத்தகம் வாங்குவதற்காக எலியாம்மை ரோஸாக்குட்டி வீட்டிற்குச் சென்ருள். தனது அறையில் உட்கார்ந்துகொண்டு ரோஸாக்குட்டி ஒரு கடிதத்தைப் படித்துக்கொண்டிருந்தாள். எலியாம்மையைக் கண்டதும் அவள் கடிதத்தை மடித்து மேஜைக்குள் வைத்தாள்.

"யாருடைய கடிதம் அது, ரோஸாக்குட்டி?" என்று சந்தேகத்துடன் கேட்டாள் எலியாம்மை.

"ஓ! அது கடிதம் அல்ல, வெறும் காகிதம்."

"வெறும் காகிதமானல் என்னைக் கண்டதும் ஏன் ஒளித்து வைத்தாய்?"

"உன்னை ஏமாற்ற."

"அப்படியானால் அந்த வெறும் காகிதத்தை நான் பார்க்கலாமா?"

"ஓ! வெறும் காகிதத்தை நீ ஏன் பார்க்க வேண்டும்?"

எலியாம்மை ஒன்றும் சொல்லவில்லை. அவள் மனத்தில் சந்தேகம் இடம் பெற்றது. நோட்டுப் புத்தகத்தை வாங்கிக்கொண்டு அவள் விரைவில் வீடு திரும்பினாள்.

அன்று முழுவதும் அந்தக் கடிதத்தைப் பற்றி அவள் சிந்தித்தாள். பள்ளிக்கூடத்திலும், வீட்டிலும் அந்தக் கடிதத்தைப் பற்றி மாத்திரம்தான் அவள் சிந்தித்தாள். பள்ளிக்கூடத்திலிருந்து திரும்பினதும் அவள் அறையில் அசையாது உட்கார்ந்தாள்.

'ஆம். அது அவர் கடிதம்தான். அவள் சந்தேகம் ஊர்ஜிதமாயிற்று. அவர் திருவனந்தபுரத்தில் ஹாஸ்டலில் வசிக்கிறார் என்று அன்னக்குட்டி அன்று சொன்னபொழுது, அவர் வேறு இடத்தில் வசிக்கிறார், என்று ரோஸாக்குட்டி சொன்னாள். அது உண்மைதான் என்று கிறிஸ்துமஸ் விடுமுறைக்கு ஊருக்கு வந்தபொழுது அவர் ஒப்புக்கொண்டார். இது ரோஸாக்குட்டிக்கு எவ்வாறு தெரிந்தது? விடுமுறை நாட்களில் ஊருக்கு வந்தால், அவர் ரோஸாக்குட்டி வீட்டில் பொழுதைக் கழிப்பார். எப்பொழுதாவது இங்கே வருவார். அவ்வளவுதான்...... ஆம், அவர் அடிக்கடி ரோஸாக்குட்டிக்குக் கடிதம் எழுத வேண்டும். அவர்கள்...... அப்படித்தான் இருக்க வேண்டும். தெய்வமே!......'

அந்த வருடம் கோடை விடுமுறைக்கு வர்க்கீஸ் ஊருக்கு வந்தான். அவன் ஊருக்கு வந்து நான்கு நாட்களாகியும் ஒரு நாள் கூட அவர் எலியாம்மையைச் சந்திக்கவில்லை. ஒவ்வொரு நிமிடமும் அவள் வர்க்கீஸின் வருகையை எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள். அவன் காலமெல்லாம் ரோஸாக்குட்டி வீட்டில் இருப்பதாக அவளுக்குத் தகவல் கிடைத்தது. அவள் சந்தேகம் தீர்ந்தது. வர்க்கீஸ் ரோஸாக்குட்டியைக் காதலிக்கிறான்; ரோஸாக்குட்டி வர்க்கீஸைக் காதலிக்கிறாள்.; அவள் ஹிருதயம் பற்றி எரிந்தது.

ஒரு நாள் மாலை அந்தப் பழைய பலா மரத்தடியில், அன்று ராஜாவின் சிம்மாசனமாக விளங்கின வேருக்கு அருகில், சிந்தனையில் ஆழ்ந்து நின்றுகொண்டிருந்தாள் எலியாம்மை. அன்று, அவளும், வர்க்கீசும், ரோஸாக்குட்டியும் அந்தப் பலா மரத்தடியில் விளையாடின விளையாட்டுக்கள் ஒன்றன்பின் ஒன்றாக அவள் சிந்தனையில் தோன்றி மறைந்தன. அன்று வீடு கட்டி விளையாடினபொழுது குடும்பத் தலைவியாக—பிரசவிக்க அவளும் ரோஸாக்குட்டியும் நடத்தின யுத்தமும், கடைசியில், "எலியாம்மை! நான் சொல்லுகிறேன், விளையாட வா!" என்று வர்க்கீஸ் அவள் கையைப் பிடித்துக்கொண்டு அவளுக்குக் கட்டளை இட்டதும், அந்தக் கட்டளைக்கு அவள் தலை வணங்கினதும் நேற்று நடந்தது போல் அவள் ஞாபகத்திற்கு வந்தது. அன்றைய நாடகம்..........ஆ! வர்க்கீஸ் மன்னனால் அலங்கரிக்கப்பட்ட அந்தச் சிம்மாசனம்! —அது இப்பொழுதும் அங்கேயே இருக்கிறது. அந்தச் சிம்மாசனத்தைப் பார்த்து அவள் பெருமூச் செறிந்தாள். அன்று வர்க்கீஸ் ராஜாவும் ரோஸாக்குட்டி

ராணியும் கை கோத்துக் கொண்டு நடந்த அந்த நடை!— அவள் கண்கள் நிறைந்து, நெஞ்சு வழியாக ஒழுகிற்று.

"எலியாம்மை!"

அவள் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள். வர்க்கீசின் மலர்ந்த முகத்தை அவள் கண்டாள். அவள் எழுந்து, முந்தானையால் கண்களைத் துடைத்துக்கொண்டாள்.

பதற்றத்துடன் அவள் அருகில் சென்று, வர்க்கீஸ் கேட்டான்: "ஐயோ! நீ ஏன் அழுகிறாய்?"

விம்மலை அடக்கிக்கொண்டு அவள் சொன்னாள்: "கண்ணில் ஈ புகுந்தது"

"பொய்" என்று சொல்லிச் சிரித்தான் வர்க்கீஸ். "இரண்டு கண்களிலும் ஈ புகுந்ததா?"

அவள் மௌனமாக நின்றாள். "ஏன் துக்கப்படுகிறாய்?" என்று வர்க்கீஸ் மீண்டும் கேட்டான்.

"பிள்ளைப் பிராயத்து ஞாபகங்கள்..."—அவள் தொண்டை அடைத்துக் கொண்டது.

சிறிது நேரம் மௌனமாக நின்றான் வர்க்கீஸ். "உன் பிள்ளைப் பிராயத்து ஞாபகங்கள் துக்ககரமானவையா?"

"ஆம்" என்றாள் அவள். "குறிப்பாக, இந்தப் பலா மரத்தடியில் நாம் ஒன்றாக விளையாடின விளையாட்டுக்களின் ஞாபகம் என்னைத் துக்கக் கடலில் ஆழ்த்துகிறது."

"அந்த ஞாபகம் உன்னை ஏன் துக்கக் கடலில் ஆழ்த்துகிறது என்பது எனக்கு விளங்கவில்லை. எனக்கு அந்த ஞாபகம் இன்பத்தைத் தூண்டிவிடுகிறது."

"ஒரு சம்பவத்தைப் பற்றின ஞாபகம் இருவருக்கு இரண்டு விதமான உணர்ச்சியை உண்டு பண்ணலாம்" என்று சாந்தமாகப் பதில் கூறினாள்.

"அது சரியாக இருக்கலாம். ஆனால், நமது பிள்ளைப் பிராயத்து ஞாபகம் துக்கத்தைத் தூண்டிவிட முடியாது. அன்று குற்றமற்ற மூன்று குழந்தைகள் ஒன்றாக விளையாடின. அந்த விளையாட்டுக்களின் ஞாபகம் இன்று இன்பகரமாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன்" என்று கூறினான் வர்க்கீஸ்.

எலியாம்மை ஒன்றும் சொல்லவில்லை. வெளியில் தெரியும் அந்த வேரைப் பார்த்துக் கொண்டு வர்க்கீஸ் கேட்டான்: "அன்று நாம் ஒரு நாடகம் நடித்தது ஞாபகம் இருக்கிறதா?"

"இருக்கிறது" அவள் ஆர்வத்துடன் வர்க்கீசைப் பார்த்துவிட்டு, தன் பார்வையைத் திடீரென்று வேறு பக்கம் திருப்பினாள்.

"அன்று அந்த வேர்தான் என் சிம்மாசனமாக இருந்தது." அவன் அந்த வேரின் மீது உட்கார்ந்தான். "அந்த நாடகத்தை இப்பொழுது நடிக்க எனக்கு ஆசை."

"ஒருத்தி இங்கே இல்லையே!" என்று வர்க்கீசைக் கடைக்கண்ணால் பார்த்துக்கொண்டு சொன்னாள் எலியாம்மை.

"ஆம், அன்றைய ராஜாவும், மந்திரியும் இங்கே இருக்கிறார்கள். அன்றைய ராணி மாத்திரம் இங்கே இல்லை". வர்க்கீசின் முகத்தில் புன்முறுவல் பிரதிபலித்தது. அந்தப் புன்முறுவலை எலியாம்மையின் கூர்ந்த திருஷ்டியிலிருந்து மறைக்க அவனால் முடியவில்லை.

அவள் அதன் பிறகு ஒன்றுமே கேட்கவில்லை. அவள் நெடுமூச்சு விட்டாள்.

*   *   *   *

மூன்று வருடங்கள் ஓடி மறைந்தன. மனோகரமான காலை நேரம்:

கன்னி மாடத்திற்கு முன் நிற்கிறான் வர்க்கீஸ். நிராசையால் நைந்த இருதயத்தின் பிரதிபிம்பம் அவன் முகத்தில் பிரதிபலித்தது.

வர்க்கீஸ் மணி அடித்தான். மணி ஓசை அவன் காதுகளில் சோக கீதம் பாடிற்று.

வேலைக்காரி கதவைத் திறந்தாள். அவளிடம் என்னமோ சொன்னான் வர்க்கீஸ். அவள் உள்ளே சென்றாள்.

இரண்டு நிமிடங்களுக்குப் பிறகு கன்னிமாடத் தலைவி விருந்தினரை உபசரிக்கும் அறையில் பிரசன்னமானாள். வர்க்கீஸ் அங்கே அழைக்கப்பட்டான்.

கருணையும், சாந்தமும், சிநேகமும் கலந்த குரலில் அவள் கேட்டாள்: "யாரைப் பார்க்க வேண்டும்?"

வர்க்கீஸ் ஒரு பெயரைச் சொன்னான்.

"உட்காருங்கள்." ஒரு நாற்காலியைச் சுட்டிக்காட்டிவிட்டு அவள் உள்ளே சென்றாள்.

வர்க்கீஸ் நாற்காலியில் உட்கார்ந்தான். அறையில் அமைதி குடிகொண்டிருந்தது. அவன் தலைக்கு மேலே இருந்த கடிகாரத்தின் "டிக்—டிக்" சப்தம் மாத்திரம்தான் அமைதியைக் குலைத்தது.

இருபத்து மூன்று வருட வாழ்க்கை—இவைகளில் மிக முக்கியமான காட்சிகள்—சினிமாவைப் போன்று அவன் மனதில் தோன்றிக்கொண்டிருந்தன. பலா மரத்தடியில் வீடு கட்டி விளையாடினதும், நாடகம் நடித்ததும், பிரசவித்ததும், ராணியாக ரோஸாக்குட்டி பிடிவாதம் பிடித்ததும், அப்பொழுது எலியாம்மை நிராசையுடன் நின்றதும்—இப்படிப் பல நிகழ்ச்சிகளை அவன் நினைத்தான். அவன் கண்கள் நனைந்தன.

"கன்னிமாடத்தில் இத்தகைய சிந்தனைகளா?" நனைந்த கண்களைத் துடைத்துக்கொண்டு அவன் மனதைத் திடப்படுத்திக்கொண்டான்.

"சகோதரா!" பழக்கமான அந்தக் குரலைக் கேட்டு வர்க்கீஸ் திரும்பிப் பார்த்தான். நித்திய கன்னியாகிய எலியாம்மையின் காந்தத்தால் பெருமை அடைந்த புன் முறுவல் தவழும் முகத்தை அவன் கண்டான். அந்தத் தியாகத்திற்கு முன்—சர்வ வியாபகமான அந்த அன்பிற்கு முன்—அவன் எழுந்து நின்றான்.

"பரிசுத்த மாதா உங்களை ஆசீர்வதிக்கட்டும்!" எலியாம்மையின் குரல் அந்த விசாலமான அறையில் எதிரொலித்தது. சிறிது நேரம் மௌனமாக இருந்துவிட்டு அவள் சொன்னாள்: "உட்காருங்கள்."

வர்க்கீஸ் உட்கார்ந்தான். எலியாம்மையும் உட்கார்ந்தாள். நித்திய கன்னியின் இருதயத்தின் அடித் தளத்தி லிருந்து எழும் ஏதோ வேதனை தரும் எண்ணம் அவள் முகத்தை எட்டிப் பார்த்துக்கொண்டிருந்தது.

"அந்தப் பழைய எலியாம்மையை—அந்தப் பழைய மந்திரியை—நீங்கள் மறக்கவில்லை, அல்லவா?"

"ராஜாவும் மந்திரியும்..." வர்க்கீஸ் அர்த்த புஷ்டியுடன் முனகினான்.

"ராணி சௌக்கியமா?" என்று அவள் கேட்டாள்.

"ஆம், ராணி சௌக்கியமாக இருக்கிறாள்."

"ராஜா?"

"மகுடமும், செங்கோலும், சிம்மாசனமும், ராணியும் இல்லாத மன்னன்—இப்படிப்பட்ட மன்னன் நான்." பெரு முயற்சியுடன் அவன் உணர்ச்சியை அடக்கிக் கொண்டான்.

"நீங்கள் சொன்னது எனக்குப் புரியவில்லை." ஆம், அவன் சொன்னது எலியாம்மைக்கு விளங்க வில்லை.

அவன் மீண்டும் சொன்னான்: "எனது அன்றைய ராணியை நான் இழந்தேன். அத்துடன் என் மகுடம், செங்கோல், சிம்மாசனம் எல்லாம் போய் விட்டன."

கலக்கத்துடன் எலியாம்மை கேட்டாள்: "என்ன? ரோஸாக் குட்டி இறந்துவிட்டாளா?"

"இல்லை. அவள் வாழ்க்கை ஆரம்பமாகும் புனிதமான நாள் இது; இன்று ரோஸாக்குட்டிக்குக் கலியாணம்." அவன் முகத்தைத் திருப்பினான்.

"அப்படியானால் இந்தப் புனிதமான தினத்தில் நீங்கள் ஏன் வருந்துகிறீர்கள்?"

"ஒரு நிகழ்ச்சி இருவரில் இரண்டு விதமான உணர்ச்சியைத் தூண்டிவிடலாம் என்று அந்தப் பலா மரத்தடியில் நின்றுகொண்டு நீ அன்று சொன்னது உனக்கு ஞாபகம் இருக்கிறதா? இந்தப் புனிதமான தினத்தில் மயிலைப்போன்று ரோஸாக் குட்டி இன்புறலாம். நானோ..." அவன் பெருமூச்செறிந்தான்.

"இந்த மணத்தை நீங்கள் விரும்பவில்லை என்பது இதன் பொருளா?"

"இல்லை" என்று அசாதாரண உறுதியுடன் அவன் சொன்னான். "இந்த மணத்தை நான் விரும்ப வில்லை." சிறிது நேரம் அசையாது இருந்துவிட்டு, விம்மலை அடக்கிக்கொண்டு அவன் சொன்னான்: "ரோஸாக் குட்டியை மாத்திரம் தான் நான் நேசித்தேன். அந்த நட்பின் மயக்கத்தில், களங்கமற்ற இன்னோர் இருதயத்தின் புனிதமான காதலை அறிய என்னால் முடிய வில்லை."

மூச்சை அடக்கிக்கொண்டு அசையாது உட்கார்ந்தான்.

"நீங்கள் என் இருதயத்தைக் குறிப்பிடுகிறீர்களா?" என்று எலியாம்மை கேட்டாள்.

"ஆம்" என்று வெகு சிரமத்துடன் அவன் சொன்னான்.

"நிறுத்துங்கள்! இதைப்பற்றி இனி ஒன்றும் சொல்லாதீர்கள். அன்பு நிறைந்த இந்த இருதயத்தை ஆண்டவனின் சந்நிதானத்தில் அர்ப்பணம் செய்துவிட்டேன். அன்றைய இளம் ராஜாவும் ராணியும் தம்பதிகளாக வாழ்க்கை நடத்துவதைக் காணமாத்திரம்தான் இனி எனக்கு ஆசை."

"அந்த ஆசை நிறைவேறாது."

"ஏன்? இன்றுதானே ரோஸாக் குட்டியின் கலியாணம்?"

"ஆனால் நாங்கள் தம்பதிகள் ஆகமாட்டோம்."

"நீங்கள் தம்பதிகள் ஆகமாட்டீர்கள் என்றால், மணம் நடக்காது என்றுதானே பொருள்?"

"அப்படி அல்ல. மணம் நடக்கும் என்றும், நாங்கள் தம்பதிகள் ஆக மாட்டோம் என்றும் பொருள்."

"அதெப்படி? மணமகன் நீங்கள் தானே?"

"இல்லை. அந்தப் பேறு எனக்குக் கிடைக்க வில்லை. பெரிய உத்தியோகமும், செல்வமும் படைத்த ஒரு பெரிய மனிதனுக்குத்தான் அந்தப் பேறு கிடைத்தது." அவன் முகத்தை மூடிக்கொண்டு விம்மி விம்மி அழுதான்.

"பரிசுத்த மாதா!" எலியாம்மை அதற்குப் பிறகு ஒன்றுமே சொல்லவில்லை. அவள் அசையாது உட்கார்ந்தாள். அறையில் அமைதி குடிகொண்டது. கடிகாரம் காலத்தின் வேகமான போக்கை இடைவிடாது அறிவித்துக்கொண் டிருந்தது.

வர்க்கீஸ் எழுந்திருந்தான். "சகோதரி! நான் போகிறேன். மகுடமும் செங்கோலும் ராணியும் இல்லாத ஒரு ராஜாவும், தியாகத்தின் சிகரத்தை அடைந்த ஒரு மந்திரியும்......சகோதரி! என்றும் என் மந்திரியாக இருப்பாயா?"

"ஆம்; என்றும் நான் உங்கள மந்திரியாக இருப்பேன்." அந்த நித்திய கன்னியின் கண்களிலிருந்து ஒரு சொட்டுக் கண்ணீர் கீழே விழுந்தது.

மௌனமாக அறையி லிருந்து வெளியேறினன் வர்க்கீஸ்; அவன் வேகமாக நடந்தான். வர்க்கீஸை இமை கொட்டாது பார்த்துக் கொண்டு கன்னிமாடத்தின் கதவில் நின்றுள் எலியாம்மை.

யுனைடெட் கமர்ஷியல் பாங்கு லிமிடெட்

2, ராயல் எக்ஸ்சேஞ்சு பிளேஸ், கல்கத்தா

செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 2-கோடி
ரிசர்வ் நிதி ரூ. 30-லட்சம்

ஸ்ரீ. ஜி. டி. பிர்லா
(சேர்மன்)

பி. டி. தாகூர்
ஜெனரல் மானேஜர்

தென் கிளைகளின் தொகுதி:
சென்னை (மெயின்), சௌகார்பேட்டை,
பெங்களூர், கோயம்புத்தூர், மதுரை,
காரைக்குடி, புதுக்கோட்டை, மைசூர்

தென் கிளைகளின் மானேஜர்:
ஸ்ரீ. கே. ஆர். கே. ஐயங்கார்
310-11, லிங்கி செட்டி தெரு,
சென்னை

எல்லாவிதமான நாணயமாற்று அலுவல்களும் வியாபார விஷயங்களும் கையாளுவதற்குத் தகுதியுள்ளவர்கள்

எங்கள்
3 வருட
காஷ் சர்டிபிகேட்டுகளில்
முதலீடு செய்யுங்கள்

இந்தியாவிலும், பர்மாவிலும் கிளைகள் எங்கும் உள்ளன.
உலகம் முழுவதும் ஏஜன்ஸி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

A. S. P. U. C. 6.

பாலஸ்தீனம்

ஜே. ஏ. அட்கின்ஸன்

பாலஸ்தீனத்தின் சரித்திரத்தை ஆதிமுதல் அந்தம் வரை சுருக்கமாகக் கூறும் கட்டுரை இது. பாலஸ்தீனத்தைப் பற்றிப் பத்திரிகைகளில் படிப்பவர்களுக்கு, இக்கட்டுரை குறிப்பிடும் விஷயங்கள் அவசியம் தெரிந்திருக்க வேண்டும். டெய்லி எக்ஸ்பிரஸ்ஸி லிருந்து.

யூத ஏஜென்ஸி: சர்வதேச சங்கம் பிரிட்டனுக்கு எழுதிக் கொடுத்த தர்மகர்த்தா சாஸனத்தின் நாலாவது ஷரத்தின்படி நிறுவப்பட்ட ஒரு ஸ்தாபனம். அதன் வேலைகள்: யூதத் தேசியத் தாயகம் நிறுவும் விஷயத்திலும், பாலஸ்தீனத்தில் உள்ள யூதர்கள் நலன்களிலும் சம்பந்தப்பட்ட பொருளாதார, சமூக நிர்வாகத்துக்கு ஒத்துழைத்து ஆலோசனை கூறுவது.

பாலஸ்தீன அரேபிய மேல் சபைக் கமிட்டி: பாலஸ்தீனத்தில் வசிக்கும் அரேபியர்களின் கொள்கையையும், அரசியல் போக்குகளையும் வகுப்பதற்கென்று ஜெருஸலம் அரேபியத் தலைவர் முப்தி நியமனம் செய்த அரேபியப் பிரதிநிதிகள் சபை.

ஸ்டெர்ண் கும்பல்: பயங்கரச் செயல்களைச் செய்து காரியம் சாதித்துக்கொள்ளலாம் என்று நம்பும் ஒரு சிறு தீவிரவாதிகள் குழு. யூத அதிகாரிகளை ஏற்றுக்கொள்ளாதவர்கள். ஆப்ரஹாம் ஸ்டெர்ண் என்ற அவர்களின் தலைவரின் பெயரைத் தம் கட்சிக்குச் சூட்டிக்கொண்டிருப்பவர்கள்.

இர்குன் ஸ்வாய் ல்யூமி: இந்த ஹீப்ரு பதங்களுக்குத் "தேசிய ராணுவ ஸ்தாபனம்" என்று பொருள். ஆயுதம் தாங்கிய தீவிரவாதிகள். யூத ஏஜென்ஸியையும் பாலஸ்தீனத்திலுள்ள யூததேசிய ஸ்தாபனங்களையும் மறுப்பவர்கள்.

ஹகானு: இந்த ஹீப்ரு சொல்லுக்குப் "பாதுகாப்பு" என்று பொருள். வெளித் தாக்குதல்களினின்றும் தங்களைப் பாதுகாத்துக்கொள்ளப் பாலஸ்தீன யூத ஆண் பெண்கள் அமைத்துக்கொண்ட ஸ்தாபனம்.

பிரிவினை: பாலஸ்தீனத்தை யூத சுதந்திர நாடாகவும், அரேபிய சுதந்திர நாடாகவும் இரண்டாகப் பிரிக்க ஏற்பட்ட திட்டம்.

பாரசீகர்கள், அஸீரியர்கள், எகிப்தியர்கள், கிரேக்கர்கள், இஸ்ரவேல் வம்சத்தினர் ஆகிய எல்லோரும் பாலஸ்தீனத்தில் படை எடுத்தார்கள். ஆயிர வருஷகாலம் இப்படி ராஜ்யங்கள் ஏற்படுவதும் வீழ்வதுமாக இருந்தன. கடைசியில் அன்டியோகஸ் என்பவன் ஸிரியாவி லிருந்து படையெடுத்து வந்தான். இதை எதிர்க்க யூதர்களின் ஒன்று சேர்ந்த இயக்கம் ஏற்பட்டது—இது கிறிஸ்து பிறக்க 165 வருஷங்களுக்கு முன் நடந்தது. யூதர்களின் தலைவர் ஒரு பாதிரியாரின் குமாரராகிய ஜூடாஸ் மார்க்க

பஸ் (சம்மட்டி) என்பவர். அவர் தலைமையில் யூதர்கள் அன்டியோகஸ் படைகளைச் சிதற அடித்தனர். ரோமுக்குச் சென்று ரோமானியர்கள் உதவியை நாடினர். உதவியும் கிடைத்தது. ஆனல், ரோமானியர்களும் பாலஸ்தீனத்தைப் பிடிக்க நினைத்து, ஜெருஸலம் நகரை டைடஸ் என்ற தளகர்த்தன் தலைமையில் படைகளை அனுப்பி, வெற்றி பெற்று ஆயிரக்கணக்கான யூதர்களையும் அடிமைப்படுத்தினர். ரோமானியர்கள் ஆட்சி 600 வருஷ காலம் நடைபெற்றது. அப்புறம் ரோம சாம்ராஜ்யம் கீழைப் பகுதியில் வீழ்ச்சி யுறவே, பாலஸ்தீனத்தை அரேபியர்கள் படையெடுத்தனர். கி. பி. 636-லிருந்து அரேபியர்கள் பாலஸ்தீன மலைப் பிராந்தியங்களில் கணவாய்களில் வசித்து வந்தனர்.

மதப்போர்கள்: துருக்கி 1072-ல் பாலஸ்தீனத்தில் படை யெடுத்து ஆயிரக் கணக்கான கிறிஸ்தவர்களைக் கொன்று, ஜெருஸலம் நகரையும் சூறையாடினர். ஆகவே துருக்கியை எதிர்த்து மேலை நாடுகள் முழுவதும் போர் தொடுத்தன. பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி முதலிய நாடுகள் பத்துத் தடவைகள் தம் கஜானாப் பணத்தை எல்லாம் இந்தப் போராட்டத்தில் கரியாக்கின. கடைசியில் மேல் நாடுகளுக்கே வெற்றி. ஆகவே ஜெருஸலம் மன்னராகக் காட்ப்ரேடி பௌலன் முடிசூட்டப்பட்டான். இந்த ஆட்சிக் காலம் 88 வருஷம் நீடித்தது. கடைசியில் துருக்கர்கள் 1187-ல் இந் நாட்டைக் கைப்பற்றினர்.

நெப்போலியன்: மங்கோலியர்களும் எகிப்தியர்களும் வந்தார்கள். ஆனலும் 1516 வரையில் துருக்கர்கள் ஆட்சிதான். பிறகு துருக்கர்களின் குடியேற்ற நாடானது. 1798-ல் நெப்போலியன் பாலஸ்தீனம் மீது படையெடுத்து, துருக்கியிலும் பிரவேசித்தான். பிரிட்டிஷ் படையின் தலையீட்டினல் நெப்போலியன் பின்வாங்கவே துருக்கர்கள் பழையபடியும் நிலை பெற்றனர். பிறகு துருக்க சாம்ராஜ்யம் பலஹீனமடையவே பாலஸ்தீனம் ஐரோப்பாக் கண்டத்தின் குடியேற்ற நாடானது. ருஷ்யர்கள், பிரெஞ்சுக்காரர்கள், அமெரிக்கர்கள் ஆகியோர் நூறு வருஷ காலம் இந் நாட்டில் வந்து வியாபாரம் செய்தனர். 1898-க்குப் பின் ஜெர்மானியர்கள் பாலஸ்தீனத்தின் அழகிலும், பக்கத்தில் பாரசீகத்தில் இருந்த எண்ணெய்ச் செல்வத்திலும் நாட்டம் வைத்து இந் நாட்டுக்கு வந்தனர்.

உலக மகா யுத்தம்: புதிய யூத இயக்கத்தின ஸ்தாபகராகிய தியோட் ஹெர்ஸ்ல் என்பவர் 'பாலஸ்தீனத்தில் யூதத் தாயகம் வேண்டும்' எனக் கோரிக்கை விடுத்தார். இதை உலகம் கவனிக்கவில்லை. இந்த நிலையில் 1914-ம் வருஷம் மகா யுத்தம் தொடங்கியது. துருக்கியர்களைப் பாலஸ்தீனத்தில் திணிக்க ஜெர்மனி படை யனுப்பியது. பிரிட்டன் இதை எதிர்த்துத் தன் பட்டாளங்களை அனுப்பியது. யூதர்கள் யுத்தத்தில் பலஹீனம் அடைந்தனர். யுத்தத்தின் பிறகு யூதர்களுக்கு என்று ஒரு பிரிட்டிஷ்நிர்வாகம் அமைக்கப்பட்டது. ஆனல், யூதர்கள் தங்களுக்குத் தம் நாடு வேண்டுமென்று கேட்கவே பிரிட்டன் அவர்கள் அபிலாஷைகளை அறிந்துவருவதற் கென்று தன் அந்நிய நாட்டு மந்திரியாகிய

ஆர்தர் பால்பௌர் என்பவரை அனுப்பி வைத்தது.

"பிரிட்டிஷ் அரசாங்கம் யூதத் தாயகம் நிறுவும் விஷயத்தில் தன்னாலான உதவி யெல்லாம் செய்யும். யூதர்களல்லாத பாலஸ்தீன மக்களின் எந்த உரிமையையும் பறிக்காது......"

சர்வதேச சங்க சாஸனப்படி, பிரிட்டன் அரேபியர்களுக்கும் யூதர்களுக்கும் நியாயமாக நடக்க முயற்சி செய்து வந்தது. அதன் பலன் அரேபியர்களின் மனக் குறையே. 1925-ல் மட்டும் 33,801 யூதர்கள் இந்நாட்டில் குடியேறினார்கள். டெல் அவீவை அழகான நகராக்கினர். ஹைபாவில் தொழிற்சாலைகளை நிறுவினர். ஜெருஸலத்தில் ஒரு சர்வகலாசாலை கட்டினார்கள். தேசியத் தாயகம் அமைக்கும் பணியில் ஈடுபட யூத ஏஜென்ஸி நிறுவப்பட்டது.

அரேபியர்கள் யூதர்களை எதிர்த்துப் போர் தொடுத்தனர். ஜெருஸலம் முப்திக்கு ஆதரவளிக்க அரேபிய உலகமே திரண்டது. பிரிட்டன் சமாதானத்தை ஏற்படுத்த முயன்றது. 1936-ல் யூத, அரேபிய அரசாங்கங்களைத் தனித்தனியே ஏற்படுத்த முயன்றது. இதற்கு யூதர்கள் சம்மதித்தனர். அரேபியர்கள் சம்மதிக்கவில்லை; மேலும் மேலும் போராடினார்கள்.

உலக மகா யுத்தம் 2: 1939-ல் யுத்த ஆபத்து நெருங்கியது. அரேபியர்களைத் திருப்தி செய்ய யூதர்கள் நிலம் விற்பதைக் கட்டுப்படுத்தி ஐந்து வருஷ காலத்தில் 75,000 யூதர்களுக்கு மேல் குடியேறக் கூடாதெனத் தடை செய்தனர். வெகு சீக்கிரத்தில் ஜனநாயக சர்க்கார் ஏற்படும் என்று பிரகடனம் செய்தனர். யுத்தத் தடபுடலில் பாலஸ்தீன விஷயம் மூலை சேர்ந்தது. பிறகு ஆங்கிலோ—அமெரிக்கக் கமிஷன் இங்கு வந்து நிலைமையைப் பரிசீலனை செய்து லட்சம் யூதர்கள் உடனே குடியேறுவதைச் சிபார்சு செய்தது. ட்ரூமன் இதற்கு ஆதரவளித்தார். பிறகு ஏற்பட்ட மாரிஸன்-கிராடி திட்டம் ஒரு மத்திய நிர்வாகத்தின் கீழ் யூத, அரேபிய மாகாணச் சுயேச்சை அரசாங்கம் நிறுவ யோசனை கூறியது. மத்திய நிர்வாகம், குடியேற்றம், பாதுகாப்பு விஷயங்களில் மேல் அதிகாரம் பெற்றிருக்கும் என்று கூறப்பட்டது. இந்த ஏற்பாட்டை யூதர்களும் அரேபியர்களும் புறக்கணித்தனர். ஆகவே இன்னும் பாலஸ்தீனப் பிரச்னை முடிவடையாமல் வளர்ந்து கொண்டு வருகிறது.

குறிப்பு: பாலஸ்தீனத்தின் விஸ்தீரணம் 10,429 சதுர மைல். மொத்த ஜனத் தொகையில் 10 லட்சம் அரேபியர்களும், 5 லட்சம் யூதர்களும், பற்பல இனத்தவர்களாக லட்சத்தி மூவாயிரம் பேரும் இருக்கிறார்கள்.

நூற்றாண்டுக்கு ஒரு குழந்தை

பியரி டிபௌள்னல் என்பவர் 129-ம் வயதில் காலமானார். அவர் 120-ம் வயதில் மூன்றாவது தடவையாக ஒரு 19 வயதுள்ள பெண்ணைக் கல்யாணம் செய்தார். அவருடைய மூன்று புதல்வர்களும் மூன்று நூற்றாண்டுகளில் பிறந்தவர்கள். ஒருவன் 1699-லும், மற்றொருவன் 1738-லும் அதற்கடுத்தவன் 1801-லுமாகப் பிறந்தார்கள்.

டிடிடியின்

திறன் முழுதும்..

நியோஸிடில் உள்ளது

10% டி.டி.டி பௌடர்

இது கெய்கி தயாரிப்பு

DJK 602.1 TAM

★ வாரக்கணக்கில் பூரண பலனளிப்பது

★ மெதுவாகவானாலும் நிச்சயம் கொல்லுவது

★ மிருகங்களுக்கு ஹானியற்றது

தென் இந்தியாவுக்கு விநியோகஸ்தர்கள்:
மெஸர்ஸ்
அடிஸன் அண்ட் கோ., லிட்.,
மௌண்ட் ரோட், மதராஸ்

DDT Geigy DDT

மைசூர் சமஸ்தானம், பெல்லாரி ஜில்லாக்களுக்கு
விநியோகஸ்தர்கள்
மெஸர்ஸ் முகமத் ஹலீம் கலீலி,
99-B, ஜும்மான்கான் ரோட்,
பெங்களூர் ஸிடி.

கெய்கி இன்ஸெக்டிஸைட்ஸ் லிட்., நெவில் ஹவுஸ் நிக்கல் ரோட், பெலார்ட் எஸ்டேட், பம்பாய்

சிகரெட் குடிப்பது மனிதனின் இனவிருத்தி செய்யும் சக்தியையும் அழித்து விடுகிறது என்ற அபாயகரமான உண்மையை இப்போது விஞ்ஞானிகள் கண்டு பிடித்திருக்கிறார்கள். அதன் விவரத்தை இக் கட்டுரையில் படியுங்கள்.

புகைக்குடியும் மலடும்

'வைத்தியர்'

நகரங்களெல்லாம் தொழில் மயமாகிவிட்டதாலும், மக்கட் பெருக்கத்தால் ஏற்பட்ட வசதிக் குறைவு காரணமாயும் 'குழந்தைகள் பெறுவது' பெருஞ் சுமையாகிவிட்டதாகப் பெரும்பாலும் கருதப்படுகின்றது. மற்றும் மக்கள் கர்ப்பத்தைத் தடுப்பதற்கான வழி வகைகளையும் கற்றுள்ளனர்.

ஆனல், இந்தக் காரணங்கள் மட்டுமே உற்பத்திக் குறைவுக்குக்காரணம் அல்லஎன்பதைவிஞ்ஞானம் வெளிப்படுத்திவிட்டது. புகையிலையிலிருந்து வரும் 'நிகோடின்' என்ற மயக்கப் பொருளால் ஆண்மை குறைந்து, அதன்விளைவாகப் பிரஜோற்பத்தி பாதிக்கப்படலாம் என்று விஞ்ஞானம் நிரூபிக்கிறது.

சிகரெட்டைக் கல்லறையிலறையப்பட்ட ஆணிக்கு ஒப்பிட்டாலும்,அது அவ்வளவு தீங்குபயப்பதல்ல என்று நம்புகிற அளவுக்கு மக்கள் மன்றத்திலே அது இடம் பெற்றுவிட்டது. சிகரெட் ஆண்மைக்கு ஓர் அபாய அறிவிப்பு என்ற உண்மையை வெளிப்படுத்த இன்று ஆராய்பவர்கள் பாரபட்சமற்ற விஞ்ஞானிகளே தவிரச் சீர்திருத்த வாதிகளல்ல.

(1) 'நிகோடின்' உட்செலுத்தப்பட்ட பிராணிகள், சாதாரணப் பிராணிகளைக் காட்டிலும் உற்பத்திச் சக்தியில் குறைந்து காணப்படுகின்றன.

(2) இந்தக் குறைபாடு வழி வழியாகச் சந்ததிகளுக்கும் தொடருகிறது.

(3) மிருகங்களைவிட மக்கள் அதிகமாகப் பாதிக்கப் படுகின்றனர்.

(4) புகைபிடிக்கும் பழக்கமேற்பட்ட பிறகு ஓர் இளைஞன் தன் உயிரணுவின் வீரியத்தை இழந்தான்.

'நிகோடின்' கலந்துள்ள சிகரெட், உற்பத்திச் சக்தியைக் குலைக்கிறது என்ற உண்மைக்கு மேற்கண்ட குறிப்புகள் அரண் செய்வனவாகும்.

தென் கலிபோர்னியாவில் ஒரு விஞ்ஞானக் குழுவினர், ஆய்வுக் கூடத்தில் சுமார் 4000 மிருகங்களைக் கொண்டு இவ் விஷயத்தை ஆராய்ந்து, 'நிகோடின் இனவிருத்தி உறுப்புக்களைப் பெரிதும் பாதிக்கிறது' என்று கண்டிருக்கின்றனர். எலிகளின் உதவியைக் கொண்டே முக்கியமாக இம் முடிவுக்கு வந்தனர். பிரிவு பிரிவாகப் பிரித்து வைத்து, ஒரு பிரிவுக்கு 'நிகோடின்' உட்

செலுத்தி, இரு பிரிவுகளுக்கும் வேண்டிய அளவு உணவும் தந்து, ஒரே அளவான சீதோஷ்ணத்தையும் அமைத்துப் பார்த்ததில் 'நிகோடின்' உட்கொண்ட எலிகள் உற்பத்திச் சக்தியை இழந்ததோடல்லாமல், அப்பிரிவிற்குப் பிறக்கும் சிறு குட்டிகளும் பாதிக்கப்பட்டிருந்தன.

மனிதர்கள் எலிகளைப் போல் அவ்வளவு சுலபமாகப் பாதிக்கப்பட மாட்டார்கள் என்றும், புகை பிடிக்கும்போது சிகரெட்டி லுள்ள எல்லா 'நிகோடி' னும் உடலுக்குள் செல்லுவதில்லை என்றும், புகைக் குடியர் பெருமையாக வாதாடுவர். ஆனால், அவர்களுடைய வாதம் அபத்தமானது என்பதை ஆக்ஸ்போர்டு விஞ்ஞானிகள் பல ஆராய்ச்சிகள் செய்து மறுத்திருக்கின்றனர்.

மனிதவர்க்கத்தைப் பொறுத்தவரை 'நிகோடின்', மனிதனின் சிறுநீரின் போக்கை மாற்றிவிடுகிறது. ஒரு மனிதன் காலி வயிற்றில் சூடான தண்ணீர் சாப்பிட்ட 15 நிமிடங்களில் அந் நீர் சிறுநீராக வெளிவருகிறது. அதே மனிதன் நீர் உட்கொண்ட பிறகு 3 சிகரெட்டுகள் உறிஞ்சினன்; அவனுக்கு $3\frac{1}{2}$ மணி நேரம் சிறுநீரே வெளிவரவில்லை. மனிதனின் உடற்கூற்றைப் பொறுத்து நேரம் வேறுபடலாமே ஒழிய, புகை பிடிப்பதால் அவன் பாதிக்கப்படுவது மறைக்கவோ, மறுக்கவோ முடியாத உண்மையாகும்.

புகை பிடிப்பதால் மனிதன் எலிகளைவிட மிகச் சீக்கிரமாகத் தாக்கப்படுகிருன் என்பதும் மூளைக் கோளாறை ஏற்படுத்தி விடும் என்பதும் ஒப்புக்கொண்ட முடிவுகளாகும். ஒரு நாளைக்கு 40 சிகரெட் குடிப்பவன் உட்கொள்ளும் 'நிகோடின்' எலிகளைச் சக்தியற்றவைகளாகவோ, சிதைக்கப்படவோ செய்கிறதென்ருல் மனிதனை எவ்வளவு பாதிக்கும் என்பதை நினைத்துப் பாருங்கள்.

இதை வலியுறுத்த ஆக்ஸ்போர்டு விஞ்ஞானிகள் ஒரு யந்திரத்தைக் கண்டுபிடித்தனர். அந்த யந்திரம் ஒவ்வொரு சிகரெட்டிலும், ·6-லிருந்து ·75 மி.கி. அளவு 'நிகோடின்' உண்டெனக் காண்பித்தது.

புகை பிடிப்பதால் மட்டும் எந்த அளவு 'நிகோடின்' உட்செல்லுகிறது என்பதே இப்போதைய பிரச்னை. மனித வர்க்கம்தான் அதிகமான அளவு புகையை வெளிக் காற்ருேடு சேர்க்கிறதென்றும், திராவக 'லாகிரி' களின் கூட்டுச் சரக்கே சிகரெட் என்றும் பெரும் அறிஞர்கள் கூறும் உண்மைகளாகும்.

ஓர் இளைஞன் தாதுவிலுள்ள உயிரணுக்கள் பூதக் கண்ணுடியின் மூலம் சோதிக்கப்பட்டன. அவன் புகை பிடிக்காதபொழுது அவன் உயிரணுக்களிலுள்ள ஆண் உயிர்கள் உயிரோடு அசைந்து கொண்டே இருந்தன. அவன் மீண்டும் புகை பிடிக்க ஆரம்பித்த பின்னர், அதே அணுக்கள் அசையாமல் நின்றிருந்தன—அசையச் சக்தியில்லாமல்.

தற்கால மனிதனின் ஆண்மைக்கு உலை வைப்பதோடு, 'நிகோடின்' சந்ததிகளையும் தொடருகிறது. இது உண்மையா என்பதே இப்போதைய கேள்வி. மேற்கண்ட உண்மைகளைக் கொண்டு பார்த்தால், சிகரெட் ஆண்மையையும், இன விருத்தி செய்யும் சக்தியையும் அழிக்கக் கூடியது என்றுதான் உறுதியாய் சொல்லத் தோன்றுகிறது.

ருஷ்ய எழுத்துலகம்

அ. சிங்காரவேலு

> அற்புதமான இலக்கியங்களைச் சிருஷ்டித்த இந்திய எழுத்துலகம் 'நித்திய கண்டம் பூர்ண ஆயுள்' என்று தான் வாழ்க்கை நடத்துகிறது. தரித்திரத்தினுல் இலக்கியம் பாழாவதுடன், பொதுமக்களின் குறைதி சயங்களுக்கும் ஆபத்து வந்து விடுகிறது. இப்படிப்பட்ட பல குறைகளற்ற ருஷ்ய எழுத்துலகத்தை முன் மாதிரியாகக் கொண்டு நம் எழுத்துலகத்தைச் சீர்திருத்தும் பணியை நாம்மேற்கொள்ளவேண்டும்.

நாகரிகம், கல்வி, பொருளாதாரம் ஆகிய துறைகளில்மட்டுமின்றி எழுத்துத் துறையிலும் நாம் மூக்கின்மேல் விரல் வைத்துப் பிரமிக்கத்தக்க அளவில், உலகத்தில் எந்த ஒரு நாட்டிலும், எந்த ஒரு பகுதியிலும் காண முடியாத அளவு, கற்பனை செய்யக்கூட முடியாத அளவு, இந்த இருபது இருபத்தைந்து வருட வாழ்விற்குள் ருஷ்யா முன்னேறியிருக்கிறது.

பத்திரிகைகள்: ருஷ்யப் புரட்சிக்கு முன்னுல், அல்லது அந்தப் புரட்சி காலத்தில், சுமார் 859 பத்திரிகைகளே ருஷ்யாவில் நடந்து வந்தன. அவ்வளவுக்கும் சேர்த்துப் பார்த்தாலும் சுமார் முப்பது லட்சம் பிரதிகள்கூடச் செலவழிய வில்லை.

இப்பொழுது அதே ருஷ்யாவில், ஆனல் மாபெரும் அப் புரட்சிக்குப் பின்னே, சுமார் 70 பாஷைகளில், 9000 பத்திரிகைகள் அச்சாகின்றன. 38,000,000 பிரதிகள் விற்கப்படுகின்றன. இதில் சுமார் ஒரு கோடி (தினசரி) பத்திரிகைகள் மாஸ்கோ நகரில் மட்டும் செலவாகின்றன. (ருஷ்யாவின் மொத்த ஜனத்தொகையே சுமார் 19 கோடி தான் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.)

பெரிய புள்ளி விவர நிபுணர்கள் மற்ற நாடுகளோடு ஒப்பிட்டு ருஷ்யப் பத்திரிகைகள், ருஷ்யக் கலை, நூல்கள் ஆகியவை சுமார் முப்பது மடங்கு அதிகம் எனக் கூறுகின்றூர்கள்.

மாஸ்கோவில் வெளியாகும் "இஸ்வெஸ்தியா" என்ற பத்திரிகை மட்டும் 15 லட்சம் பிரதிகள் (யுத்தத்திற்கு முன்பே) அச்சாகி, விற்பனையாயின. கம்யூனிஸ்டுக் கட்சியின் "பிராவ்தா" என்ற பத்திரிகை மட்டும் 25 லட்சம் பிரதிகள் வெளியிடுகின்றது. "பிராவ்தா" என்ற வார்த்தைக்கு "உண்மை" என்று பொருள்படும். வாலிபர்களுக்கென வெளியிடப்படும் "கோம்சோ மோல்ஸ்விக்யா பிராவ்தா" என்ற பத்திரிகைமட்டும் $7\frac{1}{2}$ லட்சம் பிரதிகள். வெளியிடுகின்றன. குழந்தைகளுக்கென வெளியிடப்படும்'பயனர்ஸ்கயா' என்ற(தினசரி) பத்திரிகைப் பிரதிகள் மட்டும் சுமார் 10 லட்சம் அச்சாகின்றன.

ருஷ்யாவில் இருக்கும் "டாஸ்" என்ற செய்தி ஸ்தாபனம்தான் நேர்மையான முறையில் செய்திகள் கொடுக்கும் மிகச் சிறந்த ஸ்தாபனம்எனக்கூறப்படுகிறது. இதற்கு இணையாக வேறு எந்த ஒரு செய்தி ஸ்தாபனமும் அவ்வளவு மிகப் பெரிய அளவில் திறம்பட நடத்தப்படவில்லை.

எழுத்தாளர்கள்: சுமார் 50,000-க்கு மேற்பட்ட எழுத்தாளர்கள் இன்று ருஷ்யா

வில் இருக்கிருர்கள். எழுத்தாளர்கள்என்ருல் நம் தமிழகத்தில் பாவிக்கப் படுவதைப் போன்று அங்கே இருக்க மாட்டார்கள். மாக்ஸிம் கார்க்கி சொன்னதைப்போல் ருஷ்ய எழுத்தாளர்கள் மனித ஆத்மாவின் வழிகாட்டிகளாக விளங்குகிருர்கள். அங்குள்ள எழுத்தாளர்களின் லட்சியம், எழுத்தாளர்கள் சங்கத் தலைவர் சொல்லுகிறபடி ஒன்று, "உண்மையை எடுத்துச் சொல்லுதல்"; இரண்டு "சோவியத் மக்களின் இதயத்தையும், அவர்கள் ஆத்மாவையும் உணர்தல்."

ருஷ்ய எழுத்தாளர்கள் நூல் எழுதும் விஷயம், மிகச் சிலாகிக்கத் தக்கதும் இன்றைய தமிழ் எழுத்தாளர்கள் முற்றிலும் அறிந்துகொள்ள வேண்டியதுமாகும். எழுத்தாளர் ஒருவர் ஒரு நூல் எழுதினுல், அதைப் பிரசுரத்திற்கு அனுப்பு முன், அந் நூலில் அவரே நுணுக்கமாகக் குற்றங்களை ஆராய்வார்; அவற்றைக் களைவார்; தாமே விமர்சகராக நடந்துகொள்ளுவார்!

பின் அதை எடுத்துக்கொண்டு போய்ப் பிரசுராலயத்தினரிடம் காண்பிப்பார். அவர்கள் அதனை ஏற்றுக்கொள்ளலாம்; ஏற்றுக்கொள்ளாமலு மிருக்கலாம். பின் அவரது நண்பர்களிடமும், விமர்சகர்களிடமும் அந்த நூலின் ஒரு பகுதியையோ, சில பகுதிகளையோ படித்துக் காண்பிப்பார். அவர்கள் அதைப் பற்றி விவாதித்துக் குறைகளை எடுத்துச் சொல்லுவார்கள்.

அதோடும் நின்றுவிடுவதில்லை. பத்திரிகைகளில் அதன் ஒரு பகுதியையோ, சில அத்தியாயங்களையோ வெளியிடுவார்கள்; அது பகிரங்க விமர்சனத்திற்கு உரியதாகும். அதன்பின் எழுத்தாளர் சங்கக் கூட்டத்தில் அதைக் கொண்டுபோய், அவர் விரும்பும் சில இடங்களைப் படித்துக் காண்பிப்பார். அதைப்பற்றி விவாதம் ஏற்படும். எழுத்தாளர் (அதனை எழுதியவர்) அவற்றை எல்லாம் கேட்டுக்கொண்டு, இவ்வளவுக்கும் லாயக்கானதாக, சிறந்ததாக இருக்குமானுல் பின்னரே அது பிரசுரத்திற்குத் தகுதியானது என்று முடிவு செய்வார்.

"அச்சு எழுத்துக்கள்தான், கம்யூனிஸ்டுக் கட்சியின் கூரிய, மிகச் சக்தி வாய்ந்த ஆயுதம்" என்று ஸ்டாலின், புத்தக வெளியீட்டைப் பற்றிச் சொல்லும் பொழுது கூறுகிருர். பிறகு, அந்த நூல் "சென்சா"ருக்கு அனுப்பப்படும். ருஷ்யாவில் நூல்களைப் பரிசோதித்து வெளியிடுவதற்கெனக் 'கிலாவ்லிட்' என்ற ஒரு ஸ்தாபனம் இருக்கிறது. அந்த ஸ்தாபனத்தின் அங்கீகாரத்துக்குப் பின்னரே அந் நூல் எழுத்தாளரின் (எழுதிய ஆசிரியரின்) கை யொப்பத்துடன் வெளி வரும்.

இவ்வளவு கஷ்டமிருந்த போதிலும், அங்கே ஏராளமான சௌகரியங்கள் கிடைக்கின்றன. எழுத்தாளர் கேட்கும் யோசனைகளை, அவருக்குத் தேவைப்படும் விஷயங்களை, ஆதாரங்களை யாரும் முன்வநது கொடுக்கத் தயங்க மாட்டார்கள். ருஷ்ய மக்கள் தங்கள் நாட்டின் எழுத்தாளர்களை மிகச் சிரேஷ்டமாக நினைக்கின்ருர்கள்.

உதாரணமாக, ருஷ்யப் பெண் எழுத்தாளர் ஒருவர் ஸ்டாலின் பிறந்த இடமான ஜியார்ஜியாவைப் பற்றிய ஒரு நாவல் எழுதிய காலத்தில் ஸ்டாலினே அவர் எழுதுவதைப் பிரமாதமாகப்

பாராட்டி, தாம் பிறந்த இடத்தைப் பற்றிய பல அரிய விஷயங்களை அவருக்குக் கொடுத்து உதவினாராம். அந்த அம்மை எழுதும்போதெல்லாம், அவருக்கு விஷயங்கள் தேவைப்படும் போதும், சந்தேகங்கள் உதிக்கும்போதும் உடனுக்குடன் ஸ்டாலினை டெலிபோனில் கூப்பிட்டுக் கேட்பாராம். ஸ்டாலின் கொஞ்சம்கூடச் சிரமம்கருதாது, இரவு ஒரு மணிக்குக்கூடத் தமக்குத் தெரிந்த யோசனைகளைச் சொல்லி உதவுவாராம்.

புத்தகங்கள்: இப்படியே மிகச் சிறந்த முறையில் புத்தகங்கள் உருவாகின்றன. ருஷ்யாவில் நூல் நிலையங்களும், அச்சகங்களும், பிரசுராலயங்களும் ஏராளமாய் இருக்கின்றன.

ருஷ்யாவில் மிகப் பெரியதான 'ஓசிஸ்' என்ற பிரசுராலயத்தின் கிளைகள் மட்டும் நூற்றுக் கணக்கில் இருக்கின்றன. இதில் தான் பெரும்பாலான நூல்கள் வெளியிடப்படுகின்றன. 'ஓசிஸ்' என்ற ருஷ்ய விலாசத்திற்கு அரசாங்க வெளியீட்டுக்களின் இணைப்பு என்று பொருள்படும். இந்தப் பிரசுராலயத்திற்கு 14 அச்சகங்கள் இருக்கின்றன. மாஸ்கோவில் உள்ள ''மாடல் பிரின்டரி'' என்ற அச்சகத்தில் மட்டும் 2000 பேர் வேலை பார்க்கிறார்கள். லெனின்கிராடிலுள்ள ''பிரின்டிங் ஹவுஸ்'' ஒரு வருடத்திற்கு முன்வரை இரண்டு கோடியே நாற்பது லட்சம் கோடி பக்கங்கள் (2400000,00000000) அச்சிட்டு வெளியிடுமாம். அதற்கு 3000-த்துக்கு அதிகமான புத்தகக் கடைகள் இருக்கின்றன. எவ்வளவு ஆசிரியர்கள் இருந்தபோதிலும், பதிப்பாசிரியரின் கையெழுத்து இல்லாவிட்டால் ஒரு புத்தகம் கூட அச்சிடவே முடியாது.

பழைய, புதிய ருஷ்ய நூல்கள் மட்டுமின்றி, பிற நாட்டு நல்லறிஞர் நூல்களையும் ஏராளமாக மொழிபெயர்த்து வெளியிடுகின்றார்கள்.

ஷேக்ஸ்பியரின் நூல்களை மட்டும் ருஷ்யாவில் பதினேழு பாஷைகளில் மொழிபெயர்த்திருக்கின்றார்கள். 1917 முதல் 1944 வரை, ஷேக்ஸ்பியரின் நூல்கள் மட்டும் சுமார் 15 லட்சம் பிரதிகள் விற்பனையாகியிருக்கின்றன.

''ஒத்தெல்லோ'' என்ற ஷேக்ஸ்பியரின் சிறந்த நாடகம் ஒரு லட்சம் பிரதிகள் செலவாகியிருக்கின்றன; ''ரோமியோவும், ஜூலியட்டும்'' 127,000 பிரதிகள் செலவழிந்திருக்கின்றன.

ஐரோப்பிய இலக்கியத்தை மட்டுமின்றி, உலகத்திலுள்ள சிறந்த நூல்கள் எல்லாவற்றையுமே மொழிபெயர்த்து வெளியிடுகிறார்கள்.

இந்திய நூல்கள் சில ஏற்கெனவேயே மொழிபெயர்த்து வெளியிடப்பட்டிருக்கின்றன. இந்திய மாபெரும் காவியமாகிய ''மகாபாரதம்'' கடந்த சில வருடங்களாக மொழிபெயர்க்கப்பட்டு வருகின்றது. பேராசிரியர் வி. கல்யானோவ் என்பவர் சோவியத் அகாடமியின் ஆதரவில் மொழிபெயர்ப்புச் செய்துவருகிறார். ''டாஸ்'' ஏஜென்ஸியாரின் செய்திப்படி மகாபாரதத்தை 18 பாகங்களாகப் பிரித்து மொழிபெயர்த்து வருகின்றார்கள். 1943-லேயே ''ஆதிபர்வம்'' முடிந்துவிட்டது. அதன் பொருட்டு ருஷ்ய மொழிபெயர்ப்பாளர்கள் இந்தியாவில் உள்ள

சில சமஸ்கிருதப் பண்டிதர்களின் உதவிகளை நாடி, ஒத்துழைப்புடன் நடத்தி வருகிறார்கள்.

தற்போது, சமீபத்தில்தான் "லைலா—மஜ்னூன்" என்ற பாரஸீகக் கவியின் காதல் சித்திரம் ருஷ்ய மொழியில் மொழி பெயர்க்கப்பட்டு வெளி வந்திருக்கிறது.

வாசகர்கள்: ஸ்மைல்ஸ் என்ற ஆங்கில ஆசிரியர் வாசக நேயர்களைப்பற்றிக் கூறும்போது "காலத்தை மிகவும் மிச்சப்படுத்த நினைக்கிறோம்; பிரெஞ்சு லத்தீன் போன்ற பாஷைகளை எல்லாம் 12 பாடத்திலேயே படித்துவிட வேண்டுமென்று நினைக்கிறோம். அல்லது உபாத்தியாயர் இல்லாமலேயே நாமே படித்துக்கொண்டு விட வேண்டுமென்றுகூட நினைக்கிறோம். சில பிரசங்கங்களைக் கேட்டுவிட்டு கலை, ரசாயனம் எல்லாமே நாம் தெரிந்து கொண்டுவிட்டதாக நினைக்கிறோம்..." என்கிறார். ஆனால் ருஷ்ய வாசகர்கள் இந்த வர்ணனைக்கு முற்றிலும் புறம்பானவர்கள்; "ஒரு புத்தகத்தைப் படிக்க ஆரம்பித்தால் அதன் முடிவுவரை படி; அதைப் படித்துப் பூரா விஷயங்களையும் கிரகித்துக் கொள்ளாதவரை அதைப் படித்ததாக நினைக்காதே. எதைப் படித்தாலும் முழுக் கவனத்தையும் செலுத்திச் சரியாகப் படி" என்ற பக்ஸ்டன் உபதேசத்தை மேற்கொண்டவர்கள். 'டைம்' (Time) என்ற பத்திரிகையின் மாஸ்கோ நிருபரான ஜான் ஹெர்ஸி (John Hersey) என்பவர் ருஷ்ய வாசகர்களைப் பற்றிக் கூறும்பொழுது, "அவர்கள் அறியாமையை ஆழக் குழி தோண்டிப் புதைத்துவிட்டார்கள். அவர்களது இலக்கியப்பற்று நம் கற்பனைக்கும் எட்டாதது" என்றெல்லாம் வர்ணிக்கின்றார்.

எல்லாப் பிரசுராலயத்தினரும் ருஷ்ய வாசகர்களின் ஆவலைப் பூர்த்தி செய்ய இயலாமைக்கு வருந்துகிறார்கள். வாசகர்களின் புத்தகத் தேவையைத் திருப்தி செய்ய இன்னும் சில வருடங்களாகிலும் செல்லுமாம். அவ்வளவு கிராக்கி இருக்கிறது புத்தகம் என்றால்!

மார்க்கெட்டில், புத்தகக் கடைகளில், புத்தகம் கிடைப்பது மிகவும் அரிதாகும். கடைக்கு வந்த சில மணி நேரத்திற்கெல்லாம், எல்லாப் புத்தகங்களும் பறந்துபோய்விடுமாம். புத்தகப் பிரசுராலயத்தினர், தங்கள் வெளியீட்டின் முக்கால் பாகத்தை வாசகசாலைகளுக்கு நேரே அனுப்பிவிடுவார்கள். மற்றும் கால்பாகத்திற்கு அரசியல்தலைவர்கள், எழுத்தாளர்கள், டாக்டர்கள், விஞ்ஞானிகள், ராணுவத்தினர், என்ஜினியர்கள் ஆகியோர் முன் பணமாகச் சந்தா கட்டி, ஜாபிதாவில் சேர்ந்திருப்பார்கள். இவர்களுக்கெல்லாம் கொடுத்து மீந்தால்தான் புத்தகக் கடைக்குப் புத்தகங்கள் விற்பனைக்கு வரும். கடைக்கு வருவதுதான் தாமதம். உடனேயே எல்லாம் விற்பனையாகிவிடும்.

புத்தகம் வெளியிடும் பொழுது, இந்தப் புத்தகம் எவ்வளவு வெளியிடலாம், எந்த மாதிரி அளவில் வெளியிடலாம் என்று யோசிக்கமாட்டார்கள். அதற்குப் பதிலாக இந்தப் புத்தகம் எவ்வளவு முக்கியம், எவ்வளவு பயனுள்ளது என்பதைப் பொறுத்தே வெளியிடுவார்கள்.

கடைகளில் விற்கப்படும் நாவல்களின் கிரயம் சராசரி 10 ரூபிள் ஆகும். (ரூ. 15/—சுமார்)

தென் இந்திய நரகம்

பா. ராகவராஜ்

> தேயிலை, ஏலம், ரப்பர் முதலியன விளைவிக்கும் தோட்டங்களில் கங்காணிகள் மூலம் ஆட்களைப் பிடித்துக்கொண்டு போய் மிருகத்தனமாக வேலை வாங்கும் முறை இன்னும் ஒழியவில்லை என்பதை இக்கட்டுரை ஞாபகமூட்டுகிறது. இப்படிப்பட்ட கொடுமையான பழக்கத்தையும், இப்படி எண்ணற்ற மக்கள் சகிக்க முடியாத துயரத்துக்குள்ளாவதையும் வேறு எந்தத் தொழிற்சாலையிலும் காண முடியாது. இந்தக் கொடிய பழக்கத்தை நிறுத்தித் தொழிலாளர்களைக் காக்க வேண்டிய பொறுப்பை அரசாங்கம் உடனே மேற்கொள்ள வேண்டும்.

மேற்குத் தொடர்ச்சி மலையில் மூவாயிரம் அடி உயரத்திற்குமேலுள்ள இடங்களில், முப்பது அடி முதல் நூற்றைம்பது அடிவரை உயரமுள்ள மரங்கள் அடர்ந்த காடுகளில், வருஷத்தில் நூறு அங்குலத்திற்கும் அதிகமாக மழை பெய்யும் இடங்களில், வெயில் படாத இடங்களில் உள்ள ஏலத் தோட்டங்களில் அரை லட்சம் தமிழர்கள் வேலை செய்து மடிந்துகொண்டிருக்கிறார்கள்.

காப்பி, தேயிலை, ரப்பர், கரும்புத் தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களின் நிலைமையிலும் படுமோசமானது ஏலத் தோட்டத் தொழிலாளர்களின் நிலைமை. அங்கே, ஆனி, ஆடி, ஆவணி மாதங்களில் மழைபெய்துகொண்டிருக்கும். புரட்டாசி ஐப்பசி கார்த்திகை மாதங்களில் மழை பெய்யும் நாட்கள்தான் அதிகம். வருஷத்தில் பாதி நாட்கள் மழை பெய்துகொண்டிருக்கும்.

அந்தத் தோட்டக் காடுகளில் அட்டைகள் ஏராளமாக இருக்கின்றன. காட்டு யானைகள் கூட்டமாகச் சஞ்சரித்துக்கொண்டிருக்கும். கரடி, புலி, செந்நாய், மான், கிளையாடு முதலிய காட்டு மிருகங்களும் வாழ்கின்றன. மிருகங்களின் தொந்தரவைத் தடுப்பதற்காகக் குடியிருப்புகளைச் சுற்றிலும் மிருகங்கள் தாண்ட முடியாதபடி அகழ் வெட்டியிருக்கிறார்கள். இந்தக் காடுகள் பெரும்பாலும், திருவாங்கூர் சமஸ்தானத்தைச் சேர்ந்த தேவிகுளம், பீர்மேடு தாலுகாக்களிலிருக்கின்றன. இந்தக் காடுகளுக்கு அடுத்தாற்போல் தேயிலைத் தோட்டங்களிருக்கின்றன. இந்தியாவில் 1,15,170 ஏக்கர்களில் ஏலம் பயிர் செய்யப்படுகிறது. இதில் 49 சத விகிதம் சென்னை, குடகு காடுகளிலும், 51 சத விகிதம் திருவாங்கூர் காடுகளிலும் பயிராகின்றன.

சுமார் 2500 பேர்களுக்கு ஏலத் தோட்டங்கள் சொந்தமாயிருக்கின்றன. இதில் 50 ஏக்கருக்குக் குறைவாயுள்ளவர்கள் அதிகம். ஆனால், அதிகமான ஏக்கர்கள் ஒரு சிலருக்குச் சொந்தமாயிருக்கின்றன. மதுரை ஜில்லா, பெரியகுளம் தாலுகாவில் மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரங்

களி லுள்ள போடி, தேவாரம், பண்ணைப்புரம், கோம்பை, உத்தமபாளையம், கம்பம், கூடலூர் முதலிய ஊர்களிலுள்ளவர்களுக்கு, பெரும்பாலான ஏலத் தோட்டங்கள் சொந்தமாயிருக்கின்றன. ஒரு சில ஆங்கிலேயர்களும் மலையாளிகளும் தோட்ட முதலாளிகளாயிருக்கிறார்கள்.

50 ஏக்கருக்கு அதிகமாயுள்ள தோட்ட முதலாளிகள், வேலைகளைக் கவனிப்பதற்கு, சூப்பரிண்டெண்ட், ரைட்டர் போன்ற உத்தியோகஸ்தர்களை வைத்துக் கொள்ளுகிறார்கள். தொழிலாளிகளிடம் வேலை வாங்குவதற்காகப் பதினைந்து அல்லது இருபது தொழிலாளர்களுக்கு ஒரு மேஸ்திரி இருக்கிறான். தொழிலாளர்களிடம் ஈவு இரக்க மில்லாமல் நிர்த்தாட்சண்யமாக நடந்து கொள்ளுபவர்கள்தான் இந்த வேலையி லிருக்கிறார்கள். இந்த வேலை பார்ப்பவர்களில் நல்ல சுபாவம் உள்ளவர்களைப் பார்க்க முடியாது. எந்த அளவு தொழிலாளர்களை இம்சிக்கிறார்களோ அந்த அளவு முதலாளிகளின் ஆதரவுக்காளாகிறார்கள். தொழிலாளர்களிடம் அதிக வேலை வாங்குவதும் அதிக நேரம் வேலை வாங்குவதும் இவர்களுடைய வேலை.

ஆட்களைப் பிடித்து அனுப்புவதற்குக் கங்காணிகள் இருக்கிறார்கள். இவர்களைப் பார்க்கும் பொழுதுபழையகாலத்துஅடிமை வியாபாரிகளின் ஞாபகம் வரும். ஆட்களைப் பிடித்து அனுப்புவதற்காக இவர்களுக்குச் சம்பளமும், இவர்கள் அனுப்பிய ஆட்கள் பத்துரூபாய்க்கு வேலை செய்தால் ஒரு ரூபாய் வீதம் கமிஷனும் முதலாளிகள் கொடுக்கிறார்கள். இவர்கள் ஆட்களைப் பிடிக்கும் பொழுது கொஞ்சம் முன் பணம் கடனாகக் கொடுக்கிறார்கள். தொழிலாளிகள் கங்காணிகளிடம் வாங்கும் முன் பணம் என்றென்றைக்கும் கடனாகவே இருந்துவிடுகிறது. சில கங்காணிகள் முன் பணம் கொடுக்கும் பொழுது ஒரு மாத வேலைக்கு என்று சொல்லிக் கூட்டிக் கொண்டுபோய் ஒரு வருஷ வேலைக்கு அமர்த்திவிடுவார்கள். சுமார் அரை லட்சம் தமிழர்களில், பெரும்பாலோர் மதுரை ஜில்லா பெரிய குளம் தாலுகா வாசிகள். இவர்கள் வேலையில்லாமல் திண்டாடிக்கொண் டிருக்கும் பங்குனி சித்திரை மாதங்களில் கங்காணிகள் கொடுக்கும் முன் பணத்தை வாங்கி நரக வாழ்வு வாழச் சம்மதிக்க வேண்டி யிருக்கிறது.

ஏலத் தோட்டத் தொழிலாளர்களில் வருஷக் கூலிகள், மாதக் கூலிகள், வாரக் கூலிகள் என மூன்று வகை யிருக்கிறார்கள். வருஷக் கூலிகளாகப் போகிறவர்கள் எட்டு அல்லது ஒன்பது மாதங்கள் ஏலத் தோட்டங்களில் வேலை செய்ய வேண்டும். மாதக் கூலிகள் முப்பது நாள் வேலையும், வாரக் கூலிகள் பதினாறு நாள் வேலையும் செய்ய வேண்டும். இவர்களில் வருஷக் கூலிகளாகப் போகிறர்களின் நிலைமைதான் படுமோசமானது. ஆண்களுக்கு ஒன்பதணாவும் பெண்களுக்கு எட்டணாவும் வேலை செய்யும் நாளொன்றுக்குக் கூலியாகக் கொடுக்கிறார்கள். தொழிலாளர்களுக்கு வேண்டிய சாமான்களை முதலாளிகளிடம்தான் வாங்கிக் கொள்ள வேண்டும். வேறு கடைகள் கிடையாது. சாமான்களை ஏலத் தோட்டங்களுக்குக்

கொண்டு போவதற்கு ஏலத் தோட்டச் சொந்தக்காரர்களுக்கு மட்டும் சர்க்கார் அனுமதி கொடுக்கிறது. வாரம் ஒன்றுக்கு ஆண் தொழிலாளிக்கு மூன்றரைப் படி சோளம் அல்லது ராகியும் மற்றச் சாமான்கள் எட்டணுவுக்கும், பெண் தொழிலாளிக்கு மூன்று படி சோளம் அல்லது ராகியும் மற்றச் சாமான்கள் ஆறணுவிற்கும் தொழிலாளர்களின் கணக்கில் கொடுக்கிறுர்கள். கொடுக்கும் சாமான்களின் விலைவாசிகள் ஒன்றுக்கு இரண்டாயிருக்கும். தோட்ட முதலாளிகள் இந்த வழியில் லாபம் சம்பாதிப்பதன் மூலம் தொழிலாளர்களுக்குக் கொடுக்கும் கூலியில் பாதிக்குமேல் திரும்பப் பிடுங்கிக்கொள்ளுகிறுர்கள். ஆனல், 25 ஏக்கருக்குக் குறைவாயுள்ள ஏலத் தோட்ட முதலாளிகள் சிலர் சாமான்களை நியாயமான விலைக்கும் சில சமயங்களில் குறைத்தும் கொடுக்கிறுர்கள். இவர்கள் வைத்துக்கொள்ளுவதெல்லாம் வாரக் கூலிகளையோ அல்லது மாதக் கூலிகளையோ மட்டும் தான்.

வைத்திய வசதியோ, கல்வி வசதியோ, போக்கு வரவு வசதியோ ஏலத்தோட்டங்களில் கிடையாது.

வேலை நேரம்தான் மிகக் கொடுமையானது. நாளொன்றுக்குப் பத்து மணி நேரம் முதல் பதினைந்து மணி நேரம்வரை இடை வேளை ஓய்வும் உணவும் இல்லாமல் பெரும்பாலான நாட்கள் மழையில் நனைந்துகொண்டு வேலை செய்கிறுர்கள். வேலைகளோ குனிந்துகொண்டே செய்ய வேண்டிய வேலைகள். வெற்றிலை பாக்குப் போட்டுக் கொள்ளுவதற்காக நாளொன்றுக்கு இரண்டு தடவை சில விநாடிகள் நிமிர்ந்து நிற்க அனுமதிப்பார்கள். இடுப்புக் கடுக்க வேலை செய்யும் தொழிலாளி கடுப்புத் தாங்காமல் நிமிர்ந்தால் பின்னல் நின்றுகொண்டிருக்கும் மேஸ்திரி வசைமாரி பொழிவான். ரத்தத்தை உறிஞ்சிக் கொண்டிருக்கும் அட்டையைக் கூட அகற்றச் சம்மதிக்கமாட்டான். ஏனென்ருல், அட்டைகள் எப்பொழுதுமே தொத்திக் கொண்டிருக்கும். "அட்டைப் புழுக்களை அகற்றிக்கொண்டிருக்க அனுமதித்தால் பாதி நேரம் அந்த வேலைக்கே (அட்டைகளை அகற்றுவதற்கே) சரியாய்ப் போகும்" என்று சொல்லுவான் வேலை வாங்கும் மேஸ்திரி. வசைமாரியையும் சகித்துக்கொண்டு கொஞ்ச நேரம் நிமிர்ந்து நின்ருல் உதையும் கிடைக்கும். வசைமொழிகளைக் கேட்டுக் கேட்டு ஏலத் தோட்டத் தொழிலாளர்களின் உணர்ச்சி மழுங்கிப் போயிருக்கிறது. சில எஸ்டேட்டுகளில் காலை ஆறு மணிக்கு வேலைக்கு வெளியேற்றப்படும் தொழிலாளிகள் மாலை ஆறு மணிக்குத்தான் குடிசை வந்து சேருவார்கள். அதுவும் பெண் தொழிலாளிகள் மட்டும் குடிசைக்குப் போகலாம். ஆண் தொழிலாளிகள் ஏலக்காய் உலர்த்தும் ஸ்டோருக்குப் போய் ஸ்டோர் வேலை செய்துவிட்டு இரவு எட்டு அல்லது ஒன்பது மணிக்குக் குடிசைக்குப் போவார்கள். இடை வேளையில் எந்த விதமான ஓய்வும் உணவும் கிடையாது.

சுற்றிலும் மேலேயும் போதைப் புல்லால் வேய்ந்த குடிசைகளும், சில எஸ்டேட்டு

களில் சுற்றிலும் கல்லால் கட்டி மேலே துத்தநாகத்தகடு வேய்ந்த கூலி லயன்களும் கட்டிக்கொடுத்திருக்கிறார்கள். சுமார் பத்தடி நீளம் பத்தடி அகலம் உள்ள அறைகள் ஒவ்வொன்றிலும் இரண்டு மூன்று குடும்பங்கள் வசிக்கின்றன. ஒவ்வொரு குடும்பத்தினரும் இரண்டு அடுப்புக்களை வைத்துக் கொள்ளுவார்கள். ஒரே அறையில்தான் சமையல் செய்வது, சாப்பிடுவது, படுப்பது எல்லாம். குளிரும் கூன்வண்டும் தூங்கவிடாது. கூன்வண்டுகள் மூட்டைப் பூச்சிகளைப்போல் ரத்தம் குடிப்பவை. மூட்டைப் பூச்சிகள் ஊரும்; கூன்வண்டுகள் ஊர்வதோடு பறக்கவும் செய்யும். மூட்டைப் பூச்சிகளைப் போல் இந்தவண்டுகளை இலகுவில் வேட்டையாட முடியாது. தோட்டத்திலே அட்டைகளும் குடிசையிலே கூன்வண்டுகளும் தொழிலாளர்களின் ரத்தத்தைக் குடித்துக்கொண்டிருக்கும். குளிருக்காக அறையின் நடுவிலே கணப்புப் போட்டுக்கொண்டு (தொழிலாளிகள்) சுற்றிலும் உட்கார்ந்துகொண்டே தூங்குவார்கள்; அல்லது முடக்கி முடக்கிப் படுத்திருப்பார்கள். கால் நீட்டிப் படுப்பதற்கும் இடம் இருக்காது.

வருடக் கூலிகளுக்கு வாரத்திற்கொரு நாள் லீவு. ஆனால், லீவு நாளில் சம்பளம் மட்டும் இல்லையே தவிர வேலை உண்டு. முதலாளியின் பங்களாவைச் சுற்றிலும், காய்கறித் தோட்டத்திலும், ஆரஞ்சுத் தோப்பிலும் பகல் பன்னிரண்டு மணி வரைக்கும் களையெடுப்பு முதலிய வேலைகளைச் செய்ய வேண்டும். இந்த வேலை முதலாளிக்குச் செய்ய வேண்டிய இனாம் வேலையாம். பன்னிரண்டு மணிக்கு மேல் தொழிலாளர்கள் தங்களுக்கு வேண்டிய சாமான் வாங்குவது, உடைகளைத் துவைப்பது, குளிப்பது, ஒரு வாரத்திற்கு வேண்டிய விறகு சேகரிப்பது, வாங்கிய சோளம் அல்லது ராகியை உடைப்பது முதலிய வேலைகளைச் செய்ய வேண்டும். ஆகக்கூடி வாரம் ஒரு நாள் லீவு என்று பெயரே தவிர ஓய்வென்பது கொஞ்சமும் இல்லை.

ஏலத் தோட்டத் தொழிலாளர்களுக்குக் கிடைக்கும் உணவு, சோளம் அல்லது ராகிக் களியும் மொச்சைப் புளிச்சாறும் தவிர வேறொன்றும் கிடையாது.

ஏலத் தோட்டத் தொழிலாளர்களுக்கு விமோசனம் எந்நாளில் பிறக்குமோ?

*

மிகச் சிறிய புத்தகம்

உலகத்திலேயே மிகச் சின்னஞ் சிறு புத்தகம் ஒன்று பி. எஸ். லாஸ் என்ற அமெரிக்கரிடம் இருக்கிறது. அது உமர்யா ருபாயத் என்னும் நூல். அது $1\frac{1}{4}$ குன்றிமணி எடை யுள்ளது. ஏறக் குறையக் கால் அங்குல நீளமும், மும் மாகாணி அங்குல அகலமும் உள்ள இந்தப் புத்தகத்தைப் பூதக் கண்ணாடியை கொண்டுதான் படிக்க முடியும்.

செத்த பிறகு தூக்கு!

ஆலிவர் கிராம்வெல் என்ற ஆங்கில வீரரைச் செத்துப்போன பிறகுதான் தூக்கில் போட்டார்கள்!

ஆசியாவின் கல்வி நிலை

"படித்தவன்"

ஆசியாவில் பெரும்பான்மையான மக்கள் எழுத்து வாசனையற்ற தற்குறிகளாக இருக்கிறார்கள். இப்படிக் கல்வி நிலை தாழ்ந்து போனதற்குப் படித்தவர்களின் தற்குறித்தனமும், சுயநலமும், அரசாங்கத்தின் யோக்கியதைக்குறைவும்தான்காரணங்கள். ஹிந்துஸ்தான் டைம்ஸில் வெளியான இக்கட்டுரை கல்வி நிலையை அபிவிருத்தி செய்யச் சில யோசனைகளைக் கூறுகிறது.

ஆசியாவின் பெரும்பகுதியிலும் நிலவியுள்ள எழுத்தறிவின்மையைக் கொஞ்சம் கொஞ்சமாக ஒழித்துக் கட்டிவிட வேண்டும். இன்று அரசாங்கங்களும், கல்வி ஸ்தாபனங்களில் உள்ளவர்களும் சமாளிக்க வேண்டிய அவசரமான பிரச்னை இதுதான். அதிர்ஷ்ட வசமாகக் கல்வியறிவின் நலன்களை மக்கள் நாளுக்கு நாள் உணர்ந்துகொண்டு வருகிறார்கள். அநேக நாடுகளில் கல்வி நிலையை அபிவிருத்தி செய்ய முயற்சி எடுக்கப்பட்டும் வருகிறது. ஆனாலும், அபிவிருத்தி மிகவும் தாமதமாகவே நடந்து கொண்டு வருகிறது. இதற்குக் காரணம் இரண்டாவது உலக யுத்தத்துக்குப்பின் அநேக நாடுகளில் உள்ள நிலையற்ற வாழ்க்கை முறைதான்.

அடுத்த பக்கத்திலுள்ள அட்டவணை உலகிலுள்ள பல நாடுகளின் கல்வி நிலையைச் சதவிகித உருவில் குறிப்பிடுகிறது. அதே சமயத்தில் மேல்நாட்டு மக்களுடன் ஆசிய மக்களாகிய நாம் சரி சமமாக நிற்க வேண்டுமானால், நம் அரசாங்கங்கள் எவ்வளவு பெரிய மலையைப் புரட்ட வேண்டியிருக்கிறது என்பதையும் அட்டவணை காட்டுகிறது.

மக்களுக்குக் கல்விப் பயிற்சியளிப்பதற்குப் பற்பல நாடுகளும் என்ன நடவடிக்கைகள் எடுத்துள்ளன என்பது சுருக்கமாகக் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

சீனா: யுத்த காலத்தில், 6 வயதிலிருந்து 12 வயதுக்குட்பட்ட சிறுவர் சிறுமிகளுக்கு ஆரம்பக் கல்வியும் 15 வயதிலிருந்து 45 வயதுக்குட்பட்ட பெரிய மனிதர்களுக்கு உயர்தரக் கல்வியும் அளிக்க ஒரு ஸ்தாபனம் ஏற்படுத்தப்பட்டது. நூற்றுக்குப் பத்துப் பேருக்கு ஆரம்பக் கல்வியும், நூற்றுக்கு முப்பத்தைந்து பேருக்கு உயர்தரக் கல்வியும் உடனடியாக அளிக்க வேண்டுமென்பதே ஸ்தாபனத்தின் முதல் நோக்கம். இந்த ஸ்தாபனத்தின் கைங்கர்யங்கள் வெற்றிகரமாக நடைபெறவே, கல்விக்காகச்செலவிடும் தொகை இரட்டிப்பாக்கப்பட்டுள்ளது.

தென்கிழக்கு ஆசியா: 1936-ம் வருஷத்திலிருந்து 1939-ம் வருஷத்துக்குள்ளாகப் பள்ளிக்கூடம் செல்லும் மாணவ மாணவிகளின் தொகை குறிப்பிடத்தக்க முறையில் அதிகமாகக் கூடியிருக்கிறது. ஆனால், துரதிர்ஷ்டவசமாய், அந்நாட்டு மக்கள்வறுமையின் நிர்ப்பந்தத்தினால் தங்கள்

நாடுகள்			படித்தவர்கள்
ஸ்விட்ஜர்லாந்து	...	...	100க்கு 100பேர்
கிரேட் பிரிட்டன்	...	...	,, ,,
பெல்ஜியமும் ஹாலந்தும்	...	...	,, ,,
பின்லாந்து	...	...	,, ,,
ஸ்வீடன்	...	...	,, ,,
நார்வே	...	...	,, ,,
டென்மார்க்	...	...	,, ,,
இத்தாலி	...	...	,, 73 பேர்
ஸ்பெயின்	...	...	,, 54 ,,
போர்த்துக்கல்	...	...	,, 46 ,,
பல்கேரியா	...	...	,, 45 ,,
அமெரிக்க ஐக்கிய நாடுகள்—	...	...	,, 97 ,,
(இந்நாட்டில் நீக்கிரோவர் 84 சதவிகிதமும், வெளி நாடுகளில் பிறந்த அமெரிக்கர்கள் 90 சதவிகிதமும், தாய் நாட்டில் பிறந்த அமெரிக்கர்கள் 98·5 சத விகிதமும் படித்திருக்கிறார்கள்.)			
கானடா	...	...	,, 96½ ,,
தென் அமெரிக்கா—	...	...	,, 30 ,,
(இதில் அர்ஜெண்டைனாவில் 87 சதவிகிதமும், மெக்ஸிகோவில் 38 சத விகிதமும், பெருவில் 42 சத விகிதமும், பிரேஸிலில் 30 சதவிகிதமும் படித்திருக்கிறார்கள்.)	...	...	
ஆஸ்திரேலியாவும் நியூஜிலாந்தும்	...	...	,, 95 ,,
தென்னாப்பிரிக்கா	...	...	,, 12 ,,
இந்தியா	...	...	,, 15 ,,
சீனா	...	...	,, 20 ,,
சயாம்	...	...	,, 48 ,,
இந்தோனேஷியா	...	...	,, 5 ,,
ஈரான், ஈராக், ஆப்கானிஸ்தானம் முதலிய நாடுகள்			,, 10 ,,

குழந்தைகளை மிகவும் இளவயதிலேயே பிழைப்புக்கு வழியாக ஏதாவது வேலை செய்வதற்கு அனுப்பிவிடுகிறார்கள். அவர்கள் ஒன்று, குழந்தைகளைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்புவதே இல்லை; அல்லது மிகவும் குறுகிய காலத்தில் தங்கள் குழந்தைகளின் பள்ளிப் படிப்பை நிறுத்திவிடுகிறார்கள். அந்த நாடுகளின் நிலைமை இன்னும் நன்கு சீர்ப்படவில்லை. அந் நாட்டு அரசாங்கங்கள் கல்வி பரப்பும் வேலையைத் தொடங்கக் கொஞ்ச காலம் பிடிக்கும்.

மத்திய கிழக்கு: நிலப் பிரபுத்துவ முறைகளும், தொழிலில் பிற்போக்கும், போக்குவரத்துச் சாதன வசதிக் குறைவும், மக்களின் வறுமையும், நிலையற்றிருக்கும் அரசியல் நிலைகளும் சேர்ந்து இந் நாடுகளில் உள்ள மக்களைக் கஷ்ட ஜீவனம் செய்யும்படி வைத்துவிட்டன. இதனால் அம் மக்கள் கல்வியைப் பற்றிக்

கவனிப்பதே கிடையாது. ஆனலும், சில நாடுகளில் ஆரம்ப, மத்திய தரப் பள்ளிப் படிப்பை மக்களிடையே பரப்ப முயற்சி எடுத்துக்கொண்டுதான் வருகிருர்கள். இந் நாடுகளிலுள்ள சமூக முறையைத் தலை கீழாக மாற்றியமைத்தாலொழிய, கல்வி நிலையில் அதிக அபிவிருத்தி ஏற்படுவது சாத்தியமல்ல.

இந்தியா : இந்தியாவின் மத்திய ஆலோசனைக் கல்வி போர்டு யுத்தப்பிற்காலக் கல்வி அபிவிருத்தித் திட்டமொன்றை மிகவும் பிரமாதமாகத் தயாரித்திருக்கிறது. கிண்டர் கார்டன் கல்விப் பயிற்சியிலிருந்து சர்வ கலாசாலைக் கல்வி வரையிலும் ஒரு சாத்தியமான கல்வி முறையை ஏற்படுத்த அந்தப் போர்டு உத்தேசித்துள்ளது. (இனிமேல்தான் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட வேண்டிய) அந்தத் திட்டம் நல்ல சம்பளம் கொடுத்து, தகுந்த போதன முறைப் பயிற்சி பெற்றுள்ள ஆசிரியர்களை நியமித்து, கல்விச் சாலைகளுக்குப் போதிய சாதனங்களையும், உபகரணங்களையும் அளித்து வசதி செய்து கொடுக்க வேண்டுமெனத் தீர்மானித்துள்ளது. மக்களின் உடல் வளர்ச்சிக்கும், அறிவு வளர்ச்சிக்கும் ஒருங்கே முக்கியத்துவம் கொடுத்து வற்புறுத்துகிறது அந்தத் திட்டம்.

தங்கள் படிப்பை முழுதும் படித்து முடிக்காத மாணவர்கள் இன்று ஏராளமாகக் காணப்படுகிருர்கள். ஆகவே, அவர்கள் தங்கள் பள்ளிக்கூட வாழ்க்கையில் படித்தவற்றை யெல்லாம் மறந்து போயிருக்கிருர்கள். மக்களிடையே சமூகம் வளர்ச்சி பெற வேண்டுமென்ற ஆழ்ந்த உணர்ச்சி ஏற்படாதவரை, இந்த மோசமான நிலையைத் திருத்தி அபிவிருத்தி செய்ய முடியாது. அத்துடன், கட்டாயக் கல்வி முறையை அமலுக்குக் கொண்டு வரவேண்டியது அவசியம்.

அடிப்படைக் கல்வி : சமீப காலத்தில் கல்வி முறையைச் சீர் திருத்தி யமைக்க வேண்டுமென்பதில் இந்தியாவில் பெரிதும் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. ஆசிய மக்களின் அறிவு நிலைக்கு ஏற்ற ஒரு கல்வி முறையை ஏற்படுத்த, டில்லியிலுள்ள ஜமியா மில்லியா நிலையத்திலும், வங்காளத்திலுள்ள சாந்தி நிகேதனத்திலும் பரிசோதனைகள் செய்யப்பட்டு வருகின்றன. இந்தச் சந்தர்ப்பத்தில், கிராமக் கைத்தொழில்கள் மூலம் அடிப்படைக் கல்வி யளிக்க வேண்டுமென்ற காந்திஜியின் திட்டத்தை முக்கியமாகக் குறிப்பிட வேண்டும்.

எழுத்தறிவின்மையைப் போக்குவதுடன், ஆசிய நாட்டு அரசாங்கங்கள் பொது மக்களுக்குக் கலாசார போதம் அளிக்கவும் திட்டங்கள் தயாரிக்கவேண்டும். சினிமாப் படங்கள், ரேடியோ, செய்திப் பத்திரிகைகள் முதலியவை கலைத் துறையிலும் கலாசாரத் துறையிலும் மக்களின் கவனத்தைக் கவரும் சாதனங்களாகும்.

மட்டமான பாடல்களையோ, அல்லது மக்களின் கவர்ச்சிகரமான விஷயங்கள் என்று சொல்லப்படும் ஆண்—பெண் உறவு சம்பந்தமான காமக் கதைகளையோ, பயங்கரக் கொலைகள் நிறைந்த கதைகளையோ, நாம் மக்களுக்கு அளித்துவிட்டமாத்திரத்தில் அவர்கள் திருப்தி யடைந்து விடுவார்கள் என்று நினைப்பது தப்பு. உயர்ந்த கலைகளை

அனுபவிக்கும் சக்தி அவர்களிடம் இருக்கிறது. இதை, அவர்களுடைய நாட்டுப் பாடல்கள், கிராமிய நாட்டியங்கள் முதலிய பல கலைகளின் மூலம் நாம் கண்டு கொள்ளலாம்.

அதிகமான சித்திரங்கள் நிறைந்த புத்தகங்களைக் கொண்டு கலாசாரத் துறையில் மக்களின் கவனத்தை வளர்க்க முடியும். மேல் நாட்டில் குழந்தைகளுக்கென்றும், பெரியவர்களுக்கென்றும் சித்திரங்களின் மூலமே விஷயத்தை விளக்கும் புத்தகங்கள் உண்டு. விஞ்ஞானம், சித்திரம், கவிதை, சங்கீதம், சரித்திரம் முதலிய கலைகளை அப் புத்தகங்கள் மிகமிக எளிய முறையில் விளக்குகின்றன. இந்த மாதிரிப் புத்தகங்களை ஆசியாவில் காண்பது அரிது.

சோவியத் உதாரணம்: ஆசிய சோவியத் நாடுகளில் மக்களிடையே கல்வியைப் பரப்பும் காரியத்தை பிரமாதமாகச் சாதித்திருக்கிறார்கள். மிகவும் குறைந்த அவகாசமாகிய இருபது வருஷ காலத்துக்குள்ளாக எழுத்தறிவின்மையை அந் நாட்டை விட்டு அநேகமாகத் துரத்திவிட்டார்கள். தாய்ப் பாஷையின் மூலம் மக்களுக்குக் கல்விப் பயிற்சியளித்ததினால்தான் இந்தக் காரியம் நடைபெறச் சாத்தியமாயிற்று. தமக்கென்று, நெடுங்கணக்கு இல்லாதிருந்த சுமார் முப்பது பாஷைகளுக்கும் எழுத்துக்கள் உண்டாக்கி யிருக்கிறார்கள். கிராமிய நாட்டியங்கள், கிராமியச் சங்கீதம் முதலிய கலைகளை மக்களிடையே நன்கு பரப்பவும் அங்கே ஆராய்ச்சிகள் நடந்துகொண்டிருக்கின்றன.

தேசத்தின் தலைமை ஸ்தானத்திலுள்ளவர்கள் எல்லாச் சாதனங்களையும் கல்வி அபிவிருத்திக்காகவே திரட்டத் தொடங்கினால் சோவியத் ஆசியாவில் சாதித்த காரியத்தை மற்ற நாடுகளிலும் சாதிக்க முடியும். மக்களுக்குக் கல்வி போதிக்க வேண்டுமென்ற பிரச்னை வரும்போது, அரசாங்கம் அது சம்பந்தமாய் என்ன செய்யவேண்டுமென்ற கேள்வியும் எழுகிறது. கல்வி சம்பந்தமான சகல ஆதிக்கமும் அரசாங்கத்தின் கையிலோ அல்லது, அரசாங்கத் தொடர்பற்ற தனிப்பட்டவர்களின் ஸ்தாபனங்களிடமோ இருப்பது நல்லதல்ல. இந்த இரண்டு வழிகளும் காரியத்தைச் சாதிக்காது.

அரசாங்கத்தின் பொறுப்பு: முதலில், மக்களின் கல்வி விஷயத்தில் அரசாங்கத்துக்கு அதிகப் பொறுப்பு இருக்க வேண்டியது அவசியம். அரசாங்கத் தொடர்பற்ற தனிப்பட்ட ஸ்தாபனங்களுக்கும் கல்வி சம்பந்தமான பரீட்சார்த்த வேலைகளைச் செய்து வர ஊக்க மூட்ட வேண்டியது அவசியம். இதுபோன்று மற்ற நாடுகளிலும் பரீட்சைகள் செய்து அவற்றின் மூலம் தெளிந்த முடிவுகளின் விவரங்களை இந்த அரசாங்கத் தொடர்பற்ற ஸ்தாபனத்துக்கு அரசாங்கம் கொடுத்து உதவ வேண்டும். இந்தக் காரியத்தை நடத்தி வைக்க ஆசியாவில் பிரதேச வாரி ஸ்தாபனம் ஒன்றை நிறுவ வேண்டியது அவசியம்.

ஆசியாவின் அரசாங்கங்களும், கல்வி பரப்பும் காரியத்தில் ஈடுபட்டவர்களும் கவனிக்க வேண்டிய மற்ற விஷயங்களாவன: சமாதானம், முன்னேற்றம், கல்வி, தொழிற் கல்வி, ஆசிரியர்களின் நிலையில் அபிவிருத்தி முதலிய விஷயங்களுக்குப் பயன்படுமாறு, கல்வி சம்பந்தமான

கொள்கையை நிர்ணயிக்க வேண்டும். எல்லா ஆசிய நாடுகளிலும், ஜனநாயக ஸ்தாபனங்களின் வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்கக் கூடிய முறையில், பாடத் திட்டங்களை அமைக்க வேண்டும்.

தொழில் வளர்ச்சியிலும், தொழில் அறிவு வளர்ச்சியிலும் ஆசியா, பிற்போக்கான நிலையில் இருக்கும் ஒரு கண்டம். உலகில் இக் கண்டம் தனக்குரிய ஸ்தானத்தைத் தேடிக்கொள்ள வேண்டுமென்றால் ஆசிய மக்களின் பொருளாதார அபிவிருத்திக்கு விஞ்ஞானத்தை எப்படிப் பயன்படுத்துவது என்பதைப் பயிற்றுவித்தாக வேண்டும். அமெரிக்கா அல்லது ஐரோப்பாவுக்குக் கல்வி பயிலப் போகும் மாணவர்களுக்கு வசதிகள் செய்து கொடுக்க வேண்டும்.

ஆசிரியர்களின் நிலை: ஆசிய நாடுகளிலுள்ள ஆசிரியர்களின் பொருளாதார நிலையையும், சமூக அந்தஸ்தையும் உயர்த்துவதற்குத் திட்டங்கள் தயாரிக்க வேண்டுமென்பதும் மிகவும் முக்கியமான காரியமாகும். தற்போது அவர்களுக்கு மிகக் கேவலமான சம்பளம் கொடுக்கப்படுகிறது. இதனால் வாத்திமைத் தொழிலுக்குப் போவதற்கு இளைஞர்கள் வெட்கப்படுகிறார்கள். பெரும்பாலான ஆசிரியர்களுக்கு நல்ல கல்விப் பயிற்சி கிடையாது; தொழிலுக்கு வேண்டிய யோக்கியதையும் கிடையாது. அத்துடன் வேலையிலும் அவர்களுக்கு அக்கறை இல்லை.

அதனால் அவர்களுக்கு உயர்ந்த சம்பளம் கொடுக்கும் அதே சமயத்தில், அவர்கள் தகுந்த போதனா முறைப் பயிற்சி பெறுவதற்கும் வசதி செய்து கொடுக்க வேண்டும். கல்வி முறைகளை நேரில் கண்டு அறிய, பல ஆசிய நாடுகளுக்குப் போய்ச் சுற்றுப் பிரயாணம் செய்யவும், பரஸ்பரம் ஒரு நாட்டுக்கு ஒரு நாடு ஆசிரியர்களைப் பரிமாறிக்கொள்ளவும் ஏற்பாடு செய்யவேண்டும். இரண்டாவதாகக் கூறிய விஷயத்தை இந்தியாவும், சீனாவும் நிறைவேற்றியுள்ளது; பரஸ்பரம் ஆசிரியர்களை மாற்றிக்கொண்டிருக்கிறார்கள். சாந்திநிகேதனத்தில் சீன தேசத்து ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். சீனாவின் சர்வகலாசாலைகளை நேரில் பார்த்தறிய இந்தியாவிலிருந்து ஆசிரியர்கள் அனுப்பப்பட்டிருக்கிறார்கள்.

*

மக்கட் செல்வம்!

மூலாய் இஸ்மெயில் என்ற மொரோக்கோ மன்னருக்குப் பல மனைவியரின் மூலமாய்ப் பிறந்த குழந்தைகள் மொத்தம் 888. அவைகளில் 548 பேர் ஆண்கள்; மீதி 340 பேர் பெண்கள்!

கிளமெண்ட்டைன் ஐமிபொனன் என்ற பிரான்ஸ் தேசத்து எட்டு வயதுச் சிறுமி 1866-ம் வருஷம் ஜுன் மாதம் 3-ம் தேதியன்று குழந்தை பெற்று விட்டாள்.

ஜுக் குடும்பம் என்ற ஓர் அமெரிக்கக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் மொத்தம் 1200 பேர். அவர்களில் 130 பேர் பரம தரித்திரர்கள்; 50 பேர் விபசாரிகள்; 60 திருடர்கள்: 130 காலிப்பயல்கள்; 7 பேர் கொலைகாரர்கள்!

வெளியாகிவிட்டது!

ஆங்கிலம் - தமிழ் அகராதி

ENGLISH - ENGLISH & TAMIL
DICTIONARY

●

தொகுத்தவர் :
தி. நா. சுப்பிரமணியன்

●

500க்கு மேற்பட்ட பக்கங்கள். வெள்ளைக் காகிதம். கலிகோ பைண்டு. அருமையான பதிப்பு.

●

ரூபாய் ஐந்து
தபால் செலவுடன் ரூ. 5-8
வியாபாரிகளுக்கு 15% கமிஷன்

●

சக்தி காரியாலயம்
சென்னை - 14.

தர்மராஜ்யத்தில்

கு. அழகிரிசாமி

★

அறநெறியைக் கடைப்பிடித்துவிட்டால் இன்றைய சமூகத்துக்கு விமோசனம் பிறந்துவிடுமா? தகுந்த முறைகளில் சீர்திருத்தப் பெறாது, எத்தனையோ மேடுபள்ளங்கள் நிறைந்திருக்கும் இந்தச் சமனற்ற மனித வாழ்க்கையின் பரப்பிலே தர்மம் தாண்டவமாடும் போது தர்மத்துக்கு என்ன கதி ஏற்படுகிறது? மனிதனுக்கும் என்ன கதி ஏற்படுகிறது? இதை, கிராம வாழ்க்கையை அடிப்படையாக வைத்து எழுதப்பட்ட இந்தக் கதை தத்ரூபமாக விளக்கிக் காட்டுகிறது.

1

மார்கழி மாதத்தின் கடைசிப் பகுதி. இருபத்தைந்து வயது வாலிபக் காளையும் நடுமத்தியானம் வரைக்கும் போர்வையை உடம்பினின்றும் எடுக்க அஞ்சும் கடும்பனிக் காலம். பனிக்குப் பயந்து வீட்டைப் பூட்டிக் கொண்டு கிடந்தால் கதிர் முற்றித் தலை சாய்ந்த பண்ணையாருடைய கம்பங்காட்டின் தானிய மணி, களஞ்சியம் வந்து சேருவது எப்படி? பண்ணையார் கம்பங்காட்டின் கூலித் தொழிலை நம்பி வயிற்றை ஆயுள் பூராவும் பேணி வரும் ஏழைகளின் காலம் கழிவதும் எப்படி?

காலையில் ஒன்பது மணிக்குப் படுக்கையை விட்டு எழுந்திருக்கும் நாராயணசாமிக்கு இந்த ரகசியங்களெல்லாம் அவ்வளவாகத் தெரியாது. உலகத்திலிருந்து ஒதுங்கி, ஆனால் உலக சுகங்களை அனுபவிக்கும் நாராயணசாமிக்கும் ஏழைகளென்றால் ஈரம் கசியும் மன இரக்கம் உண்டு; பட்டினி கிடப்பவர்களுக்குக் கை மாற்று என்ற பாபத்து இல்லாமல், 'பிழைத்துப் போகட்டும்' என்ற விசாலப் பான்மையுடன் இரண்டொன்று கொடுத்துதவும் வளமையும் உண்டு.

கிறிஸ்துமஸ் விடுமுறையைக் கழிக்க அவன் ஊருக்கு வந்து சுமார் பத்து நாட்களாகின்றன. வாழ்க்கையின் பெரும்பகுதியைப் பள்ளிக்கூடத்து நிழலில் கழித்ததின் காரணமாகப் பண்டைய ஆங்கில விற்பன்னர்கள் எழுதி வைத்த தர்மக் கோட்பாடுகள், இந்தியாவின் கி. மு. சகாப்தத்தில் வாழ்ந்த கிரந்தகர்த்தாக்களின் மனப்பண்பு, நேர்மை, நியதி இத்தியாதிகளில் பரிபக்குவம் பெற்ற உள்ளம் உடையவன் நாராயணசாமி. தவிரவும் இந்தத் தலை முறையில் பழைய படியும் தேசியத்தின் பேரால் தலைதூக்கிய அஹிம்சை, தீண்டாமை மறுப்பு, ஏழைகளுக்கு அன்புகாட்டும் மனிதாபிமானம் போன்ற தற்காலிக லட்சிய தர்மங்களும் அவன் சிந்தனையையும் ஆட்டபாட்டத்தையும் பரிபாலித்து வந்தன. சுருங்கச் சொன்னால் நாராயணசாமி இன்றைய யுகம் வாதாடிப் போராடி நிறுவ ஆசைப்படும் தர்மத்தின் சாயல். சமூகத்துக்கு முன்னோடியாய் அந்த லட்சிய தர்மத்தை நித்திய அனுஷ்டான

மாகக் கைக்கொண்ட அவன், தன் சொந்த ஊர்ப் பறைச்சேரி களில் பலமுறை ஊர்க் கட்டை மீறிச் சீர்திருத்தப்பிரசாரங்களும் செய்திருக்கிறன்.

இப்போது பனிக்காலம். அத ஞல் வழக்கம்போல எழுந்திருக் கும் நேரத்தைவிட அதிக நேரம் கழித்துத்தான் படுக்கையை விட்டு எழுந்திருப்பான். தவிரவும் படிப்பு, காலாகாலத்தில் குறிப் பிட்ட இடத்தில் ஆஜராகும் கட்டாய நடைமுறை போன்ற நிர்ப்பந்தங்களற்ற நிலையில் காலை யில் பத்து மணிக்கு அவன் படுக் கையைவிட்டு எழுந்தாலும் ஆச் சரியப்படுவதற்கில்லை.

அன்று அவனுடைய தகப்ப ஞர் வந்து அவனுடைய படுக்கை யறையின் கதவைத் தட்டும் போது, பொழுது விடியவில்லை. வைகறையின் அந்திமம் போல, கீழ்வானில் விடிவெள்ளி ஒளி யிழக்கும்படியாக, வெளுப்பு பரவிப் படர்ந்திருந்தது. ஒருவர் முகம் ஒருவருக்குத் தெரிந்தும் தெரியாமலும் தோற்றும் சந்தர்ப் பம். இரண்டு மூன்று தடவை ரங்கசாமி நாயக்கர் கதவைத் தட்டியதும் துயில் கலைந்து எழுந் தான் நாராயணசாமி.

"என்ன அப்பா?" என்று கண்களைக் கசக்கிக்கொண்டே எழுந்து வந்து கேட்டான்...... எஸ்கிமோவைப் போலத் தலையை யும் உடலையும் தோல் போன்ற மந்தமான போர்வையால் மூடி யிருந்ததை அவன் களையாமலே கதவைத் திறந்து வெளியே வந்தான்.

"என்ன?"

"கீழத் தெருவில் சுடலையாண் டித் தேவரைப் போய்க் கொஞ் சம் சத்தம் காட்டிவிட்டு வா. சங்கரப்பனைக்கூடக் காணேம். பய, கருது* பொறக்கற காலத் திலேகூட வீட்டோடு கிடக் காமே சினிமாப் பாக்க எட்டயா புரத்துக்குப் போயிட்டான். நீ சீக்கிரம் போயி ரயிலடிப் புஞ் சைக்குச் சுடலையாண்டித் தேவ ரையும் அவர் பெஞ்சாதியையும் போய்க் கருது பொறக்கச் சொல்லு."

"என்ன அதுக்குள்ளேயே?" என்று நாராயணசாமி கேட் டான்.

"என்ன அதுக்குள்ளவா? நேரம் என்ன ஆச்சு? காத்தாலே போனத்தானே வேலை சாயும். மத்த ஆட்களெல்லாம் புறப்பட் டுப் போயாச்சு. எல்லாருக்கும் ராத்திரியே தகவல் சொல்லிட்டுப் போயிருக்கான் சங்கரப்பன். ஆட்களெல்லாம் புறப்பட்டுப் போயும் சுடலையாண்டித் தேவரைக் காணலலே. வேலைக் காரன்களையும் காணேம். போ போ, போய்ட்டு வந்து வேணும்னு படுத்துக்கோ" என்று சொல்லிவிட்டு வீட்டுக் குள்ளே போய்விட்டார் ரங்க சாமி நாயக்கர்.

போர்வையை நன்ருக இழுத் துப் போர்த்துக்கொண்டு வெளியே கிளம்பினன் நாராயண சாமி. வீட்டுவாசல்படியெல்லாம் பனியால் நனைந்து, எத்தல் குத்த லான இடங்களில் தண்ணீரும் கட்டியிருந்ததால், படியில் காலை வைக்கும்போது ஐஸ் கட்டியை மிதிப்பதுபோலிருந்தது. கம்பளிப் போர்வையின் பாதுகாப்பையும் கடந்து நாராயணசாமிக்குப் பனி வாடை விறைத்தது. பற்களெல் லாம் பட பட வென்று அடித்துக்

*கருது :—கதிர் என்பதின் பேச்சு வழக்கு. கம்பங் கதிரை அறுத்துச் சேர்ப்பதை, 'கதிர் பொறுக்குதல்' என்று குறிப்பிடுவது வழக்கம்.

மாலை வேளையின் மங்கலான வெளிச்சத்தில் காற்றிலசையுகின்ற அழகான இந்திய ரோஜா மலர்களைப்பார்த்ததும், உங்கள் இஷ்டத்திற்குரிய சோப்பான வினோலியா ஒயிட்ரோஸின் ஞாபகமேற்படும். உங்கள் எழிலை அதிகப்படுத்த இந்த சுகந்த சோப்பைவிட உத்தமமானதோ, தகுதியானதோ வேறு கிடையாது. மிருதுவான நுரையைத்தரும் வினோலியா மிக நேர்த்தியான சருமத்தையும் சுகமாக சுத்தம் செய்கிறது . . . மேலும், உங்களை சுற்றிலும் மனோஹர பரிமளத்தைப் பரவச்செய்கிறது.

வினோலியா ஒயிட் ரோஸ் சோப்

VWR. 20-111 TM — VINOLIA COMPANY LIMITED, LONDON, ENGLAND

மனோஹரன் ஸ்டோர்ஸ்

தந்தி:
"HARANTALKY"

181, கீழ வாசல்
மதுரை

போன் நெ.
219

கீழ்க்கண்ட ஜவுளிகளின் ஸ்டாக்கிஸ்டுகள்:

மோஹன் ராம் கம்பெனியாரின் சேலைகள், வேஷ்டிகள்

M. K. C. "சிங்கம் மார்க்"

பனியன்கள், ஸிலிப் ஓவர்ஸ், அண்டர்வேர்ஸ் சின்டஸ் வகையரா

சென்னை இன்டோ-லங்கா டிரேடர்ஸின்

30-இஞ்ச், 44-இஞ்ச் டோரியா வாயல்கள்

(சுத்த கைத்தறி ஜவுளிகள்) கண்களைக் கவரும் நவ நாகரிக டிஸைன்களின் பற்பல ரகங்களில் கிடைக்கும்

மொத்த & சில்லரை ஆர்டர்களுக்கு எழுதவும்

உண்மையான நல்ல பட்டை உணருங்கள்.



உண்மையான நல்ல பட்டு எப்படி உணர்ச்சிக்கு இருக்கும் என்பதை அறிய ஆடம்பரமும் மனோகரமுமான மைசூர் சில்க் அணிவதன்மூலம் தெரிந்து கொள்ளலாம். அது சாதாரண பட்டுக்களைவிட அதிக் நாள் உழைக்கும்.

மைசூர் கவர்ன்மென்ட் தயாரிப்பு.

கவர்ன்மென்ட் சில்க் வீவிங் பாக்டரி, மைசூர்.

கொண்டன. படபடப்போடு தெருவழியே போய்க்கொண்டிருந்தான். அப்பொழுது கோவணமும் சும்மாடுமாகத் தலையில் சாணக் குப்பையைச் சுமந்து கொண்டு கொட்டாரக் காட்டிலுள்ள குப்பைக் கிடங்குக்குப் போகும் பக்கத்துத் தெரு நாயக்கர் ஒருவர், "எங்கே நாரவா?" என்று நாராயணசாமியைப் பார்த்துக் கேட்டார்.

"கீழத் தெருவுக்குப் போய் வேலையாளைச் சத்தங் காட்டிட்டு வரணும்."

"அடேயப்பா, இப்படி இளவட்டங்களெல்லாம் பனிக்குப் பயந்து முக்காடு போட்டுக்கொண்டா, எங்களைப்போல கிழடு கட்டைகளெல்லாம் எப்படிக் கோழி கூப்பிட எழுந்திருச்சி வேலை செய்ய முடியும்?" என்று கேலி செய்துவிட்டுப் போனார், அந்த நாயக்கர்.

நாராயணசாமிக்கு இது ஆச்சரியமாகக்கூட இருந்தது. 'இப்படி வயதான பேர்வழிகள் எல்லாம் கோவணம் கட்டியவாக்கில் இந்தப் பனியைப் பொருட்படுத்தாமல் குதியாளம் போடுவது எப்படி? கடவுள் கொடுத்த சடலங்கள் எல்லாவற்றிற்கும் உணர்ச்சி என்பது ஒன்றுதானே?' என்று சித்தாந்தப் படுத்தி அதற்கும் விதிவிலக்கு இருக்கிறதே என்ற வியப்போடு போய்க்கொண்டிருந்த அவனுக்கு முன்னாக இரண்டொருவர் ஊர்க் கிணற்றில் தண்ணீர் எடுத்துக்கொண்டு ஓட்டமும் நடையுமாக வீட்டை நோக்கிப் போய்க்கொண்டிருந்தனர்.

கீழத் தெரு. அதன் தென் கோடியில் உள்ள சந்தில்வடக்கே பார்த்த கூரை வீடுதான் சுடலையாண்டித் தேவரின் குடியிருப்பு. அங்கே வந்து சேர்ந்தான். முதல் முதலாக இவர் வீட்டுக்கு நாராயணசாமி விஜயம் செய்வது இப்போதுதான். வந்து வீட்டைப் பார்த்தான்......

வீடு என்ற கௌரவப் பெயர் தாங்கிய அந்தப் பாழ் மனையில் மூன்று பக்கம் மண் சுவர்களும், ஒரு பக்கம் இடிந்து விழுந்த மண் சுவருக்குப் பதிலாக நிறுத்தப்பட்ட பருத்தி மார்ப் படலும் இருந்தன. கூரையில் வேய்ந்த பனை ஓலைகள் கையால் பொடித்துப் பஸ்பமாக்கத்தக்க கெட்டுப் போன தசையிலிருந்தன. தெரு மட்டத்துக்குக் கீழே இறங்கி, சதுப்பேறிப் போயிருக்கும் உட்பாகத்தைத் தெளிவாகக் காட்டும் கதவில்லா வாசல். இதில் வாழும் மனித ஜீவன்களின் வாழ்க்கையோ ஊகம் செய்து நிர்ணயிக்கும் மோசமான வரையறையையும் குபேர சம்பத்தாக்கக் கூடிய ஈன நிலை. அந்தத் தரித்திரம் மனிதக் கற்பனையைக் கேலி செய்தது.

நாராயணசாமி வீட்டு முற்றத்தைக் கடந்து வாசல் பக்கமாகப் போய் நின்று பார்த்தான்; பார்த்ததும் அவன் உள்ளம் மிகவும் துடித்தது.

இப்போது அவனுக்குக் குளிரை உணரும் பரிபூரணமான பிரக்ஞை இல்லை. காலணா அகலத்துக்கு உடம்பைவிட்டுப் போர்வை விலகிவிட்டாலும், குத்துக் காயம் பட்ட வேதனை ஏற்படும் அவனுடைய அந்தச் சரீரத்தைவிட்டுப் போர்வை நெகிழ்ந்தது. நழுவிக் கீழே விழப் போன போர்வையை, விழுந்துவிடக் கூடாதே என்ற பாதுகாப்புக் கவனத்துடன்தான் அப்படியே தாங்கி எடுத்து விரித்துத் தோளில் போட்டுக்கொண்

டானே ஒழிய அங்கே போர்வை தொழிலிழந்து விட்டது; பனியும் ஆற்றல் இழந்தது......

நாராயணசாமி நின்று பார்த்துக்கொண்டே இருந்தான்......

உள்ளே சதுப்புத் தரையில் சணல் கோணியின் கிழிசல் படுதா ஒன்று மாத்திரமே விரிக்கப்பட் டிருந்தது. அதில் ஐந்தாறு பழந் துணிகளைச் சுருட்டித் தலைக்கு வைத்து, பாதாதி கேசாந்தமாக மற்றொரு சாக்குப் படுதாவைப் போர்த்துச் சுகமாகத் தம்மை மறந்து உறங்கிக் கொண் டிருந்தார் அறுபது வயதை எட்டிப் பிடிக்கும் கிழவர் சுடலையாண்டித் தேவர். அதை அடுத்து அவரை ஒட்டி, அதே குறுகிய படுதாவில் பாதி உடலும், வெறுந் தரையில் பாதி உடலுமாகப் படுத்துக் கிடந்தாள் கிழவி-அவர் மனைவி. மனித சமூகம் சாரத்தை உறிஞ்சிவிட்டு எறிந்த இந்த இரண்டு ஒட்டி உலர்ந்த எலும்புக் கூடுகள் சுடு காட்டில் போய் விழாமல் தவறுதலாகப் பழையபடியும் சமூகத்திலேயே வந்து விழுந்து விட்டது போலத் தரையில் கிடந்தன. ஆட்டு மாமிசம் மாதிரி வாழை இலையில் இடம் பெறாமல், மற்ற வழிகளில் இரை கொடுத்து வரும் இந்த நர மாமிச சாதனங்கள், தங்களைப் பாதுகாத்துக்கொள்ளுவது தங்கள் நலனுக்காக என்று நினைத்து, தலைமாட்டில் ஒரு கைப் பிரம்பை வைத்துக்கொண்டு உறங்கின. நடுச் சாமத்தில் சட்டி பானைகளை உருட்ட வரும் நாய்களைத் துரத்துவதற்கென்று வைக்கப்பட் டிருந்த அந்தப் பிரம்பு அங்கே வெறும் சம்பிரதாயத்துக்குத்தான் கிடந்தது. இவர் வீட்டு வெறும் பானைகளை உருட்ட நாய் ஒருநாளும் வந்தது கிடையாது.

இந்தப் பரிகாசக் கோலத்தைப் பார்த்துக்கொண்டே நின்றான் நாராயணசாமி. தேவருடைய பழைய வாழ்க்கையின் நிகழ்ச்சிகள் அவனுக்குத் தெரிந்தமட்டிலும் நினைவுக்கு வந்தன. இந்த முப்பது வருஷத் தாம்பத்தியவாழ்விலும் இரண்டே இரண்டு பெண் குழந்தைகளை மட்டும் பெற்றெடுத்து அவர்களைத் தூரத்து ஊர்களில் கட்டிக் கொடுத்துவிட்டவர் தேவர். தரித்திரம் பரம்பரைச் சொத்தாக இருந்துவரும் குடும்பத்தில், பிதுரார்ஜிதச் சொத்தாகவும் எதிர்கால ஜீவனத்துக்குரிய சேமிப்பாகவும் உள்ள சொந்தமக்களின்உழைப்பையும், இந்தத் துரதிர்ஷ்டம் பிடித்த ஆத்மாக்கள் கடைசிக் காலத்தில் அனுபவிக்கக் கொடுத்து வைக்காத நிலையில், பிறந்த வாரிசுகள் இரண்டும் பெண்களாகப் போய் விட்டன. இந்த நிலையில் தம் வயிற்றைத் தாங்கி நிறுத்தத் தம் பலஹீனமான கைகளையே ஆதார ஊன்று கோல்களாகக் கொண்ட இந்த இரண்டு பேரும் நேற்றெல்லாம் எவ்வளவு கஷ்டப்பட்டு வேலை செய்த அலுப்போ, இப்படித் தங்களை மறந்து பிணங்களைப் போலத் தூங்குகிறார்கள், என்று நினைத்த நாராயணசாமிக்கு அவர்களை எழுப்பவே மனம் வரவில்லை. எப்படி எழுப்புவது? அரை குறை ஓய்வில் கண் விழிக்கும் பலஹீன சரீரங்கள் இந்தக் கொடும் பனியில் என்ன பாடுபடும் என்பதைக் கற்பனை பண்ணிப் பார்ப்பது கூட அவனுக்கு வேதனையாக இருந்தது. பேசாமல் கொஞ்ச நேரம் நின்றான். இரண்டொரு தடவை தொண்டை விக்கியது; வெறும்

வாயை விழுங்கி மனப் படபடப்பைக் கொஞ்சம் தணித்தான். 'வேண்டாம். இந்த நிம்மதியைக் கெடுப்பது மகா பாவம்' என்று அப்படியே மேற்கொண்டும் யோசனை செய்யாமல் திரும்பிவிட்டான்.

அவன் திரும்பி வரும்போது சூரியோதயம் ஆகிவிட்டது. கலைந்துகிடந்த போர்வையை ஒழுங்காக விரித்து மூடிக்கொண்டு வீட்டுக்கு வந்தான். அவனுடைய தகப்பனாரிடம் வந்து மிகவும் சிவனிழந்த குரலில் நாத் தழு தழுக்க நடந்த கதையைச் சொன்னான். அதைக் கேட்ட ரங்கசாமி நாயக்கருக்கு மகன்மேல் கொஞ்சம் கோபமும் வந்துவிட்டது. 'என்னடா இது? கிறுக்குத்தனமாக இப்படி வந்து விட்டானே?' என்று கோபித்து ஒரு மாதிரியாகச் சிரித்தார்.

"என்ன பைத்தியக்காரா! தூங்கினாகளாம்; எழுப்பலையாம்! போ போ, பள்ளிக் கணக்குப் புள்ளிக்கு உதவாது என்கிறது சரியாய்த்தானே போச்சு! ஆள் போதாவிட்டால் கம்பங்கருது பூராவும் இன்னிக்குப் பொறக்கியாகாதே. வேலை குறை விளுந்து போச்சுன்னா கஷ்டந்தானே?" என்றார்.

'இவர்கள் நஷ்டத்தைத் தானே கவனித்தார்கள்! உலகத்தின் சோக நாடகம் இப்படிக் கண் முன் மாறி மாறிக் காட்சியளித்தும்இந்த ஜன்மங்களுக்கு ஞானம் பிறக்கவில்லையே?' என்று மிகவும் விசனத்துடனும், சுடலையாண்டித் தேவர் குடும்பத்தின் மீது மேலும் அதிக அனுதாபத்துடனும் வந்து கட்டிலில் படுத்தான் நாராயணசாமி. படுத்தது தூங்குவதற்காக அல்ல; தூக்கமும் அவனுக்கு வரவில்லை. மனதிலே இரக்கம், அன்பு என்ற தர்ம குணங்கள் அவனைச் சூறையாட அவன் கஷ்டப்பட்டாலும், உள்ளூர, ஏழை ஜீவன்களின் சந்தோஷத்தைக் கெடுக்கவில்லை என்ற ஒரு திருப்தி அவனுக்குச் சற்று மன நிம்மதி அளித்துக் கொண்டிருந்தது.

2

படுக்கையை விட்டுச் சுடலையாண்டித் தேவரை அவர் மனைவிதான் எழுப்பினாள் என்றாலும், அவள் எழுந்திருக்கும் போதே சூரியன் உதித்துஇரண்டு ஆள் உயரத்துக்கு வந்து விட்டான். தரித்திரத்தினால் பாதிக்கப்பட்டு விகாரமடைந்த மனித குணங்கள் அப்போதே நாடகம் போடத் தொடங்கிவிட்டன:

"ஐயோ, எவ்வளவு நேரமாய் விட்டது! அப்போதேயே எழுப்பி யிருக்கக் கூடாதா?" என்று மனைவியைக் கோபித்துக் கொண்டே கூட்டிச் சுருட்டிக் கொண்டு எழுந்தார் தேவர்.

"நானும் இப்பத்தான் எந்திருச்சேன். அலுப்புலே தன்னையறியாம தூங்கிட்டேன்" என்று அந்த அம்மாள் சொன்னது தேவரின் கோபத்தை சாட்டை கொண்டு அடித்துத் தட்டி யெழுப்பிவிட்டது.

"நான்தான் உறங்கினேன்னா, நீ கூடவா இப்படி ஒரே தூக்கமாத் தூங்கணும்! கெட்ட காலத்துக்கு நீ என்ன செய்வே? இனி எந்த அப்பன் நம்மை வேலைக்குக் கூப்பிடுவான்னு நெனைச்சே?" என்று சொல்லிவிட்டுப் பொடிப் பட்டையைத் தேடினார்.

"எனக்கும் அலுப்பு இருக்காதா? என் உடம்பை யென்ன

கல்லாலேயா அடிச்சு வச்சிருக்கு?''

"நீ விவகாரம் பண்ணினது போதும். பொழுது விடிஞ்சா இந்த விவகாரம் தானு? பொடிப் பட்டை எங்கே?''

"நான் பார்க்கல்லே.''

தேவருக்குக் கோபம் அதிகரித்தது. கோணிப்படுதாவை உதறி உதறிப் பார்த்தும் அதைக் காணுது போகவே, அவருக்கு வந்த கோபத்துக்கு அளவே இல்லாமல் போய்விட்டது.

"நாசகாலி, நீ இருக்கிற வீட்டிலே எதுதான் பத்திரமாயிருக்கும்? என்னத்தை வச்சு இன்னிக்குச் சாப்பிட? இத்தனை நாள் வேலை யில்லாமே இருந்து நேத்து அத்தி பூத்தாப்போல சங்கரப்பன் வந்து கருது பொறக்கக் கூப்பிட்டான். அதுக்கும் போகாமே வாயிலே மண்ணைப் போட்டுக்கிட்டோம்! ஊருக்குள்ளே உன்னையும் என்னையும் நம்பி எவன் கடன் குடுப்பான்னு நெனைச்சே? அத்தோடே கண்ட கண்ட இடத்திலே யெல்லாம் வேலை செய்து கழிக்கிறேன்னு சொல்லித் தலைக்குமேலே பாரமாகக் கடன் வாங்கிட்டு வந்திட்டே...''

'அதுக்கு யாரைப் பழி சொல்லுதீக? நீங்களும் தான் தூங்கினீக! விடிஞ் செந்திருச்சதும் இப்படி வன் என்னைப் பிடிச்சி மோதணும்? இந்தத் தள்ளாத காலத்திலே தினந்தினம் இப்படி இம்சைக்கு ஆளாகவா பகவான் என் தலையிலே எழுதணும்?'' என்று சொல்லிவிட்டுக் கண்ணீர் விட்டாள் கிழவி. சிறு பிள்ளையைப் போலக் காரணமில்லாமலும், சண்டை போடுவதைத் தவிர்த்து வேறு எதுவும் செய்து கஷ்டத்தை மறக்க வழியில்லாதும், கூப்பாடு போட்ட தேவர், கிழவியின் கண்ணீரைக் கண்டதும், "நீ அழுதுதான் என்ன? அழுகாட்டாத்தான் என்ன? இன்னிக்கு ராத்திரிக்கி எதை வச்சு உலையேத்துறதோ?'' என்று சொல்லிவிட்டு வெளியே வந்தார். வரும் போதே திட்டி வாசல் நிலை தட்டி விட்டது. ரத்தம் வராவிட்டாலும் நோவு பொறுக்க முடியவில்லை.'அம்மா!' என்று நெற்றியைத் தேய்த்துக் கொண்டே தள்ளாடித் தள்ளாடி நடந்தார். பனியின் கோரம் இன்னும் தணியவில்லை. ஆனாலும் ஊருக்குள் கோணிப் படுதாவைப் போர்த்துக்கொண்டு வருவதற்கு வெட்கப்பட்டுக் குச்சி போன்ற தம் இரண்டு கைகளாலும் உடம்பைப் பொத்திக் கொண்டு தள்ளாடிய வண்ணம் நடந்தார். பண்ணையார் ரங்கசாமி நாயக்கர் வீட்டில் போய்ச் சொல்லிவிட்டு வேலைக்கு எப்படியும் இன்று போய் விடலாம்—போகத்தான் வேண்டும், என்ற நிர்ப்பந்தக் கனவுடன் வந்தார்.

பண்ணையார் அப்போது வீட்டில் இருந்தார். நாராயணசாமி தான் எழுந்து எங்கேயோ வெளியே போயிருந்தான். தேவரைக் கண்டதும் பண்ணையார், "என்ன? வேலைக்கு வாரேன்னு சொல்லிட்டுப் பத்து மணி வரையிலும் பேசாம தூங்குறதுன்னு என்ன அர்த்தம்?'' என்றார்.

தேவர் கையைப் பிசைந்தார்; கெஞ்சிக் கூத்தாடி, "வேலைக்குப் போறேன். எப்படியோ தூங்கிட்டேன்'' என்று குழறிக் குழறிச் சொன்னார்.

"சரிதான், இனிமேலே போயி வேலை செய்தது போதும். பதிலாளை அனுப்பிச்சிட்டேன். நீர் போய்த் தூங்கும். எனக்கென்ன ஊரிலே ஆளுக்கு கருவற்று

அருமையான பற்கள்!

உங்கள் புன்னகையின் வசீகரத்தன்மை அபாயத்துக்குள்ளாகிறதா?



எல்லோரிடமிருந்தும் புகழைப்பெற உங்கள் குதூகல புன்னகை ஒருவித காந்த சக்தி. அதை ஈறு வியாதிகளால் பாழ்படுத்திக் கொள்ளாதீர்கள். தினந்தோறும் எஸ். ஆர். டூத்பேஸ்டினால்* பற்களை சுத்தம் செய்தால் அவை உறுதியான ஈறுகளில் பளிச்சென்று வெண்மையாக, உங்கள் புன்முறுவலின் நிகரற்ற செல்வமாய் விளங்கும்.

*பல் வைத்தியர்கள் ஈறு வியாதிகளுக்கு உபயோகப்படுத்தும் ஸோடியம் ரிஸினோலியேட் சேர்ந்தது.

GSR. 27-50 TM D. & W. GIBBS LIMITED, LONDON, ENGLAND

போச்சி?" என்று ஒரே தீர்மான மாகச் சொல்லிவிட்டார்.

தேவர் மேலும் கெஞ்சினர். "உமக்கு வேறே வேலே யில்லேயோ? பையன் வந்து அரை மணி நேரமா நின்னு பாத்திருக்கான். அப்பவும் நீர் எந்திருக்கிற வழியைக் காணேம்! இனிமேல் போயி வேலேயைச் செய்வாராம்! போதும் போதும்!" என்று சொல்லிவிட்டுக் கிளம்பி விட்டார் பண்ணேயார்.

தேவர் பேசாமல் திரும்பினர். வீட்டுக்கு வரும்போதே வயிற்றிலிருந்து பசிப் பிரக்ஞை பிறந்துவிட்டது. எல்லாவற்றிற்கும் மேலாக நம்பிக்கையை இழந்து விட்டது மனம். மனசிலும், சரீரத்திலும் ஊனம் கண்டு தேவர் தம்மை மறந்து வரும்போது நாராயணசாமி சந்தர்ப்ப வசமாகத் தெருவில் எதிர்ப்பட்டான். உடனே படபடவென்று, "முதலாளி, நீங்க வீட்டுக்கு வந்தீகளாமே!வந்தவுககொஞ்சம் சத்தம் காட்டியிருந்தா எந்திருச்சிருப்பேனே!" என்று பரிதாப கரமாகச் சொன்னர் தேவர்.

"தூக்கத்திலிருந்து எழுப்பக் கூடாதுன்னு நினேச்சு வந்துட்டேன். எழுப்புறது பாவமில்லே யா?" என்று கடைசி வாசகத்தை மென்று விழுங்கிக் கொண்டே இரக்கத்துடன் சொன்னன் நாராயணசாமி.

"இன்னிக்கு எனக்கு வேலே போச்சே! வேலேக்கே வரக் கூடாதுன்னு ஐயா சொல்லிட்டாகளே" என்று பிரலாபித்த தேவருக்கு மேலும் அங்கே நிற்கத் தோன்றவில்லே. புலம்பிக் கொண்டே நகர்ந்தார். தன் அப்பாவின் மனசைத் திருத்த இயலாத நாராயணசாமிக்கு, "இந்த வேலே போச்சின்னு தேவருக்கு இன்னெரு வேலே" என்ற எண்ணம் சந்தர்ப்பத்தில் தோன்றி மனச் சமாதானத்தை அளித்தது.

ஆனல் தேவரின் மனே பலத்துக்கு எறும்புக்குள்ள சக்தி இருந்திருந்தாலும் அன்று, அந்தக் கணத்திலேயே, நாராயணசாமி சாம்பலாகிக் காற்றில் பறந்திருக்க வேண்டும். எரி மலேயைத் தான் கக்கினர் தேவர்: 'திங்கிற சோத்திலே மண்ணேப் போட்டிட்டயே, பாவி! என்னே வந்து எழுப்பினுப் பாவம்னு,புண்ணியம் சம்பாதிக்கப் பாத்தாயோ? எழுப்பினு உன் நாக்கு என்ன அழுகியா போகும்? உன்னே என்ன பாவம் வந்து அப்படி வாரிக் கொண்டு போகுது?'

தேவரின் நெஞ்சுக் குகைக்குள் குமுறிய இந்தக் கோபமும் சாபமும் நாராயணசாமிக்குத் தெரியாது. தெரிந்திருந்தால், 'இந்தப் பிச்சைக்காரக் கூட்டத்துக்கு இரக்கம் காட்டுவதே முட்டாள்தனம். நன்றி கெட்டவர்கள்!' என்ற கோபம் பிறந்திருக்கும். தெரியாத நிலேயில்.....அதே அன்பு, அதே கருணே, அதே கோட்பாடுகள்! இவன் எதைச் செய்தாலும் தேவருக்கு என்ன கவலே? ஊர் முதலாளியின் பிள்ளே தர்ம புத்திரனுக இருந்தும் அவருடைய பசியும் தரித்திரமும் அவனேச் சபிக்கிறதை நிறுத்தவில்லே — நிறுத்த முடியவில்லே!

✲

தர்மத்தின் சொரூபம்

தர்மம் என்பது ஒரு போராட்டம். தர்மத்தின் நடுவில் வாழ வேண்டுமானல், எப்போதும் நம்மை நாமே எதிர்த்துப் போராட வேண்டியிருக்கிறது.

—குனே

வைரங்கள்

'வைரத்தை வைரத்தால்தான் அறுக்க வேண்டும்' என்ற பழமொழியே வைரம் எவ்வளவு கடினமான வஸ்து என்பதைக் குறிப்பிடும். உலகிலேயே மிகக் கடினமாக இருக்கும் இந்த வைரம் ஆபரணங்களுக்கு மட்டுமா பயன்படுகிறது? நவீனத் தொழில்களுக்கு இந்த வைரம் செய்யும் பேருதவியை இந்தக் கட்டுரை தெரிவிக்கிறது.

கருவேல மரத்திலிருந்து வடிகிற பிசின்போல, தாவர வர்க்கம் வெளியேற்றுகிற ஒருவிதப் பொருள்தான் வைரம் என்று அபிப்பிராயப்பட்டார் டி. புரூய்ஸ்டர் என்ற விஞ்ஞானி. மின்னும் வைரத்தைப் பற்றி இப்படிச் சொன்னால் நம்பமுடியாது. ஆம், இது உண்மையல்ல. உண்மையில் வைரம் கரிதான். வைரமும் கரியும் ஓர் இனத்தைச் சேர்ந்தவைதான்.

குயவன் ஒரே இடத்தில் வெட்டியெடுத்த மண்ணைக் கொண்டு அவனுடைய கைத்திறத்தால் பல்வேறு தினுசான பாத்திரங்கள் சமைப்பதுபோல, இயற்கை ஒரேவித அணுக்களினின்றும் குணத்தில் வேறுபடும் பலவிதப் பொருள்களை உற்பத்தி செய்கிறது.

கரித் துண்டும் வைரமும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவைதான். இருந்தாலும், என்ன மாறுதல்! ஒன்று அழகுக்கு அழகு செய்யும் பிரகாசத்துடனும், மற்றொன்று தொடக்கூடக் கூசும்படியாகக் கன்னங் கறேலென்றும் இருக்கின்றது!

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் எரிமலை கக்கிய நெருப்புக் குழம்பில் சிக்கிய கரித்துண்டுகள் திடீரெனக் குளிர்ச்சியாக்கப் பட்டதால் தான் அவை வைரமாக மாறின என்று அபிப்பிராயப் பட்டார் பாரெட் என்ற விஞ்ஞானி. இம் முறையைப் பின்பற்றி ஆராய்ச்சியில் ஈடுபட்ட எச். மாய்சன் தம் நுண்ணறிவு கொண்டு வைரத்தைச் செயற்கை முறைப்படி உற்பத்தி செய்யலாம்என்று அறிந்தார். கரியினால் செய்யப்பட்ட ஒரு சிறு கிண்ணத்தில் கரித்துண்டையும் இரும்பையும் போட்டு, அந்தக கிண்ணத்தை மின்சார அடுப்பில் காய்ச்சினார். உஷ்ணம் ஏற ஏற இரும்பு, நெருப்புப் பிழம்பாகி உருகிவிடுகிறது. 4000° சென்டிகிரேடுக்கு உஷ்ணம் ஏறினால் இரும்புக் குழம்பு ஆவியாக மாறிவிடுகிறது. அவ்வளவு உஷ்ணத்திலிருக்கிற குழம்பைத் திடீரென்று குளிர வைத்தால் இரும்பு குளிர்ந்து கட்டியாகிவிடுகிறது. உள்ளே இருக்கும் நெருப்புக குழம்பு, உடனே குளிரும் போது, முன்பு அடைத்திருந்த இடத்தைக் காட்டிலும்,

க. பம்பாபதி



படம் 1

மிகுதியான இடத்தை அடைக் கிறது. இந்த விரிவின் காரண மாக அமுக்கச் சக்தி, உண்டா கிறது. இந்தப் பிரம்மாண்ட மான அமுக்கச் சக்தி கரியை இரும்பி லிருந்து பிரித்து விடு கிறது. இவ்வாறு பிரிக்கப்பட்ட கரிதான் நிலக்கரியாகவும், கிரா பைட்டாகவும், வைரமாகவும் மாறுகிறது.

செயற்கை முறையில் கிடைக் கும் வைரம் இயற்கையில் வெட்டி எடுக்கப்படும் வைரத்தை விட அளவில் மிகமிகச் சிறிய தாகவும், இயற்கை வைரத்தைக் காட்டிலும் விலை அதிகமாகவும் இருக்கிறது. செயற்கை வைரங் கள் கண்ணுக்குத் தெரியாத அளவு சிறியதாகக் கிடைப்ப தால், அவைகளை ஆபரணங்க ளுக்கு உபயோகப்படுத்த முடிவ தில்லை. செயற்கை வைரங்கள் இயற்கை வைரங்களைக் காட்டி லும் வலிவு குன்றி யிருப்பதால் தொழில் முறையிலும், அவைகள் பயன்படுவதில்லை.

வைரங்களைத் தோண்டி எடுத்து அப்படியே ஆபரணங்க ளுக்கு உபயோகப்படுத்த முடி யாது. அவற்றிற்கு மெருகு ஏற்றி, பட்டை தீட்டினால்தான் ஜொலிப்புக் கொடுக்கும். பட்டை தீட்டுவதில் பெயர்போனவர்கள் ஹாலந்து நாட்டினர்தான். இந்தப் பட்டைகளில் வெளிச்சம் பட்டுப் பிரதிபலிப்பதுதான் வைரம் ஜொலிப்பதற்குக் கார ணம். ஒரு சிறிய வைரக் கல்லில் எவ்வளவுக் கெவ்வளவு பட்டை களின் எண்ணிக்கை அதிகமா கின்றதோ அவ்வளவுக்கவ்வளவு அதன் மதிப்பு அதிகமாகிறது.

பொதுவாக வைரங்களை ஆப ரணத்துக்கு மட்டும்தான் உப

யோகப்படுத்தலாம் என்று எண்ணுகிறார்கள். எண்ணற்ற இயந்திர சாதனங்களிலும் வைரம் உபயோகப்படுத்தப்படுகிறது என்றால் அது புதுமையாகத்தான் இருக்கும். தொழிற்சாலைகளில் உபயோகிக்கப் பெறும் வைரங்கள் ஆபரணங்களுக்குஉபயோகப்படுத்தப்படும் வைரங்களைக் காட்டிலும் விலையில் மட்டம்தான். ஆபரணங்களுக்கு உபயோகிக்கும் வைரங்களை மெருகு ஏற்றி, பட்டை தீட்டுவதில் வைரத்தின் கனம் குறைந்து விரயமாகிறது. வைரத்தைத் தொழில் சம்பந்தமாக உபயோகப்படுத்துவதுதான் சிக்கனமான முறை.

தொழில் சம்பந்தமான வழிகளில் வைரங்கள் பல விதங்களில் உபயோகப்படுத்தப்படுகின்றன. இங்கு, சன்னமான கம்பி இழுப்பதைப்பற்றிக் கவனிப்போம். சன்னக் கம்பிகள் பலதிறப்பட்ட காரியங்களுக்கு உபயோகமாகின்றன. ரேடியோவில் உள்ள வால்வு, டங்க்ஸ்டன் கம்பி முதலியன செய்யவும் சன்னக் கம்பிகள் தேவை. வைரங்களின் உதவிகொண்டு கண்ணுக்குத் தெரியாத, மெல்லிய, 0·01 மில்லி மீட்டர் குறுக்களவு கொண்ட நுண்ணிய கம்பிகள் செய்யலாம். வைரக் கற்களில் துவாரம் செய்வது எளிதல்ல. உலகத்திலேயே மிகமிகக் கடினமான பொருளான வைரத்தில் துவாரம்போடுவதற்கு என்ன செய்கிறார்கள் தெரியுமா? ஒரு நிமிஷத்துக்கு 8000 தடவைகள் சுற்றும் வலிவு மிக்க ஸ்டீல் ஊசியின் உதவியால்தான் (படம் 1-ல் காட்டியபடி) வைரத்தில் துவாரம் செய்கிறார்கள். வைரக் கற்களில் செய்யப்பட்ட துவாரங்கள்(படம் 2-ல் காட்டியபடி) கூர் உருளை வடிவத்தில்தான் இருக்கின்றன.



படம் 2



படம் 3

இம்மாதிரி இருப்பதுதான் கம்பி இழுப்பதற்கு லகுவாக இருக்கிறது. மூன்றாம் படம், கம்பி இழுப்பதை நன்கு விளக்குகிறது. வைரக் கற்களில் உள்ள முக்கோண வடிவத் துவாரத்தில் அகண்ட வாய்ப் பக்கம் கம்பியை விட்டுக் குறுகிய வாய்ப் பக்கம் கம்பியை இழுக்கிறார்கள். மறுபக்கம் இழுக்கும் பொழுது நுண்ணிய, கண்ணுக்குத் தெரியாத மெல்லிய கம்பியாக வெளி வருகிறது. வைரம் மிகக் கடினமான பொருளாகையால் கம்பிகள் இழுக்கும் பொழுது துவாரம் பெரிதாகிவிடாமல் கம்பி மட்டும் மெல்லியதாக, துவாரத்தின் அளவுபோல வருகிறது.

எண்ணெயினால் எரிகிற உலைக் களங்களில், இடைவிடாது எண்ணெய் பாய்ந்துகொண்டே இருந்தால்தான் அடுப்பு எரிந்து கொண்டிருக்கும். எண்ணெய் சதா சர்வ காலமும் பாய்ந்து கொண்டிருக்க வைரக் குழாய்களை உபயோகப் படுத்துகின்றனர். எண்ணெய் சதா பாய்வதால் துவாரம் பெரிதாகிவிடாமலிருக்க வைரத்தைத் தவிர வேறு எந்தப் பொருளும் உபயோகப்படாது.

உலகத்திலேயே கடினமான பொருளாகிய வைரம் எண்ணெயில் தேய்ந்து போய்விடாது! வைரத்தைத் தேய்க்கவோ உடைக்கவோ வைரத்தால்தான் முடியும். அதனால்தான் மலைகளைக் குடையவும், இரும்பை வெட்டவும், வைரத்தை உபயோகிக்கின்றனர். இவ்வாறு வைரம் தொழில் முறையில் பெரிதும் பயன்படுகிறது; இன்றியமையாத பொருளாகவும் கூட ஆகிவிட்டது.

*



அ. நி. சபைக்குப் போய்க்கொண்டிருக்கும் பண்டித நேருவுக்கு மங்கள திலகம் இடுகிருர்கள் (14-8-47)

அ. நி. சபையில் மவுண்ட் பேட்டன்
இந்திய சுதந்திரப் பிரகடனத்தை வாசிக்கிருர்.



அ. நி. சபையில் பண்டித நேரு பேசுகிருர்.



'கிருஷ்ணா' என்ற நம் அரசாங்கக் கப்பலில்
முதல் முதலாக நம் தேசியக் கொடி பறக்கிறது.



சென்னைக் கோட்டையில் நம் தேசியக் கொடி.



டில்லி செங்கோட்டையில் தேசியக் கொடி.

இந்தியாவின் கவர்னர் ஜெனரல்; பிரதமர்; அ. நி. சபைத் தலைவர்



சென்னை நகர சபைக் கட்டிடத்தில்
சென்னைப் பிரதமர் தேசியக்கொடி யேற்றிவிட்டுப் பேசுகிறார்.



இந்திய சுதந்திரப் பிரகடனம் செய்த மவுண்ட் பேட்டனுக்கு
ராஜன் பாபுவின் நன்றியுரை.

மாலை சூட்டப்பெற்ற தலைவர்கள்.



அ. நி. சபை பதிவுப் புத்தகத்தில்
சில தென் இந்தியப் பிரதிநிதிகளின் கையெழுத்துக்கள்.

சக்தி காரியாலயத்துக்கு 3-7-47ல் விஜயம் செய்த
இந்தோனேஷிய விளம்பர இலாகாப் பிரதிநிதி பி. ஸி. ஸரமாவும்,
இந்தியாவின் வியட்நாம் பிரதிநிதியான மாயி தி சாவும்

வியட் நாம்

மாய் தி சாவ்

எங்கள் நாட்டிலிருந்து அந்நியப் பிரெஞ்சு ஆதிக்கத்தை விரட்ட வியட் நாமியர்களாகிய நாங்கள் மரணபரியந்தம் போராடத் தயாராக இருக்கிறோம். ஆனால் எங்கள் அரசாங்கத்தை அங்கீகரித்து இந்தியா எங்களுக்குப் பரிபூரண ஆதரவு அளிக்குமென்றால், நாங்கள் ஆறு அல்லது எட்டு மாதங்களுக்குள்ளாக பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தைத் தகர்த்து, வெற்றிகொண்டு விடுவோம். மருந்து, காயங்களுக்குக் கட்டும் துணி, பணம், ஆட்கள் முதலிய வகைகளில் இந்தியா எங்களுக்கு உதவ முடியும். இப்போது நாங்கள் பலூகா என்ற ஒரு விதமான குண்டைத் தயார் செய்து அதன் உதவியால் கொரில்லாப் போர் நடத்துகிறோம். இந்த ஆயுதத்தை ஒரு தடவை பிரயோகித்தால் பிரயோகித்தவன் உடனே அதற்கு இரையாகி விடுவான். அத்துடன் எதிரிகளுக்கு மிகவும் சேதத்தை விளைவிக்கவும் முடியும். இப்படி

நம் சக்தி காரியாலயத்துக்கு, சுதந்திரப் போர் புரியும் நம் சகோதர ஆசிய நாடுகளான வியட் நாமின் பிரதிநிதியும், இந்தோனேஷியாவின் பிரதிநிதியும்விஜயம் செய்திருந்தனர். அப்போது அவர்களுடைய நாடுகளைப்பற்றிக் கேட்ட சில கேள்விகளுக்கு அவர்கள் அளித்த பதில்களை இங்கே கட்டுரை வடிவில் கொடுத்திருக்கிறோம். முக்கியமான விவரங்களைத் தெரிவிக்கும் இக்கட்டுரை வியட் நாம் பிரதிநிதியின் பதில்கள் அடங்கியது.

இந்தத் தற்கொலை ஆயுதத்தால் இது வரையிலும் 33 பிரெஞ்சு டாங்கிகளை நாசமாக்கி யிருக்கிறோம்.

எதிரிகளோடு ஒத்துழைக்கும் ஜப்பானியர்கள் பாங்காக்குக்கும், அப்புறம் ஆஸ்திரேலியாவுக்கும் தப்பிச் செல்லும் நோக்கத்துடனேயே,ஒத்துழைக்கிறார்கள். நாங்களும் ஜப்பானியர்களையும், ஜெர்மானியர்களையும் ஆயுதங்களைப் போலப் பயன்படுத்திக் கொள்ளுகிறோம். எங்களுக்கு அனுசரணையாக இருக்கும் ஜப்பானியர்களும், ஜெர்மானியர்களும் முறையே டோஜோவையும், ஹிட்லரையும் பின்பற்றுகிறவர்களல்லர்.

எங்கள் நாட்டின் சில நகரப் பிராந்தியங்களில்தான் எதிரிகள் அரண் செய்துகொண்டு இருக்கிறார்கள். அவர்களை நாங்கள் நாலாபக்கமும் முற்றுகையிட்டு வளைத்துக் கொண்டிருக்கிறோம்.

எதிரிகளோடு எங்கள் நாட்டவன் எவனாவது ஒத்துழைத்தால், உடனே அவனுடைய சொத்து சுகங்களைப் பறிமுதல் செய்து விடுவோம்.

ஜப்பானியரின் ஆட்சியின் கீழ் எங்கள் நாட்டு மக்கள் சொல்லொணாக் கஷ்டத்தை அனுபவித்தார்கள். ஜப்பானியர்கள் எங்கள் நாட்டு மக்களை மூன்று தடவைகள் நம்பிக்கைத் துரோகம் செய்திருக்கிறார்கள்.

எங்கள் நாட்டு முதலாளிகள் எல்லாம் பிரெஞ்சுக்காரர்கள் தான். தமிழ் நாட்டிலிருந்து செட்டியார்கள் வந்து எங்கள் நாட்டில் ஜவுளி வியாபாரம் செய்கிறார்கள். எங்கள் நாட்டிலேயே செட்டி ஜாதியினர் என்று ஓர் வியட்நாமிய இனத்தி

னர் உண்டு. தமிழ் நாட்டுச் செட்டியார்கள் வியட்நாம் அரசியலில் நடு நிலைமை வகிக்கிருர்கள். வியட்நாமில் இந்தியர்களுடைய சொத்து சுகங்கள் இருந்தால் அவற்றை மீட்டுக் கொள்ளலாம்.

எங்கள் நாட்டில் பலம் பொருந்திய தொழிற் சங்கம் இருக்கிறது. ஆனுல் போட்டித் தொழிற் சங்கம் இல்லை. பொதுவுடமைக் கட்சியினர் தாங்களாகவே தங்கள் கட்சியை 1945-ல் கலைத்து விட்டனர். எல்லாக் கட்சியினரும் எங்கள் தலைவர் ஹோ சி மின் தலைமையில் பிரெஞ்சு எதிர்ப்பு அணியில் திரண்டிருக்கின்றனர். இந்தக் கூட்டுறவுக் கட்சிக்கு வியட்நாம் லீக் என்று பெயர்.

வியட்நாமின் முக்கிய விளை பொருள்கள் அரிசியும், ரப்பரும் தான். இவையும் தகுந்த முறையில் ரசாயன உரத்தின் உதவியால் விளைவு செய்யப்படவில்லை. வசதிகள் கிடைத்து விவசாயத்தைச் சீர்ப்படுத்திஞல் நல்ல மகசூல் கிடைக்கும். சமீபத்தில் தான பருத்தி விதைத்துப் பயிர் செய்யத் தொடங்கியிருக்கிறேம். எங்கள் நாட்டில் ஒரே ஒரு மில் தான் இருக்கிறது. ராட்டைகளால் நூல் நூற்று, கைத்தறியில் நெய்துதான் எங்கள் துணிக் கஷ்டத்தைச் சரிக்கட்டுகிறேம்.

புராதன இந்தியக் கோவில்களும் சரித்திரச் சின்னங்களும் எங்கள் நாட்டில் உள்ளன. இந்திய இலக்கியம் எதையும் நாங்கள் படித்ததில்லை. சீன இலக்கியத்தையே படித்துவந்திருக்கிறேம். தாகூர், மகாத்மா, நேரு போன்றவர்கள் மிகப் பெரிய மனிதர்கள் என்ற ஒரே விபரம் தான் எங்களுக்கு அநேக வருஷங்களாகத் தெரியும். புரட்சிகரமான பிரசார நாவல்களையும், கதைகளையும் எங்கள் நாட்டு எழுத்தாளர்கள் எழுதுகிருர்கள். காகிதக் கஷ்டம் இருந்தும் எங்கள் நாட்டில் 120 பத்திரிகைகள் நடந்து வருகின்றன. சுதந்திர சோஷியலிஸ்ட் அரசாங்கத்தை ஸ்தாபிப்பதே எங்கள் லட்சியம். இந்தியப் பத்திரிகைகள் எங்கள் போராட்டத்துக்கு இன்னும் அதிகப் பிரதானத்துவம் அளிக்க வேண்டும் எனக் கோருகிறேம்.

எங்கள் நாட்டில் ஜாதி வேற்றுமை இல்லை. மற்ற நாடுகளில் இல்லாத ஓர் அதிசயம் எங்கள் நாட்டில் உண்டு. அதாவது, எங்கள் நாட்டில் நாட்டியமே கிடையாது!

*

'நான் தான்!'

நியூயார்க் நகரில் ஒரு ஹோட்டலில் ஜே. எம். பிளாக் என்ற சித்திரக்காரர் ஓர் அழகியைச் சந்தித்தார். அவளுடைய கவர்ச்சிகரமான தோற்றத்தைக் கண்டதும், அவளைப் பார்த்து ஒரு சித்திரம் வரைய வேண்டும் என்று விரும்பினர். கொஞ்ச நேரத்தில் அந்த அழகி எழுந்து வெளியே போனள். வேலைக்காரப் பெண்ணிடம், "யார் அந்தப் பெண்?" என்று கேட்டார் சித்திரக்காரர். வேலைக்காரி அந்தப் பெண்ணிடம் வெளியே போய்க் கேட்டு விட்டு, ஒரு பதிலையும் வாங்கிக் கொண்டு வந்தாள் அந்தப் பதிலில் அவள் எழுதியிருந்ததாவது: "நான் தான்!"

—டான்பைர் பேர்ண்.

"உங்கள் சருமத்திற்கு
லக்ஸ் டாய்லட்
சோப்பின் இனிய
பாதுகாப்பை அளியுங்கள்"
என்று சொல்கிருர்
கெ. ஆர். செல்லம்
LUX
சினிமா நட்சத்திரங்கள்
விரும்பும்
அழகையளிக்கும் சோப்
LTS. 170-111-40 TM
LEVER BROTHERS (INDIA) LIMITED

நேர்த்திக்கும்
உறுதிக்கும்

சாரதி
கைத்தறி நெசவுகள்

ஏ. ஆர். பி. சாரதி
தபால் பெட்டி நெ. 45
மதுரை

இந்தோனேஷியா

பி. ஸி. சாமா

சர்வதேச அரங்கில் இன்று இந்தோனேஷியப் பிரச்னை மிகவும் பிரதானத்துவம் பெற்றுள்ளது. அந்த நாட்டின் நிலவரங்களைப்பற்றி அந்நாட்டு விளம்பர இலாகாப் பிரதிநிதி கூறிய முக்கியமான விவரங்களே இக்கட்டுரை.

எங்கள் நாட்டில் சாதி, சமயம் உண்டு. ஆனால், சாதிச் சண்டைகளும் சமயச் சழக்குகளும் கிடையாது. இந்தியாவில் தினந்தோறும் சாதியின் பெயரால், மத வெறியால் நடக்கும் கொலை, கொள்ளை முதலியன எங்கள் நாட்டில் நிகழா.

மதம் மக்களுடைய சொந்த விஷயம். அதற்கு அரசியலில் இடம் கிடையாது. சாதி, மதம், கொள்கை வேறுபாடு ஒன்றையும் கவனியாது எங்கள் நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு ஒரு முகமாக அந்நிய டச்சு ஆட்சியை எதிர்த்துப் போராடுகிறோம்.

எங்கள் தலைவர்கள் வயதில் இளையவர்கள். அதனால் வயது முதிர்ந்தவர்களின் வார்த்தைக்கு நாங்கள் மதிப்புக் கொடுப்பதில்லை என்று தவறாக எண்ணக்கூடாது. முதியவர்கள் பழமையை விரும்புவார்கள். உணர்ச்சியோடு, இளைஞர்களின் எழுச்சியோடு முன்னேற, ஊக்கமும் முயற்சியும் அவர்களிடம் காண்பது எளிதல்ல. மேலும், நாங்கள் எங்கள் நாட்டுச் சுதந்திரத்தைப் பெற அஹிம்சா முறைகளைக் கையாளுகிறோம். ஏனெனில் எங்களை அடக்கி ஆளும் அதிகார டச்சுவர்க்கமும் ராணுவ உதவி கொண்டுதான் எங்களை எதிர்க்கிறது. யுத்தத் தளவாடங்களுடன் ஆளுவோனை எதிர்த்துப் போர் புரிய இளைஞர்கள் அவசியம். அதனால் தான் எங்கள் தலைவர்கள் அநேகமாக இளைஞர்களாக இருக்கிறார்கள்.

எங்கள் நாட்டில் அரசியல் கட்சிகள் பல உள்ளன. அவற்றில் முதன்மை ஸ்தானம் வகித்தது மக்களின் பெரும்பான்மையினரின் நல்லெண்ணத்தைப் பெற்றிருக்கும் கட்சி 'மசுமி' என்னும் கட்சிதான். மற்றும் தேசியவாதிகள், இடது சாரிக் கட்சியைச் சேர்ந்தவர்களாகிய தொழிலாளர் கட்சி, (இதை சோஷலிசக் கட்சி என்றுதான் அழைக்கிறோம்) மாணவர்களின் சம்மேளனம் போன்ற பல கட்சிகள் இருக்கின்றன. மேற்சொன்ன கட்சிகள் எல்லாவற்றிலும் சக்தி வாய்ந்த கட்சி இளைஞர்களாகிய மாணவர் கட்சிதான். ராணுவ பலத்திலும், யுத்த தளவாடங்களிலும் மாணவர் கட்சிக்கு, அரசாங்க ராணுவம் கூட இணையாகாது. இங்குள்ள கட்சிகள் அனைத்தும் ஒன்றுபட்டுத்தான் வேலை செய்கின்றன. எல்லோரும் முன்னேற்றத்திலும், நாட்டுச் சுதந்திரத்திலும் முனைந்திருப்பதால் கட்சிகளுக்கிடையே சில செயல் முறைகளைப் பற்றிச் சிற்சில அபிப்பிராய பேதங்க ளிருப்பினும்

முக்கிய நோக்கத்தை விட்டுக் கொடுக்காமல் ஒத்துழைக்கிறார்கள்.

எங்கள் நாட்டில் பேச்சுரிமை எழுத்துரிமை போன்ற மனித சுதந்திரங்கள் உண்டு. அநேகமாக எல்லோராலும் படிக்கப் படும் பத்திரிகை 'மெர்தேக்கா' (சுதந்தரம்) என்னும் தினசரிப் பத்திரிகைதான். இது அரசாங்கத்தின் பத்திரிகை என்றே சொல்லலாம். எங்கள் அரசாங்கம் மக்கள் அரசாங்கம்தானே! ஆகவே, பத்திரிகையும் மக்களுடையதுதான். மக்களுடைய எண்ணங்களையும் கருத்துக்களையும்தான் அது பிரதிபலிக்கும்.

இவ்வளவு நாட்களாக நாங்கள் அடிமைப்பட்டுக்கிடந்ததால் எங்கள் நாட்டில் கைத்தொழில் முன்னேற்றமடைய வாய்ப்பு இல்லை. நாட்டில் இருந்த ஒரு சில ஆலைகளையும், டச்சுக்காரர்களுடன் நாங்கள் நடத்திய சுதந்திரப் போராட்டத்தில், பகைவனுக்குத் தேவையான, உபயோகமாகிற பொருள்களை அழித்துவிடும் பொசுக்கல் கொள்கைக் கிணங்க அழித்து விட்டோம். இனிமேல்தான் கைத் தொழிலைச் சீர்பெற அமைக்கப் போகிறோம்.

இயற்கை விளைவுகளில் எங்கள் நாடு, காப்பி, டீ, எண்ணெய் வித்துக்கள் முதலியனவற்றை உற்பத்தி செய்வதில் முன்னணியில் நிற்கிறது. விளைவைப் பெருக்கவும் எங்கள் நாட்டில் போதிய நாகரிக விவசாயக் கருவிகளும் இல்லை. ரசாயன ஆராய்ச்சிகளிலும் பிற்போக்கில் இருக்கிறது எங்கள் நாடு.

அடிமைப்பட்டுக்கிடந்த நாட்களில் எங்களுடைய கொடி சிவப்பு, வெள்ளை, நீலம் கொண்ட மூவர்ணக் கொடியாக இருந்தது. ஆனால், இப்பொழுது எங்களுடைய தேசியக் கொடி சிவப்பும் வெள்ளையும் கொண்ட இரு வர்ணக் கொடியாகும். அழகாகப் பட்டொளி வீசி எங்கள் நாட்டில் எல்லா இடங்களிலும் இது வானளாவப் பறக்கிறது. எங்கள் கொடியில் உள்ள சிவப்பு நிறம் மன உரத்தையும், வெண்மை, சமாதானத்தையும் நாட்டு நன்மையையும் முன்னேற்றத்தையும் குறிக்கிறது. எங்கள் நாடு பல துறைகளிலும் முன்னேறி, உலகத்தில் நாங்களும் ஒரு சுதந்திர நாடாய்த் திகழ இந்தியா போன்ற நாடுகளின் உதவியும் ஆதரவும் எங்களுக்கு வேண்டும்.

✲

அரசாங்கத்தின் தன்மை

ஒரு அரசாங்கத்தை அமைப்பதற்கு ஆயிரம் வருஷங்கள்கூடப் போதாது. ஆனால், அந்த அரசாங்கம் மண்ணோடு மண் ஆக ஒரு மணி நேரம் போதும்.

—பைரன்.

கணவரின் போக்கிடம்

அநேக வருஷங்களாக என் கணவர் சாயங்கால நேரத்தை எங்கே கழிக்கிறார் என்று எனக்குத் தெரியாமல் இருந்தது. ஒரு நாள் இரவு நான் வெகு சீக்கிரமாகவே வீட்டுக்கு வந்தேன், அப்போது அவர் வீட்டில் இருந்தார்!

—ஸ்கோல்ஸ்கி (தெருப் பேச்சு)

காத்தானின் கேள்வி

சுரபி

●

சுதந்தர தினத்தன்று ரிக்ஷாவில் ஏறவேண்டி வந்தது. ஏறின உடனே, 'ஏஞ்சாமி, இன்னைக்கி காந்தி கொடியாமே? சொயராச்சியங் குடுத்துட்டாங்களாமே?' என்றான் ரிக்ஷாக்காரன். 'ஆமாம்' என்று நான் சொல்லுவதற்குள்ளே, அதே மூச்சில் அவன் கேட்ட கேள்வி இதுதான் :

கார்டு போவுமா — சாமி
கார்டு போவுமா
காத்துக் காத்துப் பார்த்துப் பூட்டம்
காந்தி கொடியும் பறக்குதினிமே (கார்டு)

கார்டுக்காக நாள் கணக்காக் கால் கடுக்குறோம்
காணடிச்சாக் காலும் அரையுங் கட்டித் தொலைக்கிறோம்
லார்டு போலக் காலெப் போட்டு லாவெப் பேசுறான் — காலு
லாடந் தேய நடக்கவச்சி எடக்கு பண்ணுறான் (கார்டு)

எண்ணி எண்ணிப் பொன்னு போலக் கணக்கு பார்க்கிறான்
எட்டு அவுன்சு அரிசி போட்டு மட்டந் தட்டுறான்
கண்ணு கலங்க எண்ணிப் பார்த்துக் காசெக் குடுக்குறோம்-இந்தக்
கட்வாப் பல்லுக் கெட்டாமலே வயித்தெ ஒடுக்குறோம் (கார்டு)

மாரு வலிக்க ராவும் பகலும் வண்டி இழுக்குறோம்
மாராசங்களெக் குந்தவச்சி ஓடி ஒழைக்கிறோம்
ஊரு முழுதுஞ் சுத்திப்பூட்டு ஊட்டெ நாடுறோம்—அங்கே
ஒரு கவளஞ் சோத்துக்காகத் தாளம் போடுறோம் (கார்டு)

மாடு ஆடு குதிரையின்னுக் காடு மேயலாம்
மயிலு குயிலு குருவியின்னு மரத்தெக் கொத்தலாம்
பாடுபட்டுப் பொழைக்க இந்த ஒடம்பெடுத்தூட்டோம்— அங்கே
பஞ்சமின்னு பட்டணத்தெ வந்தடுத்தூட்டோம். (கார்டு)

காங்கிரஸ்ஸு மந்திரிமார் வரட்டு மின்னுங்க—அட்
கடிச்சுக்கடா பல்லெ ஒரு நிமிஷ மின்னுங்க
ஏங்கி ஏங்கிப் பார்த்துப் பார்த்து வெறிச்சிப் பூட்டங்க—சாமி
எந்தப் பக்கம் ஒடுது பால் தேனு காட்டுங்க. (கார்டு)

கூடிக் கூடிப் பேசிப் பேசிக் கொழப்பிடுருங்க
குடுத்த அரிசி அதிகமின்னு கொறைச்சிடுருங்க
கோடி கோடி பேச்செ அளந்து கொட்டினுலுங்க—ஒரு
குறுணி பதக் காகுங்களா கோச்சுக்காதிங்க. (கார்டு)

கொள்ளெடிக்கிற ஒட்டல் கடையெத் தெறக்கப் போருங்க
கோவில் கதவெத் தெறக்கச் சொல்லிக் கூட்டிம் போருங்க
எள்ளெ கொள்ளெ அந்த நேரம் எறைச்சி வச்சாலும்—நாலு
ஏழை பாழை வயிறு நெறையும் நெனச்சிப் பாருங்க. (கார்டு)

சீமை அரிசி வருகுதின்னு சேதி சொல்ருங்க
சிங்களத்துலே நின்னுபோச்சி செரம மின்ருங்க—நம்ப
பூமி யெல்லாம் எங்கே போயி புகுந்துகிச்சீங்க—எனக்கு
புத்தியிலே எட்டலிங்க சத்தியமாங்க (கார்டு)

கோர்ட்டெ கட்டி வச்சிருக்கவன் குடுக்கலேயாம்ங்க
கொள்ளெ லாபக்காரனெல்லாந் தள்ளலேயாம்ங்க
காட்டு மயிலெ எறகு கேட்டாப் போட்டுடுமாங்க—கோர்ட்டு
கச்சேரில்லாம் ஏழை ஜனத்தெக் கசக்கத் தானுங்க. (கார்டு)

பெரிய மனுசென் பேரெ சொல்லிப் பிசுரு குடுக்குருன்
பெரிய பெரிய மூட்டைங்களெ சரிய அடுக்குருன்
அரையாழாக்கு முடிச்சி போட்டு அசந்து போனுக்கா—நம்மெ
அடிச்சி ஒதைச்சி லாக்கப்புலே அடைச்சிப் போடுருன். (கார்டு)

கண்ணலண்ணுக் கணக்கில்லாமெ வாரி எறைக்கிருன்
கண்ணெக் கட்டி மண்ணெத் தூவிக் கலத்தெ மறைக்கிருன்
மண்ணெ ஒடச்சி உழுது வெதச்சி அறுத்திட்ட பாவி—ஒரு
மடி அரிசிக்காக ஓடி ஆடிப் பறக்கிருன். (கார்டு)

சட்டதிட்டம் பேசுறவன் குட்டு வெளுக்குது
சாத்திரத்தெப் பேத்துறவன் சாயம் வெளுக்குது
பட்ட பாடு போதுமின்னு மனசு சொல்லுது—அந்தப்
பச்செக் கொழந்தெ வயித்தெப் பார்த்தா பதட்டம் வெல்லுது.

கட்டத் துணி இல்லேயின்னுக் கையெப் பொத்தலாம்
மொட்டெக் கூரை இல்லேயின்னு மொடங்கிக் கெடக்கலாம்
பட்டினிண்ணுப் பாழும் வயிறு பத்தி வேகுது—அந்தப்
பசி வந்துட்டாப் பத்தும் எங்கோ பறந்து போகுது. (கார்டு)

✻

பாரதியார் காலமானபின்

பாரதி ரசிகன்

தமிழ் நாட்டில் பிறந்த கவிஞர்கள் — அதாவது கவிஞர்கள் என்று மெஜாரிட்டி பலத்தால் ஒப்புக்கொள்ளப் பட்டவர்களல்ல கவிதைகளை எழுதிய கவிஞர்கள் - எப்படியாவது ஒரு துரதிர்ஷ்டத்திற்கு ஆளாக வேண்டுமென்பது ஒரு நியதியாகப் போய் விட்டது. சில கவிஞர்கள் உயிரோடிருக்கும் காலத்தில் பசி, பட்டினி என்ற துரதிர்ஷ்டத்துக்கு ஆளாகிச் சாவார்கள்; சிலர் வாழ்நாளில் சௌகரியமாக இருந்து காலமானாலும் செத்த பிறகு அவர்களை எதாவது, ஒரு துரதிர்ஷ்டம் தொத்திக் கொள்ளும். கவிச்சக்கரவர்த்தி கம்பர் உயிரோடிருந்த காலத்தில் ராஜமரியாதையுடன் வாழ்ந்து, ஒப்பற்ற காவியத்தை இயற்றி விட்டுக் காலமானார். இப்போது அவருக்கும்கூட கெட்ட பெயர் சூட்டச் சிலர் கிளம்பி விட்டார்கள்! சில கவிஞர்கள் உயிரோடிருந்த காலத்தில் கஷ்டப்பட்டாலும், செத்த பிறகாவது அவர்களுக்குப் புகழ், பெருமை என்று பலவிதங்களில் விமோசனம் பிறக்கும். நம் பாரதியாருக்கோ — உயிரோடிருந்த காலத்திலும் துரதிர்ஷ்டம். காலமான பிறகும் ஓரளவுக்கு அதே துரதிர்ஷ்டம தான்! உண்மையில் கவிஞர்களைப் பீடிக்கும் துரதிர்ஷ்டம் கவிஞர்களையா பீடிக்கிறது? அந்தக் கவிஞர்கள் பிறந்த நாட்டுக்குப் பீடித்த துரதிர்ஷ்டங்கள்தான் அவை. நாட்டுமக்களின் அஞ்ஞானத்தினாலும், சுயநலத்தி



'பாரதி ரசிகன்' பாரதியாருடைய கவிதைகளில் மிகவும் ஈடுபாடு உடையவர். அவருடைய கவிதைகளுக்கு விருப்பு வெறுப்பற்ற விமரிசனக் கட்டுரைகளும், புத்தகங்களும் வெளிவர வேண்டுமென்று விரும்புகிறவர் கட்டுரையில் அபிப்பிராயங்களை எல்லாம் ஒளிவு மறைவற்று இவர் தெரிவித்திருப்பதற்குப் பாரதியாரிடத்தில் இவர் கொண்டுள்ள உண்மையான ஈடுபாடுதான் காரணம்.

னாலும் கவிஞர்களுக்குத் துரதிர்ஷ்டம் சம்பவிக்கிறது என்றாலும், அதனால் கவிஞர்களுக்கு ஒன்றும் நஷ்டமில்லை. அறியாமையினால் ஏற்படும் நஷ்டம் பொது மக்களுக்குத்தான்.

பாரதியார் சுமார் இருபத்தாறு வருஷங்களுக்கு முன் தம் பூத உடலை நீத்தார். தொட்டதை எல்லாம் பொன்னாக்குவது போன்ற ஓர் அமர வித்தை அவருக்குத் தெரிந்திருந்தது. எதைப்பற்றி நாலு வரி எழுதினாலும், அந்த எழுத்துக்கள் மனதை வசியப் படுத்தும் மந்திர வாக்குகளாக நிலவும்படி சிருஷ்டித்த மகா புருஷர் பாரதி. உயர்ந்த கருத்துக்களைத் தெரிவிக்கும் இடத்திலும் சரி, சாதாரணமாகச் சந்தம் கூட்டி வெள்ளைப் பாட்டாகப் பாடியிருக்கும் இடத்திலும் சரி, ஏதோ ஒரு மோகன சக்தி அங்கெல்லாம் நாதம் செய்துகொண்டிருக்கச் செய்யும் அபூர்வத் திறமை பாரதியாரிடத்தில்இருந்தது.பிறருக்குக் கிடைக்காத இந்தச் சம்பத்து கம்பருடைய காலத்துக்குப்பின், பாரதியாரைப் போன்ற நாலைந்து பேருக்குத்தான் கிட்டியது. இப்படி ஆயிர வருஷ காலத்தில் நாலைந்து மேதைகளில் ஒருவராகத் திகழும் பேறு பெற்ற கவியரசருக்கு, உயிருடனிருந்த காலத்தில் தமிழர்கள் என்ன விருதுகள் சாற்றினார்கள் என்பதைப் பற்றியோ, எவ்வளவு மோசமான முறையில் அவரைக் கவனிக்காமல் அலட்சியப்படுத்தி விட்டார்கள் என்பதைப் பற்றியோ சிந்திப்பது இன்று அனாவசியமான வேலை. ஏதோ நம்மைப்போலச் சதையுடம்பு பெற்ற மனிதர் காலமானதற்கும் அதற்கு முன் கஷ்டப்பட்டதற்கும் இன்று வருந்திப் பயன் இல்லை. ஆனால், அந்த மனிதன் சிருஷ்டித்து விட்டுப்போன சாகா வரம் பெற்ற கவிகளுக்கு, அவன் காலத்துக்குப்பின் நேர்ந்த கதியை எவனும் யோசித்துப் பார்க்காமல் இருக்க முடியாது. ஏனென்றால் ஒரு நாட்டில் தோன்றிய கவிதைகள் அவற்றை இயற்றிய கவிஞனுக்கும் கூடச் சொந்தமில்லை. அவை நாட்டுக்குச் சொந்தம்; உலகத்துக்குச் சொந்தம்.

முதலில் பாரதியாருக்குப் பாரதி ரசிகர்கள் செய்த கைங்கரியத்தைக் கவனிப்போம். இந்த ரசிகர்கள் பாரதியார் காலமாகி சுமார் பத்துப் பதினைந்து வருஷங்கள் வரை அநேகமாக மூச்சுப் பேச்சு இல்லாமலே இருந்தார்கள். அப்புறம் திடீரென்று ஒரு நாள் கிளம்பி பாரதியாரைப் பற்றிப் புத்தகம் புத்தகமாக எழுதிக் குவித்தார்கள். நல்லது தான். ஒவ்வொரு கவிஞனையும் பற்றிப் பல புத்தகங்கள் வெளி வருவது கவிஞனுக்கும், அவன் பிறந்த நாட்டுக்கும் பெருமையளிக்கும் விஷயம்தான். ஆனால் அந்தப் புத்தகங்கள் எப்படி இருக்கின்றன?

இரண்டொருவர் பாரதியாரின் சரித்திரத்தையும், அவரைப் பற்றிய குறிப்புகளையும் எழுதி இருக்கிறார்கள். உண்மையில் அவர் வாழ்க்கையைப்பற்றித் தெரிந்து கொள்ள இந்த இரண்டொரு புத்தகங்களே போதும். இத்துடன் அவருடைய கவிதைகளையெல்லாம் நல்ல முறையில் விமரிசனம் செய்து பல உயர்ந்த நூல்களை வெளியிடவேண்டும். இதைத்தான் பாரதியாரின் பாடல்களை அனுபவிக்கிறவர்களெல்லாம் எதிர் பார்க்கிறார்கள். இதைச்

செய்வதை விட்டுவிட்டு, பாரதியாரை ஒரேயடியாக ஆகாயத்தில் தூக்கிவைத்து, கண்ணைமூடிக் கொண்டு பாராட்டுகின்றன சிலருடைய புத்தகங்கள். தவிரவும், பாரதியாரின் வாழ்க்கையில் நடந்ததாகச் சில புத்தகங்களில் காணப்படும் செய்திகளை, பாரதியாரைப் பக்தி பூர்வமாக மதித்துப் பாராட்டுகிறவர்களும் கூட நம்புவது கஷ்டமாக இருக்கிறது. இத்தனை வருஷங்கள் கழித்து, இன்று புதிதாக புதிதாக பாரதியாரின் வாழ்க்கையில் நடந்ததாக எழுதிவரும் செய்திகளிலும், வாய் மொழியாகக் கூறப்படும் செய்திகளிலும் ஏராளமாகப் பொய் கலந்திருப்பதாகத் தோன்றுவதுடன் மட்டுமின்றி, பாரதியார் காலத்தவர்களில் சிலர் அவற்றைப் பொய் என்றே மறுக்கிறார்களாம். இப்படி, இந்த இருபத்தாறு வருஷ காலத்துக்குள்ளாக,பாரதியார் சம்பந்தமாக இவ்வளவு பொய்யும் சரடுகளும் குவிந்து விட்டால் இன்னும் எதிர் காலம் வேறு இருக்கிறதே என்றுதான் நாம் பிரமிக்கிறோம். பாரதியாரை உயர்ந்த கவிஞர் என்று காட்டுவதற்கு அவருடைய கவிதைகளே போதும். இப்படி 'இந்திரன் சந்திரன்' என்று பாரதியாரைத் தூக்கிவைத்துக் கூறும் விஷயங்கள் உண்மையாக இருந்தாலும் பொய்யாக இருந்தாலும் அதைப்பற்றி நாம் கவலைப்படுவானேன், என்று இருந்துவிடவும் கூடாது. ஏனென்றால், கவிஞனைப் பற்றிய ஓர் உண்மையான அபிப்பிராயத்தை உருவாக்கி வரும் நேர்மையான ஆரம்ப வாசகனுக்கு, தப்பான மார்க்கத்தைக் காட்டி விடக்கூடியவை அல்லவா இந்த மாதிரிச் சரடுகள்? ஒரு பொருளுக்கு உண்மையான மதிப்பைக் கொடுக்காமல் அதிக மதிப்பையோ, குறைந்த மதிப்பையோ கொடுத்தால், அந்தப் பொருளை மதிக்கத் தெரியவில்லை, என்றுதான் அர்த்தம். இப்படி மதிக்கத் தெரியாத கூட்டத்துக்காகவா ஒரு கவிஞன் அருமையான கவிதைகளை இயற்றி விட்டுப் போவான்? அவனுடைய இதயத்தை ஒட்டி, அவன் கவிதைகளின் உண்மைச்சிறப்பை அறிய வேண்டு மென்றுதானே அவன் எதிர் பார்த்திருப்பான்? கூட்டத்தோடு கோவிந்தாபோட்டுப் புகழும் கும்பலின் மதிப்பை அவன் ஏற்றுக்கொள்ளுவானா? உண்மையில் அது மதிப்பா அல்லது அவமதிப்பா?

இந்த 'ஆகா ஓகோ' கூட்டத்தை விட்டு விலகி மற்றொரு கூட்டத்தைப் பார்ப்போம். இந்தக் கூட்டத்தினர் நேற்று வரை பாரதியாருடைய பாட்டை மதிக்காமலும் அதில், அது குற்றம், இது குற்றம் என்று சொல்லியும் ஒதுக்கிவிட்டு, இன்று சந்தர்ப்பத்தை ஒட்டிப் பாரதியாரைப் பாராட்ட வந்திருக்கிறார்கள். அப்படிப் பாராட்ட வந்தது குறித்து சந்தோஷப்படுவதில் அர்த்தமில்லை. ஏனென்றால் உண்மையில் அவர்களில் பலர் தம் உள்ளத்தில் அரியாசனம் போட்டுக் கொடுத்திருப்பது ஏதோ கடைச்சங்க காலப் புலவர்கள் சிலருக்குத்தான். கம்பருக்குக்கூட இண்டாவது மதிப்புத்தான் கொடுக்கிறார்கள் என்றால் பாரதியார் எம்மாத்திரம்? மொத்தத்தில் இரண்டு கூட்டத்தாரும் பாரதியின் உண்மை சொருபத்தை அறிய மறுக்கிறார்கள் என்பது உண்மையாகி விடுகிறபோது, இவர்களை ஒன்று போலவே

எடை போட்டுவிட வேண்டியது தானே?

இன்று, இன்றென்ன கடந்த சில வருஷங்களாகவே, பாரதியாருடைய பாடல்கள் தமிழ் நாட்டின் மூலை முடுக்குகளிலெல்லாம் கூடப் பிரவேசித்து உலவுகின்றன என்பது பெருமைப் படத்தக்க விஷயம். சின்னஞ் சிறு குழந்தைகளி லிருந்து பெரியவர்கள்வரை பாரதிபாடல்களை மனம் கனிந்து பாடுகிறார்கள்; அனுபவிக்கிறார்கள். பாரதியார் பாடல்கள் பிராபல்யம் அடைந்ததற்கு பாரதியாரின் கவித்துவ சக்தி தான் காரணம் என்றாலும், அவர் பாடல்களை நாடெங்கும் பாடிப் பரப்புகிறவர்களையும் பாராட்டுவோமாக. சங்கீதக் கச்சேரிகளிலும் பாரதியார் பாடல்களைப் பாடுகிறார்கள். இங்கேதான் ஒரு முக்கியமான விஷயத்தைக் குறிப்பிட வேண்டும். அதாவது பாரதியாருடைய பாடல்களில் உள்ள பொருளைக் கவனித்து அதற்கேற்ற வர்ண மெட்டையும் ராகத்தையும் அமைத்துப் பாடுவதுதான் நியாயமான வழி. 'வெற்றி எட்டுத் திக்குமெட்டக் கொட்டு முரசே' என்ற பாடலை கிராமபோனில் கேட்டேன். அந்தப் பாட்டைக் கம்பீரமான ஆண் குரலில், கம்பீரமான ராகத்தில் கேட்டால்தான், பாட்டின் உண்மை உணர்ச்சியில் ஈடுபடமுடியும். ஆனால், மெல்லிய குரலிலும், மோஹன ராகத்திலும் அந்தப் பாட்டு ஒலிப்பதிவு செய்யப்பட்டிருந்தது. மற்றோர் அதிசயம்: செட்டிநாட்டில் ஓர் ஊரில் ஒரு சமயத்தில் இந்த அதிசயம் நடந்ததாக ஒருவர் கூறினர். அதாவது ஒரு பொதுக்கூட்டத்தில் 'ஜெயமுண்டு பயமில்லை மனமே' என்ற பாட்டை, கம்பீரமாகப் பாட வேண்டிய இந்தப் பாட்டை, தாலாட்டுப் பாடும் நீலாம்புரி ராகத்தில் மிகவும் கொஞ்சிக் கொஞ்சி உருக்கமாக ஒருவர் பாடினாராம். ஜனங்கள் இதைக் கேட்டுத் தூங்காமல் இருந்தது தான் அதிசயம்! இப்படிப்பட்ட அலங்கோலங்களைத் தடுப்பதற்காக, பாரதியாரின் பாடல்களில் இசையில் பொருத்திக் கச்சேரிகளிலும், கூட்டங்களிலும் பாடக்கூடிய வற்றைத் தேர்ந்தெடுத்து, அவற்றின் அர்த்த பாவத்துக்குப் பொருத்தமான வர்ண மெட்டுக்களும் ராக தாளங்களும் அமைக்க வேண்டியது வித்துவான்களின் கடமை. அப்படிப்பட்ட நல்ல முயற்சிக்குப் பத்திரிகைகள் பிராபல்யம் கொடுத்து, ஆதரித்து ஊக்குவிக்க வேண்டும்.

கடைசியாக இன்னொரு பயங்கரமான விஷயம்: அதாவது பாரதி பாடல்களின் பதிப்புரிமை யாரோ ஒரு வடநாட்டு மார்வாரியிடம் இருப்பதாக ஒரு வதந்தி முன்னால் இருந்தது. அது உண்மையா பொய்யா என்பது எனக்கு அப்போதும் தெரியாது; இப்போதும் தெரியாது. ஆனால் 29-8-47 ஹிந்துப் பத்திரிகையில் ஆசிரியருக்குக் கடிதங்கள் என்ற பகுதியில் ஒரு கடிதத்தைப் பார்த்தேன். அதில் பாரதி பாடல்களின் உரிமை ஒரு தனிப்பட்ட நபரிடம் இருப்பதாகவும், அந்தப் பாடல்களைப் பொது மக்கள் தம்மிஷ்டம்போலப் பயன் படுத்திக்கொள்ளுவதற்கு (அதாவது சினிமா, நாடகம், ஒலிப்பதிவு முதலியவற்றிற்காகப் பாடுவதற்கு, என்று நினைக்கிறேன்) அவருடைய அனுமதியைப் பெற வேண்டும் என்றும்

இல்லாளாக இருப்பது விளையாட்டில்லை



வேலையாட்கள் முன்னைவிட இரட்டிப்பு சிலவாயும், காய்கறிகள ஒன்றுக்கு மூன்று நான்குபங்கு அதிகவிலையுள்ளதாயும், பழங்கள் கிடைப்பது அரிதாயும், வண்ணான் சரிவர வராமலும் சமையல் வேலை செய்பவர்கள் சிலவை அதிகம் காட்டுவதிலேயே ஆசைகொண்டவர்களாயும் உள்ள இந்த நாட்களில் வாழ்க்கை ஒரே கவலை சித்திரமாக இருக்கின்றது. ஆயினும் இல்லாள் இவைகளை எல்லாம் ஒரு உற்சாகத்தோடு சமாளிக்க வேண்டும். அதற்கு அவளுக்கு அடிக்கடி போஷணையளிக்கும் டீ தேவையாய் இருக்கிறது. டீயைப்போல் சோர்வுற்ற நரம்புகளுக்கு பலமளித்து மனதிற்கு ஆயாசந்தீர்த்து வீட்டு அலுவல்களை சரிவர கவனிப்பதற்கு வேண்டிய பலமளிப்பது வேறு ஒன்றுமில்லை.

நல்ல டீ தயாரிக்கும் முறை

1. டீயை கேட்டிலில் காய்ச்சாதே. டீபாட் உபயோகி.
2. டீபாட் ஈரமில்லாமலும் வெதவெதப்புடனும் இருந்தால் தான் உலர்ந்த டீ தழையைப் போட்டு கொதிஜலம் விட்டதும் அது நன்றாய் ஊறி நல்ல மணத்தை தரும்.
3. ஒவ்வொரு கப் டீக்கும் ஒரு டீஸ்பூன் தழை போட்டு அதிகப்படியாக டீ பாட்டிற்கு ஒரு ஸ்பூனும் போடவும்.
4. புதிதாக கொதிக்கவைத்த தண்ணீரையே உபயோகிக்கவும். ஒருபொழுதும் முன்னாடியே கொதிக்க வைத்த ஜலத்தையோ, கொதிக்காத ஜலத்தையோ அல்லது ரொம்ப கொதிக்கவைத்த ஜலத்தையோ உபயோகிக்காதே. ஜலம் குமிழைப்போல் கிளம்பும் பொழுதுதான அது கொதிப்பதற்கு அடையாளம்.
5. ஐந்து நிமிஷத்திற்கு குறையாமல் கஷாயம் ஊற வேண்டும்.
6. டீ பாட்டில் இருக்கும்பொழுதே சர்க்கரையும் பாலும் சேர்க்காதே. கப்புகளில் கஷாயத்தை ஊற்றிவிட்டே அவைகளை சேர்க்கவும்.

டீ

எந்நேரமும் டீ நேரம்தான்

இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது. IK 279 TM

LIPTONS
WHITE LABEL
TEA
BY APPOINTMENT TO THE
LATE KING-EMPEROR GEORGE V
ONE POUND NETT
एक पाउंड नैट
லிப்டன்ஸ்
என்றல்
முதல்தரமான டீ

LTH-132 J.TM.

கண்டிருந்தது. அவர் அப்படிக் கொடுக்க மறுக்கவும் செய்கிறார் என்றும் அதே கடிதத்தில் கூறப்பட்டிருந்தது. இந்தச் செய்தி உண்மையென்றால் பாரதியாரின் பாடல்கள் மேலும் மேலும் பரவி வருவதற்கு வழியில்லாமல் போய்விடும். ஒரு கவிஞனுடைய பாடல்களுக்கு இப்படிப்பட்ட தர்மகர்த்தாத்தனம் இருந்தால் தெருவெல்லாந் தமிழ் முழக்கம் முழங்கச் செய்வது எப்படி? மக்களுக்காகப் பாடி வைத்த கவிஞனுடைய லட்சியத்தின் கதி என்ன? முன்னால் கூறியதைப்போல கவிகள் என்ற தேசியச் சொத்தைத் துஷ்பிரயோகம் செய்வதை எவ்வளவு அழுத்தமாகக் கண்டிக்க வேண்டுமோ, அவ்வளவு அழுத்தமாக அவற்றைச் சுதந்திரமாகப் பயன்படுத்த விடாமல் செய்வதையும் கண்டிக்க வேண்டும். பாரதியாரின் பாடலை உபயோகிப்பதற்கு ஏதாவது பணம் கொடுத்து அனுமதி பெற வேண்டுமென்றால், அப்படி அனுமதி கொடுக்கும் விஷயத்தில் பாரதியின் குடும்பத்தார் சம்பந்தப்பட்டிருந்தாலும் ஓரளவாவது நியாயமுண்டு. இம்மாதிரியான பல காரணங்களால்தான் இன்று பொதுவாக பாரதிநூல்கள் கடைகளில் கிடைக்கவில்லையோ எனத் தோன்றுகிறது. ஒவ்வொரு சாதாரணப் புத்தகமும் அழகாக வெளியிடப்பட்டு மார்க்கெட்டுகளில் குவிந்து கிடக்கும் போது, பாரதியின் புத்தகம் சாமானியமாகக் கிடைக்கிறதில்லை என்றால் பாரதியின் கலையும், புகழும் பட்டப்பகலில் குழி தோண்டிப் புதைக்கப்படுகின்றன என்றுதான் கூற வேண்டும். கவிதை நூல்களை விலை கொடுத்து வாங்கி அனுபவிக்க வேண்டுமென்ற ஆர்வம் தமிழ் நாட்டில் இப்போது மிகுதியாக இருக்கிறது. பொது மக்களின் அறிவு வளர்ச்சிக்கு ஆதரவளிக்க வேண்டிய அரசாங்கம் மேற் சொன்ன ஆர்வத்தை வளர்த்து அவர்களின் ஆவலையும் பூர்த்தி செய்ய வேண்டும். அதனால், அந்தக் கவிதை ஆர்வத்துக்கு உலைவைக்கும் முறையில் இன்று பாரதியின் புத்தகங்கள் விற்பனைக்குத் தயாராக இல்லாத நிலையையும் உடனே ஒழித்துக் கட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். எங்காவது ஒரு மூலையில் ஒரு கடையில் பாரதி புத்தகம் கிடைக்கலாம். ஆனால், அது போதாது. எல்லா இடங்களிலும் தாராளமாய் போய் வாங்கிக் கொள்ளும் அளவுக்குக் கடை தவறாமல் பாரதி நூல்கள் வைக்கப்பட்டிருக்க வேண்டும்.

தவிரவும், இனி பழைய மாதிரியில் பாரதி நூல்களைப் பதிப்பிக்காமல் உறுதியான அழகான பைண்டில் சுத்தமான பதிப்புகளாக வெளியிட வேண்டும். பாரதியார் சில பாடல்களுக்குக் கொடுத்திருந்த தலைப்புகளை இப்போது மாற்றி விட்டார்கள் என்றும் பலர் கூறுகிறார்கள். உதாரணமாக, 'தேசபக்தன் ஆங்கிலேயனுக்குக் கூறுவது' என்ற பாட்டின் தலைப்பில் 'வ. உ. சிதம்பரம் பிள்ளை கலெக்டர் விஞ்சுதுரைக்குக் கூறியது' என்று பாரதியார் எழுதியிருந்ததாகப் பலர் சொல்லிக் கொள்ளுகிறார்கள். இது உண்மையென்றால், பாரதியார் எழுதியவாறே புத்தகங்களை வெளியிட வேண்டுமே ஒழிய இந்தத் திருத்தங்களுடன் இன்னும் வெளியிட்டு வருவது தவறு. இப்படி எல்லாம் திருத்தங்கள்

செய்ததற்கு என்ன காரணம் என்றுதான் நமக்குப் புரிய வில்லை.

பாரதியாரின் பாடல் போட்டி இப்போது ஒவ்வோர் ஊரிலும் நடைபெறுகிறது. இதில் பரிசு பெறுகிறவர்களுக்குக் கட்டாயம் பாரதி புத்தகங்களைத்தான் பரிசாக கொடுக்க வேண்டுமே ஒழிய, பவுண்டன் பேனு கதர்க் குல்லாய், சோப்புப் பெட்டி போன்ற பொருள்களைக் கொடுக்கக் கூடாது.

பாரதியாரின் நினைவாக அவர் பிறந்த ஊரில் மண்டபம் நிர்மாணிக்கப் பட்டது மிகவும் சிறந்த காரியம். அதில், பாரதியாரின் நூல்களும் அவருடைய கையெழுத்துப் பிரதிகளும் காட்சிக்காக வைக்கப்படும் என்பது எதிர்பார்க்கக்கூடிய விஷயமே. ஆனால், அந்த மண்டபத்திலும், தலை நகராகிய சென்னையின் ஒரு முக்கியமான பகுதியிலும், பாரதியாரின் உருவச் சிலைகளைச் செய்துவைக்க வேண்டியது மிகவும் அவசியம். ஆங்கிலேயர்கள், ருஷ்யர்கள் போன்ற மேல் நாட்டார் தம் நாட்டுக் கவிஞர்களின் உருவச் சிலைகளை அழகாக வார்த்து முக்கியமான இடங்களில் வைத்திருக்கின்றனர். நம் தலை முறையில் தோன்றி இனி உலகுள்ளளவும் புகழ் வீசப்போகும் நம் சிரஞ்சீவிக் கவிஞருக்கு, நாம் செய்ய வேண்டிய இந்தச் சிறு கடமையைச் செய்யத் தவறிவிடக் கூடாது.

✲

சாந்தி பெறுக!

இந்த இதழில் "ஆனந்த குமாரசாமி" என்னும் கட்டுரை அச்சாகிக் கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில், நம் உள்ளம் திடுக்கிடும்படியாக "பாஸ்டன் நகரில், செப்டம்பர் 10-ந்தேதியன்று டாக்டர் ஆனந்த குமாரசாமி தம் 70-ம் வயதில் காலமாய்விட்டார்" என்ற செய்தி வந்தது. அன்னரின் பிறந்த தினத்தை முன்னிட்டு மேற்குறித்த கட்டுரையை வெளியிட்டிருந்தோம். சுதந்திர இந்தியாவுக்கு அவர் திரும்ப வேண்டுமென்றும் அதில் கூறப்பெற்றுள்ளது. ஆனல், மேலே உலகத்தில் நம் இந்தியாவின் கலைச் சிறப்பை விகசிக்கச் செய்த ஸ்ரீ குமாரசாமி 'மலைவிளக்கு மறைந்தது போல்' திடீரென்று மறைந்து விட்டார். எனினும் இந்தியா சுதந்திரம் பெற்ற செய்தியைக் காதாரக் கேட்டுவிட்டு அமரராய்விட்ட அவருடைய ஆத்மா சாந்தி பெறுமென்பதில் ஐயமில்லை; சாந்தி பெறுக!

—ஆசிரியர், சக்தி

✲

தப்புத்தானே!

ஒரு பெண் தன் சிநேகிதையிடம் சொன்னதாவது: "என்னை ஒரு தடவை முத்தமிட்டுக்கொள்ள அவனை அனுமதித்தேன். அன்று முதல், அவன் எனக்கு அறிமுகமான நண்பனுக ஆவதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கிறன்."

—பென்ராத் கேலிச் சித்திரம

ஆனந்த குமாரசுவாமி

“ ரசிகன் ”

இந்தியா சுதந்திரம் பெற்ற தினத்தை அடுத்தடுத்து, இந்திய சுதந்திரத்துக்காகத் தம் அறிவையும் உழைப்பையும் செலவிட்ட மேதைகளாகிய அரவிந்தர், ஆனந்த குமாரசாமி, பாரதியார், காந்திஜி போன்றவர்களின் பிறந்த தினங்கள் வந்துகொண்டிருப்பது ஆச்சரியகரமான விஷயம். கலைச் செல்வராகிய ஆனந்த குமாரசுவாமியின் 70-வது ஜன்ம தினத்தை ஒட்டி அவரைப் பற்றிய இக் கட்டுரையை வெளியிடுகிறோம்.

கீழை நாட்டுக் கலாசாரத்தையும் நாகரிகத்தையும் மேலை நாடுகளில் பரப்பி, அவற்றின் மேன்மையை மேலை நாட்டினர் அறியும்படி செய்த ஒரு சில பேருபகாரிகளில் ஆனந்த கே. குமாரசுவாமியும் ஒருவராவர். மேலை நாட்டு, கீழை நாட்டு அறிஞர்களால் ஒரு முகமாகப் பாராட்டப் பெற்று, மதிப்புக் கொடுக்கப்படும் கலைஞரும் இவர் ஒருவரே. சமீபத்தில் இவருடைய எழுபதாவது பிறந்த தினம் உலகத்தின் பல பாகங்களிலும் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

இவர் இலங்கையில், 1877-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 22-ம் தேதி பிறந்தார். இவர் பிறந்த குடும்பம் கல்வி யறிவும் பரம்பரைப் பெருமையும் உடையது. இவருடைய தந்தையாரான முத்துக்குமாரசாமி என்பார் ஆசியாவிலேயே முதன் முதலாகச் ‘சர்’ பட்டம் பெற்றவராம். முத்துக் குமாரசுவாமி எலிசபெத் கிளே பீபி என்ற ஆங்கில மாதை மணந்துகொண்டார். இவ் விருவருக்கும் பிறந்தவரே ஆனந்த குமாரசுவாமி. இவர் லண்டன் யூனிவர்ஸிடி கல்லூரியிலே படித்து, பி.எஸ்.ஸி., டி.எஸ்.ஸி., முதலிய பட்டங்களைப் பெற்றார். ஆங்கிலம், பிரெஞ்சு; ஜெர்மன், லத்தீன், கிரீக், சமஸ்கிருத பாஷைகளில் பாண்டித்தியம் அடைந்தார். இவற்றைத் தவிரப் பல பாஷைகளில் பேசவும் எழுதவும் கற்றார்.

26 வயது இளைஞரா யிருக்கும் போதே, இலங்கை உலோக மேற்பார்வைக் குழுவில் (மினரலாஜிகல் சர்வே) டைரக்டராக நியமிக்கப்பட்டார். அக் காலத்தில் இலங்கையில் தேசியக் கல்வியைப் பரப்பவும், சமூகச் சீர்திருத்தங்கள் செய்யவும்

வேண்டி, இலங்கைத் தேசிய வெளியீடு என்ற பத்திரிகையையும் நடத்தினர். இந்தியத் தேசிய இயக்கத்தை ஆதரித்துப் பேசியும் எழுதியும் வந்ததுடன், 1910-11-ல் ராயல் இந்தியன் சொஸைட்டியை நிறுவுவதிலும் பெரும் பங்கு எடுத்துக்கொண்டார். பிறகு, பாஸ்டன் லளித கலை மியூஸியத்தில் இந்திய, இரானிய, முகமதியக் கலைகளின் ஆராய்ச்சியாளராக நியமிக்கப்பெற்ருர். 1936-ல் பூனா பண்டர்கார் கீழ்த்திசை ஆராய்ச்சிக் கழகம் இவருக்குக் கௌரவ அங்கத்தினர் பதவி யளித்து இவரைக் கௌரவித்தது. இந்தியக் கலாசாரத்தையும், ஆத்மிகப் பண்புகளையும் பற்றி இவர் எழுதியிருக்கும் புத்தகங்கள் பல. அவற்றுள், சிவ நடனம், இந்திய இலங்கைக் கலைகளும் தொழில்களும், வேதங்களில் புதிய நோக்கு, பாவ லக்ஷணங்களின் கண்ணுடி முதலியன குறிப்பிடத்தக்கன வாகும். தற்சமயம் பாஸ்டன் லளித கலை ஆராய்ச்சிக் கழகத்தில்தான் இவர் இருக்கிருர்.

கீழை நாடுகளில் வளர்ந்திருக்கும், கலாசாரங்களுக்கும், சமயங்களுக்கும் காரணமான மூல தத்துவங்களை மேல் நாடுகளில் பரப்புவதற்காகச் சென்ற ஒரு கீழை நாட்டவர் என்று ஆனந்த குமாரசுவாமியைக் குறிப்பிடலாம். உலகத்தின் கலாசாரங்களும், சமயங்களும் ஒரே ஒரு மூலத்தினின்றும் உதித்துப் பிரிந்தவைதான் என்று தீவிரமாக நம்புகிருர் இவர்.

யந்திரத் தொழில்முறை வராளமாகப் பெருகுவதையும் ஆனந்த குமாரசுவாமி எதிர்க்கிருர். வாழ்க்கையிலும் கலையிலும் கொள்ளவேண்டிய லட்சியங்கள் பற்றி ரஸ்கின், வில்லியம் மாரிஸ் போன்ற அறிஞர்கள் கூறுவதை இவர் பூரணமாக ஒப்புக்கொள்ளுகிருர். சமீபத்தில் ஹிந்துவில் எழுதிய கட்டுரை யொன்றில் கீழ்க் கண்ட கருத்துப்பட அவர் கூறுகிருர்:

"வாழ்க்கைச் சௌகரியங்கள் ஒரே இடத்தில் முடங்கிக் கிடக்காமல் எல்லா இடங்களிலும் பரவ வேண்டும்; உள்ளூரிலேயே சுய தேவைப் பூர்த்தி செய்து கொள்ள வசதி இருக்க வேண்டும்; குறைந்த அளவு உற்பத்தியும், வாழ்க்கையின் அத்தியாவசியங்களை உற்பத்தி செய்பவருக்கும் வாங்குபவருக்கும் இடையே உள்ள உறவும் மீட்கப்பட வேண்டும்; இவற்றுக்கான நியாயமான காரணங்களை பரதன் குமரப்பா, தாம் எழுதியுள்ள 'முதலாளித்துவமா? சமதர்மமா? கிராமத்துவமா?' என்ற சிறந்த புத்தகத்தில் திறம்பட எடுத்துக் காட்டியுள்ளார்."

கலைகளெல்லாம் வெறும் பொழுதுபோக்குகளாக இல்லாமல், சமூகத்தைத் திருத்தியமைக்கக் கூடியனவாயும் இருக்க வேண்டுமென்பது ஆனந்த குமாரசுவமியின் கருத்து. 1910-ம் வருஷத்தில் அலகாபாத் பொருட்காட்சிக்காக ஒவ்வோர் ஊராக அலைந்து டாக்டர் ஆனந்தகுமாரசுவாமி சித்திரங்களைச் சேகரித்து வந்தார். இந்தியக் கலைகளில் பொதுமக்களுக்கு ரசனை ஏற்பட வேண்டுமென்று அவர் பட்ட சிரமம் கொஞ்ச நஞ்ச மல்ல. அவருடைய சித்திர விளக்கங்களுக்குப் பல திறப்பட்ட புகமுரைகள் கிடைத்தன. எந்த விஷயத்தைப் பற்றி எழுதினுலும் குமாரசுவாமி இந்தியப் பண்

செப்டம்பர்
26 முதல்
சென்னை
ஸ்டார் டாக்கீஸிலும்
மற்றும் அநேக
நகரங்களிலும்
ஆரம்பமாகிறது
ஜெமினியின்
மிஸ்
மாலினி
மகிழ்ச்சியை கொடுக்கவல்ல
உன்னத சித்திரம்..
தயாரிப்பு: ராம்நாத்
டைரக்ஷன்: சுப்பு
புஷ்பவல்லி-சுந்தரிபாய்
சுப்பு - நாராயணராவ்
நடித்தது

பாட்டையும், இந்தியத் தத்துவத்தையும் அடிப்படையாகக் கொண்டே எழுதுவார். "ஒரு தேசத்தை உருவாக்குகிறவர்கள் அரசியல் வாதிகளல்லர்; கலைஞர்களும், தத்துவ ஞானிகளும் தான்" என்று அவர் கூறியிருப்பதே, கலையைப்பற்றிய அவருடைய கருத்துக்குச் சரியான எடுத்துக் காட்டாகும். மறைந்து கிடந்த பல தேசியக் கலைகள் இவருடைய முயற்சியினுல் மறுமடியும் தலை யெடுத்து வளர ஆரம்பித்தன. கலையைப் பற்றி குமாரசுவாமி கூறுவதாவது:

"மனிதனுடைய உடலுழைப்பின் சாமர்த்தியத்துக்கும் அப்பாற்பட்ட ஒன்றுதான் கலை; இயற்கையைப் படம் பிடித்து நகல் பண்ணுவது மட்டும் கலையாகிவிடாது. தற்கால விஞ்ஞான சாஸ்திரத்தின் அடிப்படையில் மனிதனுடைய உடல் உணர்வுகளையும், மிக ஆழ்ந்த புலனுணர்வுகளையும் துருவி ஆராய்ந்து, விஞ்ஞானத்தையும் நம்பிக்கையையும் ஓர் உன்னதமான நிலையில் ஒன்று படுத்துவது சாத்தியமே என்பதைக் காட்ட வேண்டும்."

ஜே. எம். ஹபீஸ் சையத் என்பவர் இந்தியன் ரெவ்யூவில் கூறுகிருர்: "இந்த மாபெரும் எழுத்தாளரும், சிந்தனை யாளருமாகிய உலகப் பிரசித்தி பெற்ற மேதை, சிங்கள, இந்தியச் சித்திரங்களைப் பற்றிக் கூறிய கருத்துக்கள் சிரஞ்சீவித்துவம் பெறக் கூடியவை யாகும். இவர் சேகரித்த சித்திரங்கள் அமெரிக்காவில், பாஸ்டன் நகரின் காட்சிச் சாலையில் பத்திரமாக வைக்கப் பட்டுள்ளன. அதன் அதிகாரியாக இருக்கிருர் குமாரசுவாமி. அவர் தூர தேசத்தில் இருந்தாலும், நம் நடைமுறையையும் முன்னேற்றத்தையும் நம்முள் ஒருவராகவே இருந்து கவனித்து வருகிருர்."

இந்தியாவின் சுதந்திரத்தைப் பற்றி வற்புறுத்திப் பற்பல சந்தர்ப்பங்களிலும் இவர் எழுதியிருக்கிருர்:

"சுயராஜ்யம் யுவ பாரதத்தின் லட்சியம். இந்தியர்களின் லட்சியத்தில் தேசியமும் சர்வ தேசியமும் அடங்கியுள்ளன. இந்தியா தேசிய உணர்ச்சி பெற வேண்டுவது அவசியம். ஏனென்ருல் சுதந்திரம் பெருத ஒரு நாடு தானும் வளராமல் இருப்பதுடன், உலக முன்னேற்றத்துக்கும் உதவிபுரிய முடியாது."

குமாரசுவாமி கம்பீரமும், கவர்ச்சியும் பொருந்திய தோற்றம் உடையவர். "சந்தன மரத்தில் செதுக்கப்பட்ட தெய்வ விக்ரஹம்" என்று இவரை ஓர் அமெரிக்கர் வர்ணிக்கிருர்.

"அவருடைய உருவப் பொலிவும் பேச்சின் இனிமையும் கண்ணையும் கருத்தையும் கவர்ந்தன. இதை என்னுல் மறக்க முடியாது. எங்கள் காலத்தில் ஆனந்த குமாரசுவாமி போன்ற ஒரு கலை விமரிசகரை நாங்கள் காண முடியாது. அவர் விலை மதிக்க வொண்ணுத மாணிக்கம் போன்றவர்" என்கிருர் கவிஞர் ஹரீந்திரநாத் சட்டோபாத்தியாயர்.

இந்தியாவின் தலைசிறந்த புத்திரர்களில் ஒருவராகிய இந்த மேதை நம்மை விட்டுவிட்டு எங்கேயோ தூர தேசத்தில் வேலை செய்து, உயிர் வாழ்வது வருந்தத்தக்க தாகும். இவரதுசேவையை எதிர்பார்த்து நிற்கும் சுதந்திர இந்தியாவுக்கு இவர் விரைவிலேயே திரும்புவார் என நாம் நம்புவோமாக.

பாரதத்தைக் காத்த சோழ மன்னர்

தி. நா. சுப்பிரமணியன்

தமிழ் நாட்டு மன்னன் ஒருவன் கஜனிமுகம்மதுவின் படையெழுச்சியை எதிர்க்கப் போனதையும் அந்நிய ஆதிக்கத்திலிருந்து வடநாட்டைக் காப்பாற்றி ஆட்சி புரிந்ததையும் பற்றி ஆதாரத்துடன் கூறுகிறார் கட்டுரை ஆசிரியர். ஆச்சரியப்படத்தக்க, பெருமைப் படத்தக்க இந்தப்புதுச் செய்தி தமிழ் நாட்டுச் சரித்திரத்தை விரிவாக எழுதாமல் அசட்டை செய்துவிட்ட சரித்திர ஆசிரியர்களுக்கு ஒரு சவாலாகவும் இருக்கிறது. எல்லோரும், முக்கியமாகச் சரித்திரம் ஆராய்ச்சியாளர்கள் இதை அவசியம் படிக்க வேண்டும்.

கண்ணன் கீதையிலே சொல்லியிருக்கிறாராம், "உலகத்திலே நன்மை நசித்துத் தீமை ஓங்கி நிற்கும் காலத்திலே நான் தோன்றி தர்மத்தை நிலை நிறுத்துவேன்" என்று. இது உலக இயற்கையான உண்மை. நாட்டிலே கொடுமை ஏற்பட்டு விட்டால், மக்கள் எவ்வளவு காலம் தான் அதைப் பொறுத்துக் கொண்டிருப்பார்கள்? அவர்கள் திரண்டு எழுந்து, அந்தக் கொடுமையை ஒழித்து அமைதியை ஏற்படுத்துவார்கள். இதை நாம் உலக சரித்திரத்திலே பற்பல சமயங்களிலும் காண்கிறோம். அந்த அந்தச் சமயங்களில், கிளர்ச்சி பெற்ற மக்களை ஒன்று திரட்டி அவர்கள் சக்தி சிதறுண்டு வீண் போகாமல் காத்து எழுச்சியைத் திறம்பட நடத்தி வைப்பதற்காகத் தோன்றும் மகா புருஷர்களை நாம் கடவுளின் அவதாரம் என்றும் தெய்விக அம்சம் பொருந்தியவர் என்றும் கொண்டாடுகிறோம். அவர்களுடைய பெயர்கள் நாட்டுச் சரித்திரத்திலே நிரந்தரமான ஸ்தானத்தை அடைந்து அலங்கரிக்கின்றன. நம் தேசத்திலே புகுந்து நாடு கொண்டு அந்நியராட்சியை நிறுவிய சக க்ஷத்ரப ஹூணர்களைப் போரில் வென்று பழைய தர்மத்தை நிலை நிறுத்திய விக்கிரமாதித்தர்களைச் சரித்திரம் மறக்கவில்லை.

ஆனால் இதே போன்ற மகத்தான சேவையை நம் நாட்டுக்குச் செய்த சோழ மன்னர்களைச் சரித்திரம் மறந்து விட்டது. சரித்திரம் மறந்தாலும், தமிழ் நாடு மறக்கவில்லை. அவர்கள் பெயரைத் தாங்கிய சின்னங்கள் இன்னும் தமிழ் நாட்டில் பல இருக்கின்றன. ஆனால் அவற்றின் பின்னால் புதைந்துள்ள பொருளைத்தான் மறந்துவிட்டோம்.

கி. பி. பதினோராம் நூற்றாண்டின் துவக்கத்தில் நம் நாட்டுக்குப் புதிய சோதனை ஒன்று ஆரம்பமாயிற்று. வடநாடு கொந்தளித்துப் போயிற்று. வருஷந்தோறும் ஓயாமல், கஜனி முகம்மது இந்தியாவின் மீது படையெடுத்து வந்து தேசத்தை நாசம் செய்த காலம் அது. அவன் பதினேழு தடவைகள் நம் நாட்டின் மீது படையெடுத்து வந்திருக்கிறான். ஆனால் அவன் நிலைத்து இவ்விடம் தங்கிவிடவில்லை. அவன் தாக்குதல் முழுதும் நம் நாட்டு வடமேற்குப் பகுதியையே பாதித்தது. அதைத் தாண்டி அடுத்த படியாக உள்ளது கன்யாகுப்ஜம் என்னும் கன்னோசி நாடாகும்.

இந்தியாவின் புகழ்

லோத்ரா

கர்பாசய ரோக நிவாரணி

கேஸரி குடீரம் லிட்., மதராஸ்

EASTERNS.394

வேம்பின் உன்னத சத்துக்களடங்கிய "கேரளா வேப் சோப்" உங்கள் சருமத்தைப் பாதுகாத்து மேனியைப் பிரகாசிக்கச் செய்கிறது. மேலும் வனப்புடன் மாசற்ற சருமத்தையும் தருகிறது. சருமத்தின் அதி ஆரோக்கியத்திற்கான "சோப்" இதுவே.

MANUFACTURERS :—

KERALA SOAP INSTITUTE

...CALICUT...

FAS-RS-4

கேரளா சோப் இன்ஸ்டிட்யூட்

கள்ளிக்கோட்டை

கஜனி முகம்மது தன்னுடைய பன்னிரண்டாவது படையெடுப்பில்தான் கன்னேசியைக் கைக்கொண்டான். அது கி. பி. 1018-19 ஆண்டின் மாரி காலத்தில் நடைபெற்றது. அப்போது கன்னேசியை ஆண்டு வந்த பிரதிஹார வமிசத்து மன்னனை ராஜ்யபாலன் படையெடுப்பை எதிர்த்து நிற்க முடியாமல் முகம்மதுக்குப் பணிந்து விட்டான். அவனுடைய இந்த இழிநடத்தை மற்ற ஹிந்து அரசர்கள் மனத்தைப் பெரிதும் வாட்டியது. பக்கத்து நாட்டு மன்னர்கள் ஒன்று கூடி, தங்களுக்குப் பெருத்த அவமானம் இழைத்த ராஜ்யபாலனை ஒழித்து விட்டார்கள். அவன் மகனை திரிலோசன பாலனைச் சிங்காதனத்தில் அமர்த்தினர்கள்.

இதைக் கேட்ட கஜனி முகம்மது வெகுண்டு எழுந்தான். மறுபடியும் திரண்டு கன்னேசி மீது படையெடுத்து வந்தான். அது நிகழ்ந்தது கி. பி. 1021-22-ல் ஆகும். இதன் முடிவும் கஜனி முகம்மதுக்குத் திருப்தி யளிப்பதாக இல்லை. அவன் பெரும் வெற்றி கொண்டு ஏராளமான பொன்னும் மணியும் திரட்டித் தன் நாடு திரும்பினன் என்று முகம்மதிய சரித்திர ஆசிரியர்கள் கூறுகிருர்கள். ஆயினும், அதைக் காட்டிலும் பெரிய படை திரட்டி மிக்க கோபத்துடன் அவன் 1023-24-ல் திரும்பி வந்து கூர்ஜரத்தில் உள்ள சோமநாதபுரத்தை அழித்திருக்கிருன். கன்னேசியை அவன் வெற்றி கொள்ள முடியாததே அவன் கோபத்துக்குக் காரணம்.

அவ்விதம் கன்னேசியில் வெற்றிகொள்ள முடியாமல் கஜனி முகம்மதைத் தடுத்து நாட்டை ஆட்கொண்டவன் அந்தக் காலத்தில் தஞ்சையினின்றும் அரசு செலுத்திய சோழ சக்கரவர்த்தியான முதலாம் ராஜேந்திர சோழனே யாவன். அவன் வடநாடு சென்று வெற்றிகொண்டு திரும்பியவன் என்பதை அவன் தரித்துக் கொண்ட 'கங்கை கொண்ட சோழன்' என்ற பெயரே எடுத்துக் காட்டும். அவன் கி. பி. 1012-ம் ஆண்டின் முற்பகுதியில், மார்சு மாதம் 27-ஆம் தேதிக்குப் பிறகு, ஜுலை மாதம் 7-ஆம் தேதிக்குள் ஏதோ ஒரு நாளில் சோழ சிங்காதனம் ஏறியவன்.*

அவனது கங்கா விஜயம் அம் மன்னனுடைய பதிேனாராம் ஆண்டுக் கல்வெட்டுக்களிலே தான் முதன் முதலாகக் கூறப்படுகின்றது. இதனல் அந் நிகழ்ச்சி 1022-23-க்குச் சற்று முன்னதாக நடந்திருத்தல் வேண்டும். அதாவது, கஜனி முகம்மது கன்னேசி நாட்டின் மீது படையெடுத்து வந்த சமயத்திலே யாகும்.

நம் நாட்டின் வட மேற்குப் பக்கத்திலிருந்து துருக்கர்கள் இமய மலையைத் தாண்டி உள் புகுந்து படையெடுத்து வந்து நாட்டைச் சூறையாடிச் சென்ற அதே சமயம் தமிழ் நாட்டுப் பேரரசன் ஒருவன் பெரும் படையுடன் வடநாடு சென்று வெற்றி கொண்டு திரும்பி வந்திருக்கிருன். தமிழ் மன்னரின் வடநாட்டுப் படையெடுப்பு, நம் நாட்டின் மீது போர் தொடுத்து வந்த துருக்கர்களுக்கு உதவுவதற்காகவோ அல்லது துருக்கர்கள் சூறையாடிய பிறகு, மிகுந்திருந்ததைக் கொள்ளையடிப்பதற்

* எபிகிராபியா இந்திகா, வால்யூம் 8, பக்கம் 260.

காகவோ நடந்ததாக இருக்குமா? அவ்விதம் ஒருகாலும் இல்லை. இருந்திருக்கவும் முடியாது. துருக்கர்கள் படையெடுப்பால் அவதிப்பட்ட நம் நாட்டு மக்களுக்கு உதவுவதற்காகவே அவன் அந்தப் படையெடுப்பை மேற்கொண்டிருத்தல் வேண்டும். சோழ சாஸனங்களும் இதையே தான் வலியுறுத்துகின்றன.

ராஜேந்திரன் தன் ஆட்சியின் ஏழாம் ஆண்டிலே, கி.பி. 1018-ல், தன் மகன் ராஜாதி ராஜனுக்கு முடிசூட்டி வைத்திருக்கிறான். அதற்குப் பிறகு, சுமார் இருபத்தைந்து ஆண்டுகள் இருவரும் சேர்ந்தே சம உரிமையுடன் நாட்டின் அரசியலை நடத்தி வந்தார்கள். கங்கா விஜயத்தை உத்தேசித்தே இந்த ஏற்பாடு நடை பெற்றிருத்தல் வேண்டும் போலும்.

ராஜாதி ராஜன் மெய்க் கீர்த்தியின் தொடக்கத்தில் அவன்,

தன் சிறிய தாதையுந் திருத்தமையனுங்
குறிகொடன் னிளங் கோக்களையு
நெறியுணர்
தன்திருப் புதல்வர் தம்மையுந்துன்
றெழில்
வானவன் வில்லவன் மீனவன்கங்க
னிலங்கையர்க்கிறைவன் பொலங்கழற்
கன்ன குச்சியர் காவலனெனப் பல்லவன்
பொன்னணி கார்மணி மகுடஞ்
சூட்டினன்

என்ற செய்தி காணப்படுகின்றது. இவ்விதம் பாண்டிய நாடு கேரளம் முதலிய இடங்களுக்குச் சோழ அரசிளங் குமாரர்கள் ராஜப் பிரதிநிதிகளாக அனுப்பப்பட்டு வந்திருக்கிறார்கள் என்பதும், அவர்கள் தங்கள் பெயருடன், தாங்கள் ஆளும் நாட்டின் பட்டப் பெயரையும் சேர்த்து, சோழ பாண்டியன், சோழ கேரளன் என்பன போன்ற பெயர்களால் குறிக்கப்பட்டு வந்தார்கள் என்பதும், தமிழ் நாட்டுத் தென் பகுதியில் கிடைக்கும் கல்வெட்டுக்களால் தெரிய வருகின்றன. அதே போலக் கன்னியாகுப்ஜத்துக்குச் சோழர்களின் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டவன் சோழ கன்னகுச்சியரசன் என்று குறிக்கப்பட்டிருக்கிறான்.

இந்தப் பிரதிநிதிகளைச் சோழ சக்கரவர்த்திகள் தாங்கள் அனுப்பும் இடங்களிலே நிரந்தரமாக விட்டுவைப்பதில்லை. அடிக்கடி அவர்களை மாற்றி வந்திருக்கிறார்கள் என்றே தெரிகிறது. வீர ராஜேந்திரனும் இதே போல்,

செந்தமிழ்ப்
பிடிகளிற் றிரட்ட பாடிகொண்ட
சோழனைத்தொல்புவி யாளுடைச்சோழ
கன்னகுச்சியரச னென்றும்

நியமித்து அனுப்பிய செய்தி அவன் மெய்க் கீர்த்தியிலிருந்து விளங்குகிறது. அவன் கன்னியாகுப்ஜத்துக்கு மட்டிலும் பிரதிநிதியனுப்பவில்லை. அயோத்திக்கும் அவ்வாறே பிரதிநிதியனுப்பியிருந்தான் என்பது,

தோள்வலி
மேவிகல் பராந்தக தேவனைச் சோழ
வயோத்தியரசனென்றும்

என்னும் பகுதியால் விளங்கும்.

சோழர்கள் கன்னகுச்சிக்கு இவ்விதம் பிரதிநிதிகளை அனுப்புவதற்கு, அந்நாடு சோழர்கள் ஆட்சியில் இருந்தால் அன்றோ முடியும்? நாடு அவர்கள் ஆட்சியிலே வந்திருந்தது என்றே தெரிகிறது. திரிலோசனபாலனும் அவனுக்குப் பின் வந்தவனாகக் கருதக்கூடிய யசபாலனும் திறமை வாய்ந்தவர்களாகத் தெரியவில்லை. கஜனி முகம்மதுக்குப் பணிந்த ராஜ்யபாலனைக் கொன்றவர்களில் சந்தேல

நாட்டு மன்னனான வித்யாதரன் முக்கியமானவனாகக் காணப்படுகிறான் * இதற்குப் பழிவாங்குவதற்காகக் கஜனி முகம்மது படையெடுத்து வந்த காலத்தில்தான் கங்கைகொண்ட சோழன் வட நாட்டுப் படையெடுப்பை நடத்தியிருக்கிறான். அதே சமயத்தில் சேதி நாட்டு மன்னனாக இருந்தவன் காங்கேய தேவன் விக்கிரமாதித்தன். அவனும் கன்னோசியை வெற்றிகொண்டதாகக் கூறிக்கொள்ளுகிறான். கஜனி முகம்மது இறந்த பிறகு அவன் கீழ்ப் பாஞ்சாலத்தில் சுபாதாராக இருந்த அஹமத் நியால்திஜீன் 1033-ஆம் ஆண்டில் காசிவரை படையெடுத்து வந்ததாகவும் அப்போது அவன் 'காங்' என்பவனுடன் போரிட்டதாகவும் கூறிக் கொள்ளுகிறான். இதனால் கங்கைகொண்ட சோழனுடைய கங்கா விஜயத்தின் போது, சேதி மன்னனான காங்கேய தேவனும் உதவியாக இருந்திருக்கிறான் என்றும், அந்த வெற்றியின் பயனாகக் கன்னோசி அவன் நாட்டுக்குப் பக்கத்தில் இருப்பதால் அவன் வசம் விட்டு வைக்கப்பட்டதென்றும் எண்ணலாம். ஆயினும், அது நீடித்திருக்கவில்லை. அஹமத் படையெடுப்பு அவன் பெருமைக்குப் பங்கம் விளைவித்தது. வலிமையும் குறைந்தது. ஆகவே சோழ மன்னர்கள் தலையிட்டுக் கன்னோசியை அவனிடமிருந்து மீட்டுத் தங்கள் நேர் ஆளுகையின் கீழ்க் கொணர்ந்து விட்டார்கள். இதையும் ராஜாதிராஜன் மெய்க்கீர்த்தியில் வரும்,

> இலங்கையற் கரசையும்
> புலங்கல் வல்லவனையும்
> கன்னகுச்சியர் காவலனையும்
> பொன்னணி முடித்தலை தடிந்து
> தன் கொடிப்படையை ஏவி

என்னும் பகுதியாலே அறிகிறோம். அவன் மகோதயத்தைக் கைக்கொண்ட செய்தியைத் தெரிவிக்கிறது மெய்க் கீர்த்தி. பிரதிஹாரர்கள் கன்னியாகுப்ஜத்தை ஆண்டுவந்த காலத்தில் அவர்கள் தங்கள் நாட்டை மஹோதயம் என்று பெருமிதத்துடன் கூறி வந்திருக்கிறார்கள். ராஜாதிராஜன் மெய்க் கீர்த்தியிலேயே,

> தன் கன்னகுச்சுயினும்
> ஆர்கலியீழஞ் சிறிதென் றெண்ணி
> உளங்கொளந் நாடுதன்
> னுறவொர்டும் புகுந்து
> விளங்கு முடிகவிழ்த்த வீரசலா
> மேகனை

ராஜாதி ராஜன் வென்று முறியடித்த செய்தியும் காணப்படுகின்றது.†

‡இதேசமயத்தில் இலங்கைச் சரித்திரமான மகாவமிசத்திலிருந்து மற்றொரு செய்தியும் தெரியவருகிறது. அயோத்தியை ஆண்ட அரசனுடையகுமாரனான ஜகதீபாலனைச் சோழர்கள் போரில் வென்று அவன் மகிஷி

*எபிகிராபியா இந்திகா வால்யூம் 2, பக்கம் 233, 237. ஷை வால்யூம் 1 பக்கம் 219. 222.

†வீர ராஜேந்திரன் மெய்க் கீர்த்தி வீரசலாமேகன் என்பவனைக் கலிங்க மன்னனாகக் குறிக்கின்றது. அதனால் கலிங்கத்தின் அரசனான அவன் கன்ன குச்சியின் சோழர்களின் பிரதிநிதியாக ஆண்டு வந்தான் என்று, நினைக்கலாம். அவ்விதம் அல்லாமல், கன்னக்குச்சியிலிருந்து ஓடிய வீரசலாமேகனைப் போரில் வென்று இறைப் பிடித்த சோழர்கள் சிறிது காலம் பொறுத்து அவனை மறுபடியும் கலிங்கத்தின் அதிபதியாக அனுப்பி வைத்தார்கள் என்று எண்ணவும் இட முண்டு.

‡சூளவமிசம் 55-ஆம் அத்தியாயம்

யையும் பெண்ணையும் மற்றும் பலநிதிகளையும் தங்கள் நாட்டுக்கு அனுப்பி விட்டார்களாம். அவன் பெண்ணான லீலாவதியை இலங்கையரசன் ஒருவன் மணந்து கொண்டான்.

கன்னகுச்சிப் பிரதேசத்தில் சோழர்களுக்கு இருந்த ஆதிக்கியத்தை இந்தச் செய்திகள் நன்கு எடுத்துக் காட்டுகின்றன.

கன்னோசியைக் கைக்கொண்ட சோழர்கள் அதன் நிர்வாகத்தை நடத்தத் தங்கள் பிரதிநிதிகளை அனுப்பினாலும், நிரந்தரமாக அங்கே இருந்து நாட்டைப் பரிபாலிக்க வேறு அதிகாரிகளையும் நியமித்திருக்கிறார்கள் என்றும் தெரிகிறது. பிரதிஹாரர்களுக்குப் பிறகு ராஷ்டிரகூட வமிசத்தைச் சேர்ந்தவர்கள் சிலர் கன்னோசியை ஆண்டிருக்கிறார்கள். தக்ஷிணத்தைச் சேர்ந்தவர்கள் திடீரென்று எப்படி வடக்கே அந் நாட்டில் ஆட்சி புரிய ஆரம்பித்தார்கள்? அவர்களைச் சோழமன்னர்களே அவ்விடம் நிறுவினார்கள்போலும்.

சேதி மன்னனான காங்கேய விக்கிரமாதித்தனுக்குப் பிறகு பட்டம் எய்திய அவன் மகன் கர்ணன் தன் தந்தையைக் காட்டிலும் சிறப்பு வாய்ந்தவன். தன் தந்தையின் அரசில் ஏற்பட்ட இழுக்கை அவன் நீக்க முயன்றிருக்கிறான். அவன் காசியில் கர்ணமேரு என்ற உன்னதமான கோயில் ஒன்றை நிர்மாணித்தான் என்று அவனுடைய ஜபல்பூர்ச் செப்பேடுகள் கூறுகின்றன.* அதேபோல, ஜயஸிம்ஹனுடைய கல்வெட்டினின்றும் அவன் வடமேற்கில் கங்கரா பிரதேசத்தில் உள்ள கீரா என்னும் இடம் வரையில் ஆதிக்கியம் செலுத்தி வந்தான் என்பது பெறப்படுகின்றது.† இதனால் அவன் கன்யாகுப்ஜத்தை மறுபடியும் கொஞ்ச காலம் கைக்கொண்டு தன் ஆட்சியில் வைத்திருந்தான் என்றே தெரிகிறது. ஆயினும் அதைச் சோழர்கள் அப்படியே விட்டுவிடவில்லை. வீர ராஜேந்திரன் கன்ன குச்சியை மீட்டுச் சோழ சாம்ராஜ்யத்தில் மறுபடியும் கொணர்ந்த செய்தியை அவனுடைய திண்டிவனம் கல்வெட்டுக் கூறுகின்றது.‡

இதற்குப் பிறகு, கன்னோசியின் நிர்வாகத்தில் மறுபடியும் மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. ராஷ்டிரகூடர்களுக்குப் பிறகு அந் நாட்டின் அதிபதிகளாகக் காஹடவாலர்கள் வந்து சேர்ந்தார்கள். அவர்களைச் சோழ சக்கரவர்த்தியான குலோத்துங்கனே அப்பதவியில் அமர்த்தியிருக்க வேண்டும். அவன் காலத்திலே வெளி நாடுகளுக்குப் பிரதிநிதிகளாக அனுப்புவதற்குத் தகுதி வாய்ந்த சோழ ராஜகுமாரர்கள் இல்லாமையே இதற்குக் காரணம் போலும். காஹடவாலர்களும் சோழர்களுக்கு அடங்கியிருந்தார்கள் என்பது கங்கை கொண்ட சோழபுரத்திலே கிடைத்துள்ள அவர்கள் கல்வெட்டால் விளங்கும்.$

இக் கல்வெட்டு பூர்த்தியானதாக இல்லை. எனினும் அது

*எபிகிராபியா இந்திகா, வால்யூம் 2 பக்கம், 4,6.

†இந்தியன் ஆண்டிகுவரி, வால்யூம் 18, பக்கம் 217.

‡தென்னிந்தியசாஸனங்கள். வால்யூம் 3—சாஸனம் 83. நெ.பக்கம் 201.

$இந்திய ஆர்க்கியலாஜிகல் ஸர்வேயின் வருஷாந்தர அறிக்கை, 1907-08. பக்கம் 228.

காஹதவால அரசனை கோவிந்த சந்திரனுடைய கமௌலிச் செப் பேட்டின் பிரசஸ்தியின் பிரதியாகவே இருக்கிறது.* எனினும் சந்திரன் பெயர் வருமிடத்தில் அது திடீரென்று நின்று விடுவதால், யார் காலத்தைச் சேர்ந்த தென்று நிச்சயமாகச் சொல்ல முடியாது. அது முதற் குலோத்துங்க சோழனுடைய 41-ஆம் ஆண்டுக் கல்வெட்டுக்கு அடுத்த படியாகப் பொறிக்கப்பட்டிருப்பதால், பொதுவாக அது கோவிந்த சந்திரனுடையதே யாகும் என்று கருதப்பட்டு வருகிறது.

இவைகளை நாம் ஊன்றிக் கவனித்து ஆராய்ந்தால், சுமார் கி. பி. 1020-க்கு அணிகாத்த கஜனி முகம்மது கன்னேசியின் மீது படையெடுத்து வந்த காலம் முதல், ஒரு நூற்றாண்டுகாலம், அந்நாடு சோழர்களின் ஆதிக்கத்தில் இருந்து வந்தது என்பது நன்கு விளங்கும். அந்த ஒரு நாடு மட்டுமல்ல. நம் நாட்டின் வேறு பகுதிகளும் அவர்களுடைய ஆதிக்கத்தின் கீழ் இருந்து வந்தன வென்பதையும் அறியலாம். ஏன், இப்போது பிரிந்துபோன பாகிஸ்தான் பிரதேசம் நீங்கலாக எஞ்சியுள்ள பாரத நாடு முழுவதும் அந்தக்காலத்திலே சோழ ஸாம்ராஜ்யத்தின் ஆதிக்கியத்திற்குட்பட்டு இருந்த தென்பதையும் அதனாலேயே முஸ்லீம்கள் நம் நாட்டில் முன்னேறி நாடு கொள்ள முடியாதபடித் தடை ஏற்பட்டு இருந்தது என்பதையும் நிச்சயமாகக் கூறலாம்.

*எபிகிராபியா இந்திகா, வால்யூம் 4, பக்கம் 99—101.

தற்கொலையின் காரணம்

ஒரு பிலடெல்பியா நாட்டவன் தற்கொலை செய்துகொண்டான். தற்கொலைக்கு முன்பு, கீழ்க்கண்ட குறிப்பை எழுதிவைத்தான்:

'நான் ஒரு விதவையைக் கல்யாணம் செய்து கொண்டேன். ஏற்கெனவே அவளுக்கு வயசான ஒரு பெண் இருந்தாள். அந்தப் பெண்ணை என் தகப்பனர் காதலித்து, கல்யாணமும் செய்து கொண்டார். அதாவது, என் தகப்பனர் எனக்கே மாப்பிள்ளையானர்; என் தகப்பனரைக் கல்யாணம் செய்து கொண்டதன்மூலம் என் ஒன்றுவிட்ட மகள் எனக்குச் சிற்றன்னையும் ஆனாள்.

என் மனைவி ஒரு பையனைப் பெற்றாள்; அவன் என் தகப்பனருக்கு மைத்துனன் ஆனான்; என் சிற்றன்னையின் சகோதரன் ஆனதால் எனக்கு மாமன் ஆனான்.

என் தகப்பனரின் மனைவி ஒரு மகனைப் பெற்றாள்; அவன் எனக்குச் சகோதரன்; அவன் எனக்குப் பேரனும் ஆனான்—என் மகளின் பையன் அல்லவா?

அதேபோல், என் மனைவி என் பாட்டியானாள்—என் அன்னைக்கு அன்னையல்லவா? நான் என் மனைவிக்குக் கணவனாகவும், பேரப்பிள்ளையாகவும் ஒரே சமயத்தில் இருக்க வேண்டியதாயிற்று. ஒருவனுடைய பாட்டிக்குக் கணவனா யிருப்பவன், அவனுக்கு தாத்தா ஆகிறான் அல்லவா? அப்படிப்பார்த்தால், நான் எனக்கே தாத்தா ஆகிறேன்!

—மார்க் ட்வெய்ன்

குடிகாரன்

வாலரி ப்ருஸோப்

அவன் களவு செய்வதற்காக முயற்சி செய்தான். இந்தக் குற்றத்தைச் செய்ததற்காக அவனுக்கு ஒரு வருஷ சிறைத் தண்டனை கிடைத்தது. அவன் கோர்ட்டில் நடந்துகொண்ட முறையும், எப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் களவாட முயன்றிருக்கிறன் என்ற விஷயமும் என் கவனத்தைக் கவர்ந்தன. அதனல் அவனைச் சிறையில் போய்க் கண்டு பேச வேண்டும் என்று எனக்குத் தோன்றியது. அதற்கு எனக்கு அனுமதியும்கிடைத்தது. போய்ப் பார்த்தேன். எனக்காக அவன் செய்ய வேண்டிய காரியம ஒன்றுமில்லை தான். அத்துடன் அவன் பேசவும் இல்லை. ஆனலும் கடைசியில் தன்னுடைய கதையை விவரமாகச் சொன்னன். அவன் சொன்னதாவது :

ஒரு குடிகாரனுடைய சித்திரத்தை இந்த ருஷ்யக் கதையில் காண்கிறோம். குடிகாரனுடைய குணபாவத்தை இப்படிப் பரிபூரணமாக எவரும் சித்திரித்ததில்லை. கதையின் கடைசிப் பாராவைப் படித்ததும் நாம் பிரமித்து விடுகிறோம்.

"நீங்கள் சொல்லுவது சரிதான். நான் ஒரு காலத்தில் மிகவும் சந்தோஷமாக இருந்ததும் உண்டு. காலமெல்லாம் கஷ்டத்துடன் தேசாந்திரியாக அலைந்துகொண்டும், மடங்களில் தூங்கி எழுந்துகொண்டும் இருந்தவனல்ல நான். நான் நன்ருகப் படித்திருக்கிறேன்; நான் ஓர் எஞ்சினீர். வாலிபப் பிராயத்தில் என் கையில் ஏதோ கொஞ்சம் பணம் இருந்தது. அதை வைத்துக்கொண்டு எதைப் பற்றியும் கவலைப்படாமல் ஒரே குஷியாக வாழ்க்கையை நடத்தினேன். தினந் தினமும் இரவு நேரங்களில் ஏதாவது ஒரு விருந்துக்கோ அல்லது ஒரு நாட்டியத்துக்கோ போவேன். வீடு திரும்பும்போது ஒரே யடியாகக் குடித்துவிட்டுப் போதை மயக்கத்துடன் வருவேன். அந்தக் காலமெல்லாம் இன்னும் என் ஞாபகத்தை விட்டு அகலவில்லை. அந்தக் காலத்திய சமாச்சாரங்களில் ஒவ்வொரு சிறு விஷயம்கூட இன்னும் நினைவிலிருக்கிறது. ஆனலும், நடுவிலேயே என் நினைவுப் படலத்தில் ஒரு காலியிடம் விழுந்து கிடக்கிறது. அந்தக் காலியிடத்தை நிரப்புவது சாத்தியமென்ருல் என்னுடைய பாக்கியுள்ள பிரயோஜனமற்ற வாழ்நாட்களை அதற்காகச் செலவிடத் தயாராக இருக்கிறேன். நீனவைப் பற்றிய நினைவுதான் அப்படிக் காலி யிடமாகக் கிடக்கிறது.

"ஐயா! அவளை நீன என்று அழைப்பார்கள். ஆம், நீனதான். இது திட்டமாக எனக்கு ஞாபகம் இருக்கிறது. அவளுடைய புருஷன் ரயில்வேயில் ஏதோ ஒரு சாதாரண உத்தியோகத்தில்

செழிப்பான கூந்தல்

ஸ்திரீகளின் எல்லா ஆபரணங்களையும் விடச் சிறந்ததென்று, எக்காலத்திலும், எந்நாட்டிலும், கலைஞர்களால் கற்பனை செய்யப்பட்டும், கவிஞர்களால் பாடப் பட்டும் வந்திருக்கிறது. மேகத்திலிருந்து எட்டிப் பார்க்கும் சந்திரனுக்குக் கரிய கூந்தல் அணைந்த முகத்தைக் கவிஞர்கள் ஒப்பிட்டிருக்கிறார்கள்.

★

ஜாப்கோ ஹேர் குரோயர்

செழிப்பான கூந்தலை விருத்தி செய்து
முகமண்டலத்திற்கு அபார
சோபையை அளிக்கிறது

ஜயபாரதம் கோ.,

மதராஸ்—பெங்களூர்—எர்ணாகுளம்

ஜெர்மெக்ஸ்

ஒருபோதும் தவறாத நேர்வழி
புண் புறையோடாமல் தடுத்து
குணப்படுத்தும் ஔஷதம்

லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம் & பர்மசியுடிகல்ஸ் லிமிடெட்

DJK25 தபால் பெட்டி நெ. 67—மதராஸ்

சூதகத்தை நிறுத்தியது

குமரி ! (Tablets) சூதகக் கோளாறுகளை எந்த நிலையிலும் நிறுத்த வல்லது. தீமை விளைவிக்காமல் கஷ்ட நிவர்த்தி யளிக்கிறது. ஆயிரக்கணக்கானவர்கள் திருப்தி யடைந்திருக்கின்றனர். விலை ரூ. 3

நாள்பட்ட கோளாறுகளுக்கு விலை ரூ. 5

மிக்க கடுமையான கோளாறுகளுக்கு விலை ரூ. 8

கர்ப்பத் தடை மாத்திரைகள் (Tablets)
6 மாத உபயோகத்திற்கு விலை ரூ. 4

(வி. பி.க்கு 12 அணா அதிகப்படி)

Mrs. P. DEVEE, F.D.S. (M.S)
Tollygunge, : : CALCUTTA

ஸ்டாக்கிஸ்டுகள் : ஹாரி அண்ட் சன், 93, சைனா பஜார் ரோட், சென்னை
ராகவன் அண்ட் கம்பெனி
ஸ்ரீ நரசிம்ம ராஜா ரோட், பெங்களூர் சிடி.

இருந்தான். ரொம்பவும் ஏழைகள். ஆனாலும், தன்னுடைய வறுமை வாழ்வின் பரிதாபகரமான சூழ்நிலையையும் கூட எப்படிச் சீர்பெற்று செம்மையுறும்படியாக அவள் மாற்றிவிடுவாள், தெரியுமா? அப்படிப் புத்திசாலித்தனமுடைய பெண் அவள். அவளேதான் சமையல் செய்வாள். ஆனாலும் தன் கைகளைச் சுத்தமாக வைத்துக் கொள்ளுவாள். தன்னுடைய சர்வ சாதாரணமான துணிமணிகளையும் அபூர்வ வஸ்துக்களாக மாற்றிவிடுவாள். ஆம், அவளுடைய தொடர்பு ஏற்பட்ட மாத்திரத்தில் இந்தச் சாதாரண உலகத்தில் உள்ள ஓர் இடம்கூட ஸ்வர்க்கமாகிவிடும். நானும் கூடத்தான் அவளைச் சந்தித்த மாத்திரத்தில் ஒரு புதிய ஆளாக மாறிவிட்டேன். கோட்டி விருந்து மழைத் துளிகளை உதறுவதைப் போல், என் வாழ்வின் சிறுமைகளை யெல்லாம் அந்த நிமிஷத்திலேயே உதறிவிட்டேன்.

"என்னைக் காதலித்ததற்காகக் கடவுள் அவளை மன்னிக்க வேண்டும். அவளைச் சூழ்ந்திருந்த சகலமும் ஒரே ஆபாசக் களஞ்சியமாக இருந்தது. ஆகவே, என்னைக் காதலிக்காமல் இருப்பதென்பது அவளால் முடியாத காரியம். ஏனென்றால் அப்போது நான் யௌவனமும் அழகும் நிரம்பி யிருந்ததுடன் எனக்கு எத்தனையோ கவிகள் மனப்பாடமாகவும் இருந்தன. ஆனால், முதல் முதலாக நான் அவளை எப்பொழுது சந்தித்தேன் என்பதை இப்போது என்னால் நினைவுக்குக் கொண்டுவர முடியவில்லை. மறதி என்ற இருள் மறைவி லிருந்து எத்தனையோ தினுசான சித்திரங்கள் கிளம்பி வந்து இப்போது காட்சி யளிக்கின்றன. இதோ நாங்கள் இருவரும் ஒரு நாடகக் கொட்டகையில் உட்கார்ந் திருக்கிறோம். அவள் மிகவும் சந்தோஷமாகவும் குதூகலமாகவும் இருக்கிறாள். (இப்படி அவள் இருப்பது மிகவும் அபூர்வம்) நாடகத்திலே தன்னை மறந்து லயித்திருக்கிறாள். இதோ என்னைப் பார்த்துப் புன்னகை செய்கிறாள். அந்தப் புன்னகை இன்னும் எவ்வளவு தெளிவாக ஞாபகத்தில் இருக்கிறது தெரியுமா? அப்போது எந்த இடத்திற்கும் நாங்கள் ஒன்றாகவே போய் ஒன்றாகவே அமர்ந்திருப்போம். ஒருநாள் அவள் எனக்கு மேலாகத் தலை குனிந்துகொண்டு, "நீ அதிக காலம் என்னுடைய காதலனாக இருக்கப்போவதில்லை என்பது எனக்குத் தெரியும். ஆனாலும், பரவாயில்லை. நான் என் வாழ்க்கையை எப்படியும் மற்ற வழிகளில் அனுபவிக்கத்தான் செய்வேன்'' என்றாள். இந்த வார்த்தைகள் எனக்குக் கொஞ்சங்கூட மறக்கவில்லை. ஆனால், அதற்கப்புறம் என்ன நடந்தது என்பதும், முன்னால் சொன்ன காரியங்களெல்லாம் நான் நீனாவுடன் இருந்தபோது உண்மையில் நடந்த காரியங்கள் தானா என்பதும் சத்தியமாக எனக்குத் தெரியவே தெரியாது.

"உண்மையில், அந்தக் கூட்டுறவை முதலில் முறித்துக் கொண்டது நான்தான். அது ஒரு சர்வ சாதாரணமான, இயல்பான காரியமாகவே எனக்குத் தோன்றியது. என்னுடைய சிநேகிதர்களும்கூடத்தான் இப்படி நடந்துகொண் டிருக்கிறார்களே! அவர்களும் கல்யாணமான பெண்களுடன் கூட்டுறவு

வைத்துக்கொண்டார்கள். கொஞ்ச காலம் கழிந்ததும் அந்தக் கூட்டுறவை முறித்துக் கொண்டும் இருக்கிறார்கள். ஆகவே, மற்றவர்களைப் போலத் தான் நானும் நடந்துகொண் டேன். அதனால், நான் தப்பான காரியம் எதுவும் செய்துவிட்ட தாக எனக்கு எப்போதுமே தோன்றிய தில்லை. பணத்தைக் களவாடுவது, வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்காமல் இருப்பது, கோள் சொல்லுவது-இவைதான் ஒழுங்கீனமான காரியங்கள். ஆனால், ஒருவன் தான் காதலித்துவந்த பெண்ணைக் கைவிட்டு ஒதுக்கி விடுவது நித்திய வளமைதானே! தவிரவும் இது எதிர்பார்க்கக்கூடிய ஒரு சாதாரண சம்பவம். அப்போது எனக்கு ஒரு பிரமாதமான எதிர் காலம் காத்துக்கொண் டிருந்தது அதனால் இந்தக் காதல் சமாச் சாரத்துக்காக என் முன்னேற் றத்தைத் தடுத்து நிறுத்த எனக்கு இஷ்டமில்லை. ஆனால், அந்தக் காதல் நினைவு என்னைப் புண் படுத்தாமலும் இல்லை. உண்மை யில் அந்தப் புண்,மிகுந்த வேதனை அளிக்கத்தான் செய்தது. ஆனால், என் கஷ்டத்தை நானே அடக்கிக் கொண்டேன். இப்படிக் கஷ்டத்தை அடக்கிக்கொள்ளும் ஆற்றல் எனக்கிருந்ததை நினைத்து நான் பெருமைப்படக் கூடச் செய்தேன்.

"அப்புறம் நீனா தன் கணவ னுடன் தெற்கத்திச் சீமைக்குப் போய்விட்டதாகத் தெரிய வந் தது. அதற்குப் பிறகு கொஞ்ச காலத்தில் அவள் செத்துப் போய் விட்டாள் என்பதையும் அறிந் தேன். அந்தச் சந்தர்ப்பத்தில் நீனாவைப் பற்றிய சிந்தனைகள் என்னை மிகவும் வாட்டி வதைத் தன. அதனால் அவளைப்பற்றிய செய்திகளைக் காதில் வாங்காமல் அவளை மறக்கவும், அவளைப்பற்றி நினைக்காமலேயே இருந்துவிட வும் முயன்றேன். அவளுடைய படத்தை நான் வைத்துக் கொள்ளவில்லை. அவளுடைய கடிதங்களையும் திருப்பி அனுப்பி விட்டேன். இருவருக் கிடையி லும் அப்புறம் பரஸ்பரத் தொடர்பு இல்லாது போய்விட் டது. ஆகவே, கொஞ்சம் கொஞ்சமாக நீனாவின் உருவம் என் உள்ளத்தி லிருந்து மறைந்து விட்டது. தெரிந்ததா? படிப்படி யாக நீனாவை நான் மறந்து கொண்டே வந்தேன். உண்மை யில் அவள் முகம், அவள் பெயர், அவளுடைய காதல், அவளைப் பற்றிய சகலத்தையும் நான் மறந்துவிட்டேன். கடைசியில், நீனா என்ற ஒரு பெண் என் வாழ் வில் தொடர்பு கொண்டிருந்தாள் என்ற நினைப்புக்கூட இல்லாமல் போய்விட்டது.........சே, இந்த மாதிரி மறதி ஏற்படுவது வெட் கப்படக்கூடிய விஷயமல்லவா?

"சில வருஷங்கள் சென்றன. அப்புறம் நான் எப்படி நிலைமை யைச் சமாளித்து நல்ல நிலை மைக்கு வந்தேன் என்பதை எல் லாம் சொல்லி உங்களுக்குத் தொந்தரவு கொடுக்க எனக்கு இஷ்டமில்லை. நீனா என்னை விட் டுப் போய்விட்டாள். அந்த நிலை யில் பணம் திரட்ட வேண்டும் என்ற ஒரே எண்ணம்தான் எனக்கு. ஒரு சந்தர்ப்பத்தில் அநேகமாக நான் ஆசைப்பட்ட சொத்துச் சுகங்கள் எல்லாமே எனக்குக் கிட்டின. அப்போது ஆயிரக் கணக்கில் பணத்தைச் செலவு செய்வேன். வெளி நாடு களுக்கெல்லாம் போய்வருவேன். அதற்கு அப்புறம் எனக்குக் கல்

யாணம் நடந்தது; குழந்தைகளும் பிறந்தன. அவ்வளவுதான். அப்புறம் நான் மஞ்சளைத் தொட்டாலும் கரியாகும் நிலைமை ஏற்பட்டது. நான் கண்டுபிடித்துச் செய்த யந்திரங்கள் எல்லாம் பிரயோஜனமற்ற உதவாக்கரைகளாகப் போய்விட்டன. என் மனைவி இறந்தாள். குழந்தைகளை வைத்துக்கொண்டு காலக்ஷேபம் பண்ணுவது எனக்கு மிகவும் சிரமமாக இருந்தது. ஆகவே அவர்களை என் உறவினர்களிடம் கொண்டுபோய்ச் சேர்த்துவிட்டேன். இப்போது என்னுடைய பையன்கள் உயிரோடிருக்கிறார்களா என்பது கூட எனக்குத் தெரியாது. நான் மகா பாபி...... அப்புறம் என்ன, உங்களுக்குத் தெரியாததா? நான் குடியிலும் கூத்திலும், ஆழ்ந்துவிட்டேன்; சீட்டு விளையாட ஆரம்பித்தேன் ......பிறகு ஒரு கம்பெனியை ஆரம்பித்தேன். வேறொரு கம்பெனிக்கும் ஏஜென்ஸி எடுத்தேன். இந்தத் தொழிலும் கடைசிவரை கொண்டுசெல்லவில்லை. என் கையில் மிச்ச சொச்சமாக இருந்த பணமும் கரியானது; உடம்பும் சீவனிழந்துவிட்டது. கடைசியில், சூதாட்டத்தின் மூலம் என் நஷ்டங்களை நான் ஈடு செய்யப் பார்த்தேன். அதன் பலனாக ஜெயிலுக்குப்போக இருந்தேன். ஆனால் எப்படியோ தப்பித்துக்கொண்டேன். இப்படிப் படுகேவலமான நிலைமைக்கு நான் உள்ளானதற்கும் காரணம் இல்லாமல் இல்லை. கூடச் சேர்ந்த சிநேகிதர்களெல்லாம் எனக்கு எதிரிகளாக மாறிவிட்டார்கள். அதிலிருந்து எனக்கு இறங்கு காலந்தான்.

அது முதல் நாளுக்கு நாளாக நீங்கள் இப்போது பார்க்கும் இந்தக் கேவலமான நிலைக்கு வந்துகொண் டிருந்தேன். நல்லவர்களுடைய சகவாசம் இல்லாமல் போய்விடவே, நான் படுகுழியில் போய் விழுந்தேன். கட்டுவதற்கு ஒரு நல்ல துணியில்லாமலும், ஒரே குடிபோதையிலும் இருந்த நான் எப்படி ஒரு நல்ல நிலையை அடைவது? கடைசிக் காலத்தில் பல மாதங்கள், குடிமயக்கம் இல்லாத நேரத்தில் வேலை செய்து வந்தேன். அப்போது எங்காவது சத்திரம் சாவடி என்று மோசமான ஆசாமிகள் இருக்கும் இடத்தில் போய்ப் படுத்துறங்குவேன். மனித ஜென்மத்தைக் கண்டாலே எனக்கு ஒரே வெறுப்பு. என்றாவது ஒரு நாள் என் கஷ்டதசை மாறுவதாகவும் எவனுடைய பிதுரார்ஜிதமோ எனக்குக் கிடைக்கப் போவதாகவும் கனவு கண்டுகொண் டிருப்பேன். இந்த நிலையில் என் சகபாடிகளைக் கண்டால் எனக்கு மிகவும் இகழ்ச்சியாக இருக்கும். ஏனென்றால், என்னைப்போலப் பணக்காரனாகும் பாக்கியம் அற்ற பஞ்சைகள்தானே அவர்கள்?

"ஒரு நாள். அன்று குளிர் பொறுக்க முடியவில்லை. வயிற்றிலும் அகியாயப் பசி. அப்போது ஒருவிதக் காரணமும் இல்லாமல் நானாக ஒரு வீட்டுக்குள் நுழைந்தேன். அந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு காரியம் நடந்தது. அது மட்டும் நடந்திராவிட்டால் நான் அப்படிக் கண்ணை மூடிக்கொண்டு ஒரு வீட்டுக்குள் போனதன் பலன் எப்படி எல்லாம் ஆயிருக்கும்! போனதும் என்னை அந்த வீட்டுச் சமையல்காரன் பார்த்துக்கொண்டான். "ஏய், யாரப்பா அது? உனக்குப் பூட்டு ரிப்பேர் செய்யத் தெரியுமா?",

என்று அவன் கேட்டான். "நான் பூட்டு ரிப்பேர் செய்கிற வன்தான்" என்று பதில் சொன்னேன். அங்கே ஒரு மேஜையிலிருந்த பூட்டைப் பழுதுபார்க்க வேண்டியிருந்தது. மேஜை கிடந்த அறைக்கு உள்ளே போனேன். ஆகா, அது எப்பேர்ப்பட்ட இடம்! சுற்றிலும் எதைப் பார்த்தாலும் பள பளவென்று இருந்தது. அங்கே மாட்டியிருந்த படங்களுக்குக் கணக்கு வழக்கு கிடையாது. உட்கார்ந்து பூட்டை ரிப்பேர் செய்து கொடுத்தேன். அதற்காக எனக்கு ஒரு ரூபிள் கொடுத்தார்கள். பணத்தைவாங்கிக்கொண்டு வரும்போது, திடீரென்று வழியில் பளிங்குக் கல்லால் செய்யப்பட்ட ஓர் உருவம் என் கண்ணில் பட்டது. உருவத்தை வெண்ணிறமான சிறு பீடத்தின் மேல் வைத்திருந்தார்கள். அதைப் பார்த்ததும் எனக்கு மயக்கம் போட்டதுபோல இருந்தது. அந்தச் சிலையைக் கூர்ந்து பார்த்தேன். நம்புவது கஷ்டமாகவே இருந்தது. அது நீனாவின் உருவச் சிலை!

"அவளை மறந்துவிட்டேன் என்பது அப்போதுதான் எனக்கு முதல் முதலாக நினைவுக்கு வந்தது. அந்தச் சிலையைப் பார்த்ததும் அவளுடைய உருவம் என் மனக் கண்ணில் சரேலென்று பாய்ந்தது. அவ்வளவுதான், என் உள்ளத்தில் குவையாகப் புதைந்துகிடந்த உணர்ச்சிகள், கனவுகள், சிந்தனைகள் எல்லாம் பளிச்சென்று உயிர் பெற்று எழுந்துவிட்டன. எனக்கு ஒரே நடுக்கம்! படபடப்பு! அந்தச் சிலையைக் காண்பித்துக்கொண்டு பக்கத்தில் நின்ற பெண்ணிடம், "இது யாருடைய உருவச் சிலை என்று சொல்லமாட்டீர்களா?" என்று கேட்டேன். "இது ரொம்ப ரொம்ப அபூர்வமான ஒரு சிலையாக்கும்! ஐந்நூறு வருஷங்களுக்கு முன்னால், பதினேந்தாம் நூற்றாண்டில் செய்த சிலை இது" என்று சொல்லிவிட்டு அந்தச் சிலையைச் செய்த சிற்பியின் பெயரைச் சொன்னாள். அதை நான் அவ்வளவு கவனமாகக் காதில் வாங்கிக்கொள்ளவில்லை. அவளுடைய கணவன் அதை இத்தாலியிலிருந்து கொண்டு வந்ததாகவும், அப்படிக் கொண்டு வந்ததின் காரணமாக இத்தாலிய அரசாங்கத்துக்கும் ருஷ்ய அரசாங்கத்துக்கும் இடையே பெருத்த விவகாரமாகக் கிடக்கிறது என்றும் சொன்னாள் அந்தப் பெண். பிறகு அவள், "இந்தச் சிலை உனக்குப் பிடித்துப்போய்விட்டதா? ஆகா, நல்ல ஞானஸ்தன்தான் நீ! சிலைக்குக் காதுகள் எங்கேயிருக்கிறது பார்த்தாயா? மூக்கைப்பார் ஒரே கோணல் மாணலாக இருக்கிறது...!" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டாள்.

"எனக்கு அங்கே நிற்க மூச்சுத்திணறியது. உடனே அவ்விடத்தைவிட்டு வந்துவிட்டேன். அது ஏதோ நீனாவின் சாயலில் இருந்தது என்று சொல்லுவது தப்பு. நீனாவைப் பார்த்தே செய்யப்பட்ட சிலைதான் அது. அது கூடத் தப்புத்தான்—நீனாவே சிலை வடிவில் புனர்ஜன்மம் எடுத்துவிட்டாள். நீனாவுக்கு இருந்தது போலவே, எட்டிக்குப் போட்டியான இடத்தில் சின்னஞ் சிறு காதுகளையும், கோணலான மூக்கையும், கண்களையும், சாய்வான அகன்ற நெற்றியையும்

Cadbury's
BOURN-VITA
THE IDEAL FOOD DRINK
MADE BY CADBURYS SPECIALISTS IN FOOD DRINKS FOR 100 YEARS
மிகவும் ருசிகரமானது இது நல்லது !
முக்கியமாக குழந்தைகளுக்கு
போர்ன்-வீடாவிலுள்ள கால்ஷியமும் விடமின்களும, வளரும் குழந்தைகளுக்கு வலுவான எலும்புகளும், கெட்டியான சதையும் வளர உதவுகின்றன. பெரியவர்களுக்கு நிம்மதியான ஆழ்ந்த உறக்கமளித்து ஜீவசக்தி ததும்பச் செய்கின்றன.
காட்பரீஸ்
போர்ன்-வீடா
கால்ஷியம், விடமின்கள் நிறைந்தது.
KB2TM
சப்ளைகள் கிடைக்காவிட்டால் எழுதவும்:
காட்பரி-ப்ரை(எக்ஸ்போர்ட்) லிட், (Dept (14) தபால் பெட்டி 1417-பம்பாய்.

சக்தி

மாதப் பத்திரிகை

○

தனிப் பிரதி 'தபால்'	0	8
ஆறு மாதம்	3	8
ஒரு வருஷம்	6	0
2 வருஷம்	11	0

ரெஜிஸ்டர் மூலம் பெற விரும்புவோர் பிரதி ஒன்றுக்கு 0-3-0 விகிதம் சேர்த்து அனுப்பவேண்டும்

பர்மா

தனிப் பிரதி	0	9
ஆறு மாதம்	4	0
ஒரு வருஷம்	7	0
2 வருஷம்	13	0

மலேயா, முதலிய வெளி நாடுகளுக்கு

தனிப் பிரதி	0	10
ஆறு மாதம்	4	0
ஒரு வருஷம்	8	0
2 வருஷம்	15	0

○

சக்தி காரியாலயம்
சென்னை 14

என்ற விலாசத்திற்குச் சந்தாத் தொகை அனுப்பவேண்டும்

மருந்து சாப்பிட ஆரம்பித்ததுமே கபத்தைக் கலைத்து, மூச்சுத் திணறலை மட்டுப்படுத்துவதுடன், மலச் சிக்கலை மாற்றி, ஜீரண சக்தியைக் கொடுத்து, உடலுறுதிப் பெற வேலை செய்கிறது. புரோகித் ஸ்வாஸஹரிதான் இந்த நோய்க்கு கைகண்ட மருந்து. நுரை ஈரலை வலுவாக்கி, ஆஸ்த்மாவை அறவே தீர்க்கிறது. ஈரல் கோளாறு, மலச் சிக்கல், பித்தாசயக் கோளாறு, மூச்சுத் திணறல், இருமல், சுவாஸாசயக் கோளாறு முதலியவற்றுக்கு ஸ்வாஸஹரி ப்ளெயின் (நீலப்பாக்கிங்) சிறந்தது.

சிவப்பு பாக்கிங் உள்ள ஸ்வாஸஹரி காம்பௌண்ட் நீடித்த கடுமையான வியாதிகளை குணப்படுத்தும்.

3, 6, 12 அவுன்ஸ் ஸைஸ்களில் கிடைக்கும். விலை முறையே ரூ. 3-6-0 ரூ. 5-12-0, ரூ. 10-0-0. எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

Customers are requested to Communicate in English

ஆஸ்த்மா, சுவாஸாசய நோய்களுக்கு டாக்டர்கள் விதிப்பது



புரோஹித ஸ்வாஸஹரி

DR. PUROHIT PHARMACY, KOLHAPUR.

சிலையில் வடித்து, மொத்தத்தில் மற்றப் பெண்களைவிடக் கவர்ச்சியான முகம் படைத்த ஒரு பெண் உருவத்தைப் பதினைந்தாம் நூற்றுண்டில் செய்யக் கூடியவாறு அப்படிஎன்னஅதிசயமான சக்தி அந்தச்சிற்பியினிடம் இருந்திருக்கும்? நீங்களே சொல்லுங்கள். ஒரே மாதிரி உருவம் படைத்த இரண்டு பெண்கள்—ஒருத்தி பதினைந்தாம் நூற்றுண்டிலும், மற்றொருத்தி நம்முடைய காலத்திலும் வசிப்பதற்கும் அப்படி என்ன அதிசயம் நடந்ததோ? உண்மையில் நீனுவைப் போன்ற ஒரு பெண்ணைப் பார்த்தே சிற்பி அந்தச் சிலையை வடித்திருக்கிருன். முகம் மட்டுமா அந்தப் பெண்ணுக்கு நீனுவைப் போல வாய்த்திருந்தது? உண்மையில், அவளுடைய குணபாவங்களும், உள்ளமும் நீனுவுக்கிருந்த மாதிரியே இருந்திருக்கும் என்பது என் திட்டமான அபிப்பிராயம்.

“நான் இப்போது சொன்ன இந்த அனுபவம் என் வாழ்க்கையையே அடியோடு மாற்றி விட்டது. இதுவரைக்கும் நான் எவ்வளவு மோசமான முறையில் வாழ்க்கையில் நடந்து வந்தேன் என்பதும் எவ்வளவு படுகேவலமான நிலையில் இருந்தேன் என்பதும் எனக்கு அப்போதுதான் தெரிந்தது. நீனு கடவுளால் அனுப்பப் பெற்ற கந்தர்வ நங்கை என்பதை இப்போது நான் அறிந்துகொண்டேன். ஆனுல், இந்தப் பெருமை எனக்கு முன்னுல் தெரியாமல் போய்விட்டது. அந்த அறியாமையினுல் ஏற்பட்ட கஷ்டத்தை இப்போது ஈடுசெய்ய முடியுமா? ஆனுல், ஒன்று செய்தேன்: அபூர்வமான பழங்கால வஸ்துவின் சிதைவுற்ற சின்னங்களைப் பொறுக்கிச் சேகரிப்பதைப்போல, நீனுவைப் பற்றிய நினைவுகளை எல்லாம் பழையபடியும் ஞாபகத்துக்குக் கொண்டுவர முயன்றேன். அந்தப்பழைய ஞாபகச் சின்னங்களும்தான் எப்படி அபூர்வமாக அருகிப் போய்விட்டன! எவ்வளவு முயன்றும், பரிபூரணமாக என் முயற்சிக்கு வெற்றி கிடைக்கவில்லை. எல்லாம் சிதைவுற்றுத் துண்டு துக்காணியாகிவிட்டது. ஆனுலும் என் மனதின் ஆழத்திலிருந்து ஏதோ புதுமையைத் தோண்டி வெளியே எடுத்துவிட்டேன் என்ற எண்ணத்தில் எனக்கு என்ன பேரானந்தம் ஏற்பட்டது தெரியுமா? இதே நினைப்பில், நீனுவின் இதே பழைய ஞாபகத்தில், நான் நாள் முழுவதையும் போக்கி வந்தேன். இதனுல் ஜனங்களெல்லாம் என்னைப் பார்த்துச் சிரித்தார்கள். ஆனுல் என்னைப் பொறுத்த மட்டிலும் நான் சந்தோஷமாகத்தான் இருந்து வந்தேன்.

“இப்போது எனக்கு மிகவும் தள்ளாத வயதாய்விட்டபடியால் பழையபடியும் புனர் வாழ்வு நடத்துவதற்கு இயலவில்லை. ஆனுலும், கேவலமான சிந்தனைகளில் என் உள்ளம் ஈடுபடுவதையும், என் சகபாடிகளின் மீது கெட்ட எண்ணம் கொள்ளுவதையும், என்னைப் படைத்த ஆண்டவனையே தூஷிப்பதையும் விட்டொழித்து என் ஆத்மாவைப் பரிசுத்தப்படுத்திக் கொள்ள என்னுல் முடியாமல் போகவில்லை. ஆகவே, நீனுவை நினைந்துத் நினைத்து என்னைப் புனிதம் செய்துகொண்டேன்.

“மறுபடியும் அந்தப் பளிங்குச் சிலையைப் பார்க்க வேண்டுமென்று எனக்கு மட்டற்ற ஆவல் பிறந்தது. அந்தச் சிலை

இருந்த வீட்டின் பக்கமாகத் தினந்தோறும் மாலை நேரங்களில் போய் வட்டம் போட்டுக் கொண்டிருப்பேன். ஆனால், அந்தச் சிலையோ கண்ணில் படாமல் வெளி ஜன்னலை விட்டு வெகு தூரத்தில் உள்ளே தள்ளி வைக்கப்பட்டிருந்தது. இரவு நேரங்களை அந்த வீட்டின் முன்பாகவே கழிப்பேன். அந்த வீட்டில் இருக்கிறவர்கள் யார் யார் என்றும், அந்த வீட்டில் எந்தெந்தப் பக்கங்களில் எப்படி எப்படி அறைகள் இருக்கின்றன என்றும் எனக்குத் தெரியும். அத்துடன் அந்த வீட்டு வேலைக்காரன் ஒருவனையும் சிநேகம் பிடித்துவிட்டேன். ஆனால் கோடை காலம் வந்ததும், வீட்டு எஜமானி கிராமாந்தரத்துக்குப் போய்விட்டாள். அப்புறம் அந்தச் சிலையைப் பார்க்க வேண்டும் என்ற என் ஆவலைத் தணிக்க முடியாமல் போய்விட்டது. நீனுவின் உருவச் சிலையை மறுபடியும் ஒரு தடவை பார்த்து விட்டால் பழைய ஞாபகங்கள் எல்லாம் திடீரென்று நினைவுக்கு வந்துவிடும் என்றும், அதுவே என் வாழ்வின் ஒரே பேரின்பம் என்றும் எண்ணினேன். ஆகவே அந்தச் சிலையை உள்ளே போய்ப் பார்த்துவிடுவது என்று தீர்மானித்தேன். அந்தக் காரியத்தைச் செய்ததற்காகவே இப்போது எனக்குச் சிறைத் தண்டனை கிடைத்திருக்கிறது. வீட்டின் ஹாலில் வைத்து என்னைப் பிடித்துக்கொண்டார்கள். அவர்களிடமிருந்து நான் தப்பிக்க முடியாமல் போய்விட்டது என்பதைச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. பூட்டுக்காரன் என்று பாசாங்கு செய்து நான் வீட்டுக்குள் நுழைந்ததாகவும், வீட்டின் அருகாமையில் நான் அடிக்கடி சுற்றி வந்தேன் என்பதும், நான் ஒரு பிச்சைக்காரன் என்பதும், வீட்டின் பூட்டுக்களை நான் உடைத்தேன் என்பதும் குற்ற விசாரணையின் போது வெளிப்பட்டன......இவ்வளவுதான் என் கதை.''

“அதற்கென்ன மேல் கோர்ட்டுக்கு அப்பீல் பண்ணுவோம். உன்னை அங்கே விடுதலை செய்து விடுவார்கள்'' என்று நான் சொன்னேன்.

“அப்பீல் பண்ணுவது எதற்கு? எனக்குச் சிறைத் தண்டனை கிடைத்தது பற்றி யார் கவலைப்படுகிருர்கள்? எனக்காக ஜாமீன் கொடுக்கக் கூடியவர்கள் யார்? நீனுவைப் பற்றியே சிந்தனை செய்துகொண்டிருக்கும் நான் ஊர் மடத்தில் காலம் தள்ளினுல் என்ன, சிறையில் காலம் தள்ளினுல் என்ன? எல்லாம் ஒன்றுதானே?'' என்றுன் அந்தக் கிழவன்.

அவனுக்கு என்ன பதில் சொல்லுவது என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால், அவன் ‘பட்’டென்று தன் மங்கலான விழிகளால் என்னை ஏறிட்டுப் பார்த்துவிட்டுச் சொன்னதாவது:

“ஒரே ஒரு விஷயம்தான் என்னை உறுத்திக்கொண்டிருக்கிறது. அதாவது குடிப்பழக்கத்தால் பலவீனம் அடைந்த என் ஏழை உள்ளம்தான் அந்தப் பளிங்குச் சிலையைப் பார்க்கும்போது இந்தக் காதல் கதையை எல்லாம் சிருஷ்டித்ததே ஒழிய, நீனு என்ற எந்த ஒரு பெண்ணும் உயிரோடு இருந்தது கிடையாது என்றால் அதற்கு என்ன செய்வது?''

✲

கன்னட இலக்கியத்தின் மறுமலர்ச்சி

திருவேணி

நம் அண்டை நாடாகிய மைசூர் ராஜ்யத்தில் கன்னட இலக்கியம் எப்படி மறுமலர்ச்சி பெற்று வளர்ந்திருக்கிறது என்பதைக் கட்டுரை விளக்கமாகக் கூறுகிறது. திரிவேணிப் பத்திரிகையின் இரண்டு இதழ்களில் வெளிவந்த இரு கட்டுரைகளை ஆதாரமாகக்கொண்டு எழுதப்பெற்றது.

பல நூறு ஆண்டுகளாக தென்னாட்டில் வழங்கி வந்த மொழிகளில் கன்னடமும் ஒன்று. அம்மொழியும் ஏனைய இந்திய மொழிகளைப்போல், வசன நடையிலும், கவிதைத்துறையிலும், சிறுகதை, நாவல் முதலியவற்றிலும் முற்போக்கடைந்திருக்கிறது. இந்தமறுமலர்ச்சிக்குக்காரணமாயிருந்தவற்றில் ஆங்கில மொழியும் ஒன்று என்பது மறுக்க முடியாதது. கன்னட மொழிக்கு புத்துணர்ச்சி ஊட்டியது நம் நாட்டில் தோன்றிய சுதந்திர இயக்கம்தான். வழக்கிலிருக்கிற வாழ விரும்புகிற மொழிகள் அனைத்துக்கும் மொழி பெயர்ப்புத் தேவை. இவ் விதிக்கு கன்னட மொழி விலக்கல்ல.

ஈஸ்வர சந்திர வித்தியாசாகர், பாபு பங்கிம் சந்திர சட்டர்ஜி முதலியவர்கள் எழுதிய நாவல்களை, பி. வெங்கடாச்சார் மொழிபெயர்க்கத் துவங்கியதே கன்னட இலக்கியத்தின் புதிய சகாப்தத்தின் தொடக்கம் எனலாம். வெங்கடாச்சாரின் மொழிபெயர்ப்பு நாவல்கள் அனைத்தும் மிக எளிய முறையில் அவரே எழுதியவைபோன்றே தோன்றுகின்றன. மொழிபெயர்ப்பு போல காணப்படவில்லை.

அவருடைய எழுத்து வேகம் போற்றத் தக்கது; தாமே, படிப்பவர்களுக்கு நேர்முகமாக இருந்து கதை சொல்லுவதைப் போல எழுதுவதால், சலிப்புத் தோன்றாமல் படித்து அனுபவிக்கிறார்கள் வாசகர்கள். பிற மொழிகளினின்றும் நாவல்கள் மொழி பெயர்க்கும் முயற்சி சி. வாசுதேவய்யாவிடமும் காணலாம். இவர் எளிய நடையில் கலப்பற்ற கன்னட மொழியில் எழுதுவார். மராத்தி மொழியிலுள்ள நாவல்களைப் பின்பற்றியும் கன்னட எழுத்தாளர்கள் நாவல்கள் எழுதியுள்ளார்கள். அவர்களில் சிறப்பாக கலகநாத் என்பவரைச் சொல்லலாம். இவருடைய நடையில், வடக்குக் கன்னட தேசத்தில் வழங்கும் பேச்சு நடையாகிய 'தார்வார் கன்னடா' அதிகமாக உபயோகிக்கப்பட்டிருக்கிறது.

எம். எஸ். புத்தண்ணா எழுதிய நாவல்கள், குடும்ப விவகாரங்களை அடிப்படையாகக் கொண்டவை. சாதாரணப் பேச்சு வழக்கு நடையையே பின்பற்றி இவர் எழுதியுள்ளார். நடுத்தரக் குடும்பங்களை அப்படியே தத்ரூபமாகப் படம் பிடித்துக் காட்டுவனவாக இவருடைய நாவல்கள் அமைந்திருக்கும்.

“ஆனால், கன்னட மொழியில் நாவல்களும் அதிகமாக இல்லை; நாவல் ஆசிரியர்கள் என்று சொல்லக்கூட அங்கு ஒருவருமில்லை” என்று ஒருவர் அபிப்பிராயப்படுகிறார். இன்று கன்னடியர்களிடையே சிறந்த நாவ-

லாசிரியர்கள் என்று போற்றப் படுகிறவர்கள், கரன்த், கே. வி. புட்டப்பா, ஏ. என். கிருஷ்ண ராவ், கோகாக், ஜாகிர்தார், பெட்டாகிரி, முகளி, எச். பி. ஜோஷி, தேவுடு முதலியோர் ஆவர்.

இன்று மக்களால் வரவேற்கப் பட்டு, பெரும்பாலும் படித் தனுபவிக்கப்படுவது சிறு கதை தான். சிறு கதைகளில்தான் ஆசிரியன் தன் கருத்துக்களைத் தெளிவாகக் கதை உருவத்தில் சாதாரண மக்கள் படித்துப் புரிந்துகொள்ளும் வகையில் எழுதலாம்.

நாவல்கள் தோன்றியதுபோல சிறு கதைகள் மொழிபெயர்ப் பில் தோன்றவில்லை. இந்தத் துறையில் பிரசித்திபெற்ற எழுத் தாளர் மாஸ்தி வெங்கடேச ஐயங்கார் ஆவார். இவரையே கன்னடச் சிறு கதை இயக்கத் தின் தந்தை எனலாம். கதை களில் இன்ப ரசம் ததும்ப ஹாஸ் யக் குறிப்புகளுடன் இவர் கதை எழுதும் பாணியே தனி. சிறு கதைக்கு என்று ஒரு சில கோட் பாடுகள் வேண்டும். இந்தச் சம் பவங்களைப்பற்றி எழுத வேண் டும், கட்டுக்கோப்பு இப்படி இருக்க வேண்டும் என்று சில வரையறைகளை ஏற்படுத்தி அதற்கு அடங்கித்தான் கதை எழுத வேண்டும் என்பதைவிட்டு வாழ்க்கையில் உள்ள பல பொருள்களையும், சம்பவங்களை யும் வைத்துச் சுவையுடன் கதை எழுதும் திறம் பெற்றவர் இவர். கன்னட மொழியில் கதைகளில் பெரும்பாலானவை இவரால் எழுதப்பட்டவையே.

சி. கே. வெங்கடராமையா தம் சிறு கதைகளில் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளைக் குறித்தும் அவற்றைத் தீர்க்கும் முறைகளை அறிவுறுத்தியும் எழுதியுள்ளார். ஏ. சீதாராமன் காதற் கதை எழுதுவதில் நிகரற்றவர். சம்பவங் களை விளக்கிக் காட்டுவதிலும், கதா பாத்திரங்களைத் திறம்படச் சித்தரிப்பதிலும் இவர் கைதேர்ந் தவர். வாழ்க்கைச் சித்திரத்தைச் சுவை குன்றாமல், அன்றாட ஹாஸ் யச் சம்பவங்களையும், உலகத்தின் ஒரு தனிப் போக்கையும் பற்றி தனக்கெனப் படைத்துக் கொண்டதனி நடையில் எழுது கிறார் ஏ. சீதாராமன். இப்பொழுது தோன்றியுள்ள சிறு கதை எழுத் தாளர்கள் சமூகச் சீர்திருத்தத் தையே முக்கிய நோக்கமாகக் கொண்டு எழுதுகின்றனர். சாதா ரண மனிதனின் வாழ்க்கையை வர்ணிக்கும் கதைகள், சாதாரண மனிதன் முன்னேற்றத்துக்கான வழிகளையும் கூறுகின்றன. தொன்றுதொட்டு சமூகத்தைக் கெடுக்கும் மூட நம்பிக்கைகளைக் களைந்தெறிவதிலும் சிறு கதை எழுத்தாளர்கள் முனைந்து நிற்கி றார்கள். சமீப காலத்தில் கன் னடக் கதைகளுக்கென்றே ஒரு மாதப் பத்திரிகை வெளிவரு கிறது.

சிறு கதை இனத்தைச் சேர்ந்த இலக்கியக் கட்டுரைகள் அவ்வள வாக முன்னேறவில்லை. இதற்குக் காரணம் கன்னட எழுத்தாளர் களின் அசிரத்தையேதான். கட் டுரையாளர்களில் சிறப்பாக சீதாராமய்யா, கோரூர் ராமசாமி அய்யங்கார், ஏ. என், மூர்த்தி ராவ், என். கே. குல்கர்னி, கஸ் தூரி, ஹோய்சாலா, ரசி, கல்லூர், ராமானந்த், பி. டி. நரசிம்மாச் சாரியார் முதலியோரைக் குறிப் பிடலாம்.

சிறு கதைகள் கன்னட மொழியில் முன்னேற்றமடைந்

திருப்பதுபோல கவிதைகளும் மறுமலர்ச்சி யடைந்திருக்கின்றன. கன்னட மறுமலர்ச்சிக் கவிதையின் தந்தை என்று பி. எம். ஸ்ரீகாந்த்தையாவைச் சொல்லலாம்.

பழங்காலச் செய்யுள் யாப்பு முறைகளைவிட்டு நவீன முறையைக் கையாண்ட கவி ஸ்ரீகாந்த்தையாதான். 'அசுவத்தாமன்' என்ற கவிதையே இதற்குத் தக்க சான்று.

கன்னடப் பண்பு குறையாமல், ஆங்கிலக் கவிதைகளை அவற்றிலுள்ள சுவை குன்றாமல், அப்படியே பொருளையும் உணர்ச்சியையும் பெயர்த்து வைக்கும் திறம் படைத்தவர் இவர். இவருடைய சீடரான புட்டப்பாவை ஒரு பிறவிக் கவி என்று சொல்லலாம். இவர் எழுதும் கவிதைகள் தங்குதடை யின்றி செல்லுகின்றன.

பிரௌனிங் எழுதிய ஹேமலின் குழல் வாசிப்பன் என்ற கவிதையை மிக நன்றாக மொழி பெயர்த்திருக்கிறார்.

நிவேதனா என்னும் கவிதைத் தொகுப்பில், இவர் மைசூர் நகரத்திலுள்ள அழகிய பகுதிகளைப் பற்றியும் புகழ்பெற்ற பாகங்களைப் பற்றியும் அழகாக வர்ணித்திருக்கிறார்.

தெலுங்குக் கவிதைகளில் சிறப்பாக வழங்கும் 'சீசாபாடியா' என்னும் யாப்பு முறையைக் கன்னடக் கவிதைகளில் கையாளுபவர் இவர் ஒருவர் தான். சிறந்த சிறுகதை எழுத்தாளராகிய மாஸ்தி வெங்கடேச ஐயங்கார் கவிதைகள் புனைவதிலும் முன்னணியில் இருக்கிறார். வேதாந்த தத்துவம் நிறைந்த, சாமன்யருக்குப் புரியாத, விஷயங்கள் நிறைந்த கவிதைகள் எழுதுவதி லிருந்து, குழந்தைப் பாட்டு எழுதுவதுவரை இவருக்கு நிகர் இவர்தான். வி. சீத்தாராமய்யா கவிஞரா யிருப்பதோடு பாடகராகவும் விளங்குகிறார். இவர் யாத்த பாடல்கள் இசையோடு பாட வெகு நன்றாக அமைந்துள்ளன. மனித உள்ளத்தைத் தொடும்படியான கவிதை பாடும் திறம்பெற்ற இவருடைய கவிதைகளில் செயற்கை வர்ணனைகள் பரவிக் கிடக்கின்றன என்று சிலர் அபிப்பிராயப்படுகின்றனர். 'சித்தார்த்தரின் துறவு' என்ற கவிதை கே. வெங்கடப்பா எழுதிய ஒன்றின் தழுவல் என்று அபிப்பிராயப் படுகின்றனர். தென் கன்னட நாட்டின் தலை சிறந்த கவியாகிய சங்கரபட்டா பல கவிதைகள் எழுதியிருக்கிறார். இவர் பல மொழிகளைப் படித்தவர். உலகப் பிரசித்திபெற்ற உமார்க்காயத்தை இவர் கன்னட மொழியில் எழுதியுள்ளார். தத்தாத்திரேயா பென்ட்ரே என்னும் கவி, தேசிய இயக்கத்தைப் பற்றிப் பல பாடல்கள் பாடியுள்ளார். மேலை நாட்டுக் கவிதைகளுக்குச் சமானமாகப் பல பாடல்கள் இயற்றியுள்ளார். தானை எண்ணும் எண்ணங்களை அப்படியே விறுவிறுப்பான நடையில் ஆவேசத்துடன்பாடும் திறம் பெற்றவர். கோகாக், முகலி, நரசிம்மாச்சார், ராஜரத்தினம், நரசிம்ம சுவாமி போன்றவர்களும் கன்னடக் கவிதைகளுக்குத் தம்மால் இயன்ற அளவு சேவை செய்துள்ளனர்.

கன்னட இலக்கிய மறுமலர்ச்சியின் புது உறுப்பு நாடகம் தான். இப் புத்துணர்ச்சி பிறக்குமுன் கன்னட மொழி

யில் நாடகங்கள் தோன்றவே இல்லை. கன்னட நாடகங்களை மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம்: சமூக நாடகங்கள்; சரித்திர சம்பந்தமான நாடகங்கள்; இதிகாச புராண சம்பவங்களை அடிப்படையாக வைத்து இயற்றப்படும் நாடகங்கள். முதற் பிரிவாகிய சமூக நாடகங்களின் தந்தை டி. பி. கைலாசம், எனலாம். சமூகச் சிக்கல்களை அலசி, அவற்றைத் தீர்க்க இவர் சொல்லும் வழிகளும் போற்றற்குரியன. பிரச்னைகளை வாசர்களே தீர்க்க விட்டுவிடும் மேலை நாட்டுப் பழக்கத்தைப் பின்பற்றி இவரும் நாடகங்கள் எழுதுகிறார். சமூகச் சீர்திருத்தத்தை முக்கிய நோக்கமாகக்கொண்டு கார சாரமாக எழுதுவதில் பெயர் போனவர்களில் ஆர். வி. ஜாகிர்தாரும் ஒருவர். சமூகக் கட்டுப்பாட்டை ஏளனம் செய்து, அதைத் தகர்த்தெறியும் வழிகளையும் விறுவிறுப்பான நடையில், எழுதுவதில் புகழ்பெற்றவர்.

மாஸ்தி வெங்கடேச ஐயங்கார் எழுதியுள்ள 'நம்மசமாஜா' என்னும் நாடகத்தில், ஆசிரியர் மேலை நாட்டுக் கெட்ட பழக்க வழக்கங்களைக் கண்மூடித் தனமாக மேற்கொள்ளுவதினால் உண்டாகும் தீமைகளை எடுத்துரைத்து, அவற்றினால் நம்முடைய கலாச்சாரம் எவ்வளவு தூரம் பாதிக்கப்படுகிறது என்பதையும் விளக்கிக் காட்டுகிறார்.

கே. வி. புட்டப்பா எழுதிய ஜலகாரா என்னும் சீர்திருத்த நாடகத்தில், தீண்டாமை ஒழிப்பின் அவசியத்தையும், மேல்சாதியினரின் அசம்பாவிதமான அடக்கு முறையைப்பற்றியும் தெளிவாக படிப்பவர் மனத்தில் பதியும்படி எழுதியுள்ளார்.

நாகரிகா என்ற நாடகத்தில் எம். ஆர். சீனிவாசமூர்த்தி, தொழிலின் மேம்பாட்டை எடுத்தோதுகின்றார். சமூக நாடகங்கள் எழுதுவதில் சிறப்பாகக் கரந்த், ஏ. என். கிருஷ்ணராவ் முதலியோரைக் குறிப்பிடலாம். சரித்திர சம்பந்தமான நாடகங்களில் மிகச் சிறந்தன என்று சொல்லுவதற்கு அவ்வளவாக ஒன்றுமில்லை. குண்டப்பா, மாஸ்தி முதலியோர் இந்தத் துறையிலும் சற்று முன்னேறியிருக்கின்றனர். பதினெட்டாம் நூற்றாண்டில் மைசூரில் நடந்த அரசியல் சண்டை சச்சரவுகளை வைத்து எழுதப்பெற்ற விகத விக்கிரமராயா என்பது குறிப்பிடத்தக்கது. மேலை நாட்டுக் கதையாகிய ஏஜாக்ஸைப் பின்பற்றிக் கன்னட மொழியில் பி. எம். ஸ்ரீகாந்தையா எழுதியிருக்கிறார். புராண இதிகாசக் கதைகளைப் பின்பற்றிக் கன்னட நாடகங்கள் வெளிவந்திருக்கின்றன. அவை புராண இதிகாசப் பாத்திரங்களைத் தவறாகச் சித்தரித்தும் பழைய கதையினின்றும் பெரிதும் வேறுபட்டும் இருக்கின்றன.

காலத்துக்கேற்ப, மேலைநாட்டு எழுத்தாளர்களாகிய இப்சன், ஹாப்பட்மான், கால்ஸ்வொர்தி, பெர்னார்ட்ஷா, சின்ஜ, பிரீக்ஸ், பிரண்டெல்லோ, மாலியர், செகாவ், டால்ஸ்டாய் போன்றவர்களுடைய நாடகங்களையும் கன்னடத்தில் மொழிபெயர்த்துள்ளனர்.

கன்னட இலக்கியத்தில் ஓரங்க நாடகங்களும் இடம் பெற்றிருக்கின்றன. ஓரங்க நாடகாசிரியர்களாகிய பென்டர், ஜாகிர்தார், காந்த், கோகாக், முகலி, கிருஷ்ணராவ் 'க்ஷிராசாகரா,'

நாகராஜராவ் முதலியோரை இங்கே குறிப்பிடலாம்.

ஓர் இலக்கியத்தின் வளர்ச்சியை அளவிட்டுக் கூறுவது, அம் மொழியி லுள்ள விமர்சன இலக்கியமென்று கூறலாம். விமர்சன இலக்கியம் கன்னட மொழியில் இல்லை. இப்பொழுது தான் மெள்ள மெள்ளத்தலை எடுக்கத் தொடங்கியுள்ளது. இந்தத் துறையிலும், குண்டப்பா, மாஸ்தி, பென்டரே போன்றவர்கள்தான் முன்னணியில் நிற்கிறார்கள்.

எம். ஆர். ஸ்ரீனிவாசமூர்த்தி, திவாகர், சி. கே. வெங்கடராமையா, வெங்கண்ணய்யா, ஏ. ஆர். கிருஷ்ண சாஸ்திரி, எஸ். வி. ரங்கண்ண முதலியோர், விமர்சன இலக்கியத்தை வளர்க்க அரும்பாடுபட்டு ஆராய்ச்சிகள் செய்து கன்னட இலக்கியத்தைப் பாதுகாக்கும் அரும் பணியை மேற்கொண் டுள்ளனர்.

விமர்சனத்துக்கு உயிர்நாடி நேர்மை. நேர்மையோடு, விருப்பு வெறுப்பின்றி நூல்களில் உள்ள குற்றங் குறைகளை எடுத்துச் சொல்லுவது விமர்சகனுடைய மகத்தான பொறுப்பு. இம்முறையினுல் தான் எழுத்தாளர்களும் தங்களுடைய குறைகளை நீக்கி, நல்ல முறையில் புத்தகங்கள் எழுதுவார்கள். இம்மாதிரி புத்தகங்கள்தான் மொழியை வளர்க்கும் சக்தி வாய்ந்தவை என்பது சொல்லாமலே விளங்கும்.

மொழி வளர்ச்சிக்கு அறிஞர்கள் எழுதும் புத்தகங்களே யல்லாமல், அன்றாட நிகழ்ச்சிகளைக் குறிக்கும் தினசரித் தாள்களும் முயல வேண்டும். தினசரித் தாள்கள் பேசசு நடையையே பெரிதும் கையாளுகின்றன. பேச்சு நடையையும் வலி பெற்று இயங்குமாறு செய்தல்வேண்டும். புத்தகம் படிக்கும் வழக்கம் இல்லாதவரும் தினசரித் தாள்கள் படிக்கின்றனர். ஆகவே தினசரித்தாள்கள் செய்திகளைத் தெரிவிக்கும் தாள்களாக மட்டுமன்றி மொழி வளர்க்கும் சாதனங்களாகவும் விளங்க வேண்டும். கன்னடத்திலுள்ள வாரப் பதிப்புகளும், மாத சஞ்சிகைகளும் கன்னட மொழி வளர்ச்சிக்கு அடிகோலியுள்ளன. பிரபுத்த கர்னுடகா, கன்னட சாஹித்திய பரிஷத் பத்திரிகா, ஜய கர்னுடகா, ஜீவன, ஜயந்தி, சிவானுப்வா முதலிய பத்திரிகைகள் கன்னட எழுத்துலகத்தில் பெரும் சேவை செய்துள்ளன.

இன்று கன்னட நாட்டில் உள்ள அனைவரும் முன்னேற்றத்தில் முனைந்துநிற்கிறார்கள். அரசியல், மொழி, மதம் முதலியவற்றில் ஒருங்கே முன்னேற வேண்டும் என்னும் எண்ணம் மக்கள் மனத்தில் இடம்பெற்றுவிட்டது. மேலை நாடுகளை ஒரு முன்மாதிரி வைத்துக்கொண்டு, இன்றைய கன்னட இளைஞர்கள் மேற் செல்லுவார்கள் என்பது திண்ணம்

இதற்குக் கன்னட எழுத்துலகமும், பத்திரிகை உலகமும் பெரும் பணியாற்றும் என்பதில் ஐயமில்லை.

✲

பழங்காலப் பேர்வழி !

நான் ஒரு பழங்காலப் பேர்வழி! இன்னும் நான் என் கால்களாலேயே நாட்டியமாடுகிறேன்!

—ஒரு கிழவர்

புத்தக உலகம்

உபகுப்தர்: [ஆசிரியர்: சு. குருசாமி. கிடைக்குமிடம்: அருணோதய நிலையம், வேலூர். விலை ரூபாய் 2.]

இந்தப் புத்தகத்தின் முதல் நாடகத்தின் ஆதார விஷயமாகிய உபகுப்தர் கதையைத் தமிழ் நாட்டில் பலரும் எழுதியிருக்கிறார்கள். இரண்டாவது நாடகமாகிய 'பாரியின் பறி' பாரி வள்ளல் ஔவையார்பால் கொண்ட மதிப்பையும் அன்பையும் காண்பிக்கும் நோக்கத்துடன் எழுதப்பட்டதாகும். இந்த இரண்டு நாடகங்களையும் வெற்றி என்று சொல்ல முடியாது; உணர்ச்சியற்ற வசனமாகத்தான் இருக்கின்றன. தவிரவும், பாரி, ஔவையார் போன்ற இரண்டு உயர்ந்த பாத்திரங்கள், ஹாஸ்யமாகப் பேசிக் கொண்டாலும் பாஷை கௌரவமாக இருக்க வேண்டும். ஆனால் இங்கே இந்த இருவரும் பேசிக் கொள்ளுவது சிறுபிள்ளைத்தனத்தையே பிரதிபலிக்கிறது.

நடைமுறை வாழ்வைச் சித்திரிக்கும் மற்ற ஐந்து நாடகங்களும் தத்ரூபமாகக் கண்முன் நடக்கிற மாதிரி அவ்வளவு இயற்கையாக எழுதப்பட் டிருக்கின்றன; படிப்பதற்கும் மிகவும் ரசமாக இருக்கின்றன. ஆசிரியருடைய இயல்பான நகைச்சுவை பொருத்தமான சந்தர்ப்பங்களில் இடம் பெற்று விளங்குகிறது.

இத்துடன் மற்றொரு முக்கியமான விஷயம்: அதாவது, ஆசிரியர் சிறுகதையை நினைத்துக்கொண்டே நாடகத்தை எழுதுகிறார் என்பதை இரண்டொரு இடங்கள் சுட்டிக் காட்டுகின்றன: 'உபகுப்தர்' நாடகத்தில் ராதா என்ற பாத்திரம் ஓரிடத்தில் தன் மனதுக்குள்ளேயே சொல்லிக் கொள்ளுவதைச் சம்பாஷணையைப் போல எழுதியிருக்கிறார். தனக்குள்ளேயே நாடக பாத்திரம் சொல்லிக் கொள்ளுவது, சபைக்குக் கேட்குமா? 'பிள்ளையா பூதமா?' என்ற நாடகத்தில் சம்பாஷணையாக இல்லாத ஓரிடத்தில், அதாவது நடிகர்களின் செயலை அப்படியே குறிப்பிட வேண்டிய ஓரிடத்தில், 'இத்தாலியின் எதிர்ப்பைப் போலாகிவிடும் என்று அவன் எதிர்பார்க்கவில்லை போலும்!' என்று அலங்காரமாக ஆசிரியர் உவமை வைத்துச் சொல்லுவதைப் புத்தகத்தில் அனுபவித்துப் படிக்கலாம். நாடகத்தில் அதற்கு இடம் ஏது? உவமை அழகுடன் எழுதக்கூடிய இடம் அல்ல அது. படிப்பதற்காக எழுதினாலும் நடிப்பதற்காக எழுதினாலும் நாடகப்பாங்கிலேயே சிறுகதைப் பண்பை அடியோடு மறந்துவிட்டு ஒரு நாடகத்தை எழுத வேண்டும்.

மதிப்புரைக்கு இரண்டு இரண்டு புத்தகங்கள் அனுப்ப வேண்டும்

வீர சிவாஜி: [ஆசிரியர்: எம். எஸ். சுப்பிரமணிய ஐயர். கிடைக்குமிடம், மங்கள நூலகம், நுங்கம்பாக்கம், சென்னை விலை ரூபாய் 2]

மகாராஷ்டிர வீரர் சிவாஜியைப் பற்றிக் கேள்விப்படாதவர் யாரும் இருக்க முடியாது. ஆனால், சிவாஜியின் சரித்திரத்தை வீரம் செறிந்த தமிழில் 156 பக்கங்கள் கொண்ட விரிவான புத்தகத்தின் மூலம் வாசிக்கும் சந்தர்ப்பத்தை, தம் புத்தகத்தின் மூலம் உண்டாக்கிக் கொடுத்திருக்கிறார், ஸ்ரீ எம். எஸ். சுப்பிரமணிய ஐயர். புத்தகத்தின் அச்சு, அமைப்பு எல்லாம் அழகாகவே இருக்கின்றன.

காதல் பிறந்த கதை: [ஆசிரியர்: கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை, கிடைக்குமிடம்: அருள் நிலையம் ராமச்சந்திரபுரம், திருச்சி ஜில்லா. விலை ரூபாய் 2-10-0]

பற்பல கலைஞர்களைப் பாராட்டிப் பாடப்பட்ட பாடல்களும், வேறு சில தனிப் பாடல்களும், பத்து இசைப்

பாடல்களும் அடங்கிய நூல். எவ்வளவு பொருள் செறிந்த கலையானாலும், அந்தக் கலை தோன்றிய நாட்டின் இதயப் பண்பு அதில் ஒலி செய்யா விட்டால், அந்தக் கலை, ரசிகர்களின் இதயத்தை ஆட்கொள்ளாது; அத்துடன் அந்தக் கலையின் நோக்கமும் நிறைவேருது. கவிமணியின் பாடல்களில் எல்லாம் பூர்வமான தமிழ்ப் பண்பு ஜீவ சம்பந்தமாகப் பொருந்திக் கிடக்கும். தமிழ் இதயத்திலிருந்து வெளி வரும் பாடல்கள் அவை. எல்லோரும் அவசியம் படிக்க வேண்டிய அப்படிப்பட்ட சிறந்த பாடல்களடங்கிய இந்நூல் முழுவதும் வழ வழுப்பான ஆர்ட் காகிதத்தில் அச்சிடப்பட்டுள்ளது. ஆனல் கலர்ப் படங்களைக் கண்ட கண்ட இடத்தில் பொறித்திருப்பது புத்தகத்துக்கு அழகு செய்யாததோடு, புத்தகத்தின் அழகைக் கெடுத்தும் விட்டிருக்கிறது. 'எங்கும் நிறைந்தவன்' என்ற சாஹித்தியத்தின் இராகம் லலிதாங்கி என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது லதாங்கி என்று இருக்க வேண்டும் எனக் கருதுகிறேம். லதாங்கிதான் முக்கியமான பழைய மேளகர்த்தா ராகம்.

அறிஞர் செய்யித்: [ஆசிரியர்: ர. பா. மு. கனி. கிடைக்குமிடம்: வளர்பிறைப் பதிப்பகம், காரைக்கால். விலை அணு 10]

அலிகார் முஸ்லிம் சர்வகலாசாலையை ஸ்தாபித்த உழைப்பாளியின் சரிதம் இது. செய்யித், மெய் வருத்தம் பாராமல், பசி நோக்காமல் விடா முயற்சியோடு, முஸ்லிம் சமூக நன்மைக்காக உழைத்தவர்; கற்றறிந்த அறிஞர். பிரிட்டிஷ் ஆட்சியை அடியோடு வெறுத்து எழுதிய சுதந்திர புருஷர். இவருடைய சரித்திரத்தை, எல்லாப் பொதுநல ஊழியர்களும் படிக்க வேண்டும். புத்தகத்தைத் தெளிந்த அழகான தமிழில் எழுதியிருக்கிருர் ஆசிரியர். புத்தகமும் குறைந்த விலையில் அழகாக வெளியிடப்பட்டுள்ளது.

ரோமாபுரி ராணிகள்: [ஆசிரியர்: சி. என். அண்ணுத்துரை. கிடைக்குமிடம்: திராவிடப் பண்ணை, தெப்பக்குளம், திருச்சி. விலை ரூபாய் 2-4-0]

ரோம சாம்ராஜ்யத்தின் ராஜ குடும்பங்களில் நடந்த விபசார நிகழ்ச்சிகளின் தொகுப்பு இந்தப் புத்தகம். இந்தப் புத்தகத்திஞல் ஏற்படும் நல்ல பலன் என்ன என்று யாரும் யோசிப்பது இயல்பு. இந்நூலை வெளியிட்ட பதிப்பகத்தாரின் பொது நோக்கம் திராவிடத்தின் மறுமலர்ச்சி. இந்தப் புத்தகத்தைப் பதிப்பித்ததின் நோக்கம் தமிழகம் ரோமாபுரி ராணிகளைக் 'கண்டு களிக்க' வென்றும் பதிப்புரையிலிருந்து அறிகிரேம். புத்தகத்தின் ஆசிரியர், "இந்த காமவல்லிகளின் கதைகள் சுவை மட்டுமல்ல, கருத்துக்கள் பல தெரிந்து கொள்ள உதவி செய்யும்," என்று குறிப்பிடுகிருர். விபசாரக் கதையை எழுதி உயர்ந்த தத்துவங்களைப் புலப்படுத்திய மேதாவிகள் பலருண்டு என்பது உண்மையே. அத்தகைய இடங்களில் விபசாரத்தைப் பொருளாகக் கொண்டு எழுதுவதை அனுமதித்தே தீர வேண்டும். ஆனல் ஆசிரியர் கூறுகிறபடி 'கருத்துக்கள் பல தெரிந்து' கொள்ளும் உயர்ந்த முறையில் இந்த நூல் எழுதப்படவே இல்லை. அவரே கூறுகிறபடி ஒரு வேளை சுவை யளிக்கக்கூடும்; அதாவது கலையம்சத்தைக் கவனிக்காத வாசகர்களுக்கு. இந்த விபசாரக் கதைகள் மூலம் திராவிடத்தில் எப்படி மறுமலர்ச்சியை உண்டாக்கமுடியும்? இந்த ரோமாபுரி விபசாரிகளைத் தமிழகம் கண்டு களிக்கவும் வேண்டுமா? பதிப்பாளர்கள் இதற்கு என்ன சொல்லுவார்களோ தெரியவில்லை. ஆசிரியர், ஒரு வாக்கியத்தை 'அ'வில் ஆரம்பித்தால்கடைசிவரை 'அ'விலும் 'க'வில் ஆரம்பித்தால் 'க'விலுமாக வசன இயல்புக்கு மாருக பெரும்பாலும் எழுதியிருப்பதும், பிராச மயமாகபுத்தகத்தின் வாசகங்களைக்கோத்திருப்பதும் விகாரமாக இருப்பதுடன், சொல்ல வேண்டிய விஷயத்தை நேரடியாகச் சொல்லாமல் சுற்றி வளைத்துக் கொண்டு சொல்லுகின்றன. இதனல் வாசகனுக்கு அலுப்பும், சங்கடமும்தான் ஏற்படுகின்றன.

ஒரு காலத்தில் சில பண்டிதர்கள் இப்படிப் பிராசம் போட்டுக் கல்லடுக் காகச் சொற்களை அடுக்கிப் பேசிய தைக் கண்டு மக்கள் வெறுத்தும், பரிகாசம் பண்ணியும் வரவே, அவர்கள் அந்தப் பிராசம் போடும் வழக்கத்தை அநேகமாக நிறுத்திவிட்டார்கள். இப்போது அந்த விகார ரூபம் அறிவாற்றலின் வடிவம் போலக் கிளம்பி இருப்பது மிகவும் விபரீதமாக இருக்கிறது. ஓர் உதாரணம் :

"ஜூலியா, பெரிய ஜாலக்காரி! சிங்காரி! சிரித்துச் சித்திரவதை செய்யும் சொகுசுக்காரி! வெறும் அலங்காரிமட்டுமல்ல, பலேகைகாரி! சாதுர்யமான பேச்சுக்காரி! சரசத்திற்கு அதிகாரி! ஆடவர் கூட்டத்திற்கே அவளோர் சிகாரி! அகஸ்டசின் மானத்தைக் கெடுத்த அபசாரி!"

ஆசிரியர் எழுதி யிருக்கும் இம்முறை, விபசாரியைக் கண்டிப்பது போலில்லாமல் மிகவும் குஷியாக ஏதோ வேடிக்கைபார்ப்பதுபோலவே ஒலிக்கிறது.

அடுத்தவன் மனைவி மீது காமுற்ற அகஸ்டஸ் என்ற மன்னனை ஓர் அத்தியாயத்தில் காமுகனைக் காட்டிவிட்டு, அடுத்த அத்தியாயத்தில் அவனையே 'உலகம் போற்றும் உயர்தர வீரன்' என்று ஆசிரியர் குறிப்பிடுகிறார். ஓர் அத்தியாயம் தாண்டியதும் எப்படி அவன் உலகம் போற்றும் உயர்தரத்தைப் பெற்றானே, தெரியவில்லை. பதிப்பாளர்களால் பெர்னார்ட்ஷாவின் பெயருக்குப்பின் குறிப்பிடப்படும் ஆசிரியர் பெர்னார்ட்ஷாவைப் போல இல்லாவிட்டாலும் சாதாரணமாகவாவது நல்ல புத்தகங்கள் எழுத முன் வந்தால் பயனுண்டு. புத்தகம் பார்வைக்கு அழகாக இருக்கிறது. ஆனால் பக்கம் தவறாமல் ஏராளமாக எழுத்துப் பிழைகள் இருக்கின்றன.

—கு. அ.

*88875

வந்தேமாதரம்! உ தேவி மீனாம்பிகை துணை ஜெய் ஹிந்த்!

எமது சபை தோன்றி 15 வருஷங்களுக்குப் பின்

மதுரைமா நகரில் எமது மகத்தான ஆரம்ப விழா!

14-9-'47 ஞாயிற்றுகிழமை மாலை 6-30 மணிக்கு

திருப்புகழ்மணி ஸ்ரீ T. M. கிருஷ்ணசாமி ஐயர்

தலைமையில் ஆரம்பமாகும்

35 வருஷமாக நாடகத்தின் மூலம் நற்பணியாற்றிவரும்

நாடக கலாநிதி, நாடகக் கலையரசு, நாடக கேசரி, சுதந்திர நாடக மணி

நவாப் T. S. ராஜமாணிக்கத்தின்

மதுரை தேவி பால விநோத சங்கீத சபையார்

மதுரை செல்லம் தியேட்டரில்

ஸ்ரீ முருகன்
திரு அவதாரமாகிய **குமார விஜயம்**

எனும் புதிய புண்ய நாடகத்தை பிரதிதினமும் நடத்துவார்கள்

இந்திய சுதந்திரோதய சின் என்றென்றும் உங்கள்

மனதை விட்டகலாதிருக்கும்

டிக்கட் வரியுள்பட :—
5-0-0 4-0-0 2-12-0 1-8-0 0-12-0

நவாப் T. S. ராஜமாணிக்கம்
உரிமையாளர்

புதிய இசைத்தட்டுகள்

ஆகஸ்டு 1947

ஸ்ரீமதி டி. எஸ். கோகிலம்

N. 18329

இந்தப்ரதாபமும்

கௌரிமனோஹரி - 2 பாகங்கள்

சங்கீத விதூஷிணி

ஸ்ரீமதி சுந்தரி தம்பி

N. 18330

க்ருபய பாலய

சாருகேஸி - 2 பாகங்கள்

சங்கீத பூபதி மஹாராஜபுரம்

விச்வநாத ஐயர்

N. 18838

உண்டேதிராமுடு-ஹரிகாம்போஜி

ஸீதம்ம மாயம்ம - வசந்த

"ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்"

கிராமபோன் கம்பெனி லிட்., டம்டம்-பம்பாய்-மதராஸ்-டில்லி-லாகூர்.

பாண்டியன் இன்ஷ்யூரன்ஸ்

கம்பெனி லிமிடெட்

(இந்தியாவில் ஸ்தாபிதம் 1933)

●

தலைமை ஆபீஸ்: மதுரை

●

சிறந்த சேவை செய்து வருகிறது.

நெருப்பு, மோட்டார் விபத்து

முதலிய

சகலவித இன்ஷ்யூரன்ஸ் திட்டங்கள்

மொத்த ஆஸ்திகள் ரூ. 62,00,000

கிளைகள்: பம்பாய், அகமதாபாத்,
கல்கத்தா, ராவல்பிண்டி.

●

பிரதம ஏஜெண்டுகள்:

ஏ. & எப். ஹார்வி லிமிடெட்

மதுரை Etc.



அக்டோபர்

2

காந்தியடிகளின் பிறந்த நாள்

கொத்தமங்கலம் சுப்பு பாடிய

காந்தி மகான் கதை

காங்கிரஸின் சரித்திரத்தை மையமாக வைத்து காந்தியடிகளின் வாழ்க்கை வரலாற்றை நாட்டுப் பாடல் வடிவத்தில் ஆசிரியர் பாடியிருக்கிறார்.

ரூபாய் ஐந்து — தபால் செலவு தனி

அக்டோபர் 15உ வரை முன்பணம் அனுப்புபவர்களுக்கு தபால் செலவில்லாமல் அனுப்பப்பெறும்.

சக்தி காரியாலயம்
சென்னை 14.

Edited, Printed and Published by Vai. Govindan at the Shakti Press Ltd.,
P. I.C. No. MS. 23, For Shakti Karyalayam Royapettah, Madras
P.I.C. No. MS. 202

ராஜ மோடியான சம்பத்து

ரத்தினாபரணங்களை அணிவது ராஜ மோடியான சம்பத்து. ஆபரணங்கள் அழகுமட்டுமா செ கின்றன ?

உலகில் எந்த நாட்டுக்குப் போனாலும் ஆபரணங் களின் பொருள் மதிப்பு மாறுவதில்லை. சென்றவி மெல்லாம் சிறப்புத்தான்! ஆபரணங்களைப்போன்ற சேமநிதி ஒன்று உண்டா ?

கடந்த ஐம்பது வருஷ காலமாக இந்தியாவிலும் பர்மாவிலும் பொது ஜனங்களுக்கு திருப்தி யளித்து வரும் எங்கள் ஆபரண வியாபாரம் நம்பிக்கைக்கு பெயர் பெற்றது. நாணயத்துக்கும் நீடித்த சௌந் தர்ய சம்பத்துக்கும் எடுத்துக் காட்டுகள் எங்கள் ஆபரணங்கள்.

ஸூராஜ்மல்ஸ்

313, எஸ்பிளநேட், மதராஸ்